# திருவெழுகூற்றிருக்கை

(தேர் வடிவில் அமைந்த சித்திரகவிகள்)

மூலம்—உரை—விளக்கப்படங்களுடன்

உரையாசிரியர்

பேராசிரியர், வித்வான் ஸ்ரீ C. ஜகந்நாதாசாரியர்,

M. A., (Hist.) M. A., (Tamil) L. T., P. O. L, Dip. in Geog.

முன்னாள் தமிழ்ப் பேராசிரியர், விவேகானந்தர் கல்லூரி, மயிலை,

U. G. C. பேராசிரியர்

பதிப்பு

அருள்மிகு அருணாசலேச்வரர் திருக்கோயில்,

திருவண்ணாமலை - 606 601

1982

முதற்பதிப்பு : 1982
பிரதிகள் : 2000
உரிமை பதிவு

விலை ரூ. 7-00

---

இந்நூலில் இணைக்கப்பெற்றுள்ள
விளக்கப் படங்கள் தயாரிப்பு,
வலையப்பேட்டை ரா. கிருஷ்ணன்,
முருகன் திருவருட்சங்கம்,
சென்னை–5

---

முகப்பு அட்டையில்
அண்ணாமலையார் திருத்தேர் திருவிழாக் காட்சி

---

அச்சிட்டோர் : ஜீவன் பிரஸ்,
படங்கள் – ரத்னா ஆப்செட் பிரிண்டர்ஸ்
திருவல்லிக்கேணி.

## மாண்புமிகு எம். ஜி. இராமச்சந்திரன்

முதல்வர், தமிழக அரசு

## மாண்புமிகு இராம. வீரப்பன்

செய்தி, அறநிலையத்துறை அமைச்சர், தமிழக அரசு

### திருவண்ணாமலை
### அருள்மிகு அருணாசலேச்வரர் திருக்கோயில்
### அறங்காவலர் குழு

| | |
|---|---|
| **எஸ். கண்ணன்** | தலைவர் |
| **என். சி. அருணாசலம்** | அறங்காவலர் |
| **சி. கிருஷ்ணமூர்த்தி** | ,, |
| **எம். எஸ். கோவிந்தராஜன்** | ,, |
| **சி. வேடியப்பன்** | ,, |

## இந்நூலில் . . . . .


அணிந்துரை

முகவுரை

**திருவெழுகூற்றிருக்கை**

நக்கீர தேவ நாயனுர் ... 5
மதுரை

திருஞானசம்பந்தர் ... 26
சீகாழி

திருமங்கையாழ்வார் ... 49
திருக்குடந்தை (கும்பகோணம்)

அருணகிரிநாதர் ... 67
சுவாமிமலை

ஸ்ரீ தண்டபாணி சுவாமிகள் ... 83
திருவல்லிக்கேணி

**பிற்சேர்க்கை**

தலக்குறிப்புகள் ... 94


**(விளக்கப் படங்கள் ஆங்காங்கே இணைக்கப்பெற்றுள்ளன)**

இராம. வீரப்பன்
செய்தி - அறநிலையத் துறை
அமைச்சர்

தலைமைச் செயலகம்
சென்னை-600 009
தேதி 19-4-1982

நமது தமிழ்மொழி, இலக்கண இலக்கிய வளங்கள் பெரிதும் நிறைந்தது. மற்ற மொழிகள் எல்லாம் எழுத்துக்கும் சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் வகுத்துள்ளன. ஆனால் நம் தமிழ்மொழியோ, உலகியற் பொருள்களையெல்லாம் அகம் புறம் என்று இரண்டாகப் பகுத்து, பொருளுக்குங்கூட இலக்கணம்கூறி மனிதகுல வாழ்க்கையின் மேம்பாட்டிற்கே வழிகாட்டியுள்ளது.

தமிழறிஞர்கள், கவிதையை ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்று நான்கு வகையாகப் பிரித்துள்ளனர்.

சித்திரக் கோடுகள் வரைந்து அவற்றில் எழுத்தையோ, சொல்லையோ எழுதி உருவாக்கப்படும் பாட்டு, சித்திரகவி எனப்படுகிறது.

திருஎழுகூற்றிருக்கை என்னும் அரிய இனிய சித்திர கவியினைத், திருஞானசம்பந்தர்-திருமங்கையாழ்வார்—நக்கீரதேவர்—அருணகிரிநாதர்- வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் என்னும் ஐந்து பெரும் தமிழ்ச் சான்றோர்கள் அழகுறப் பாடியுள்ளனர்.

சென்னை விவேகானந்தர் கல்லூரியின் முன்னாள் தமிழ்த்துறைத் தலைவரும், யு. ஜி. சி. பேராசிரியரும், நல்ல பல நூல்களை இயற்றியிருப்பவரும் ஆகிய

பேராசிரியர் வித்துவான் திரு, சி. ஜகந்நாதாசாரியார் அவர்கள், இந்நூலின்கண் தொகுக்கப் பெற்றிருக்கும் ஐந்து திருவெழுகூற்றிருக்கைச் சித்திர கவிகளுக்கும், சிறந்த முறையில் உரை எழுதி உதவியிருக்கின்றார் அவருடைய பணியினை மனமாரப் பாராட்டு கின்றேன்.

அருமையும் இனிமையும் அற்புதமும் அமைந்து விளங்கும் திருஎழுகூற்றிருக்கைப் பாடல்களை ஒருங்கே தொகுத்து அனைவரும் படித்துப் பயன் கொள்ளுமாறு செய்யும் பெருவிருப்புடன் திரு வண்ணாமலை அருணாசலேச்வரர் திருக்கோயிலின் சார்பில் வெளியிடுவது பற்றி மகிழ்ச்சியடை கின்றேன். இத்திருக்கோயிலின் அறங்காவலர் களுக்கு என்னுடைய அன்பார்ந்த மனம் நிறைந்த பாராட்டுதல்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இராம. வீரப்பன்.

யு. சுப்ரமணியன், இ.ஆ.ப
ஆணையர்

இந்து சமய அறநிலையத்துறை
சென்னை
14-4-82


இனிய நம் தமிழ் மொழியில் உள்ள நான்குவித கவி வகைகளில் ஒன்றான சித்திரகவி வகையைச் சார்ந்த 'திருஎழுகூற்றிருக்கை' என்னும் கவி அமைப்பு மிகவும் கவர்ச்சியானது. இத்திருஎழுகூற்றிருக்கையைத் தேர் வடிவில் அமைப்பது மரபு. இம்முறையில் அமைந்த திருஎழுகூற்றிருக்கையில் கவி பாடிய அருளாளர்கள் சிலர்தான் என்பதிலிருந்து இதன் சிறப்பும் பெருமையும் நன்கு விளங்கும்.

சென்னை திருவல்லிக்கேணி முருகன் திருவருட் சங்கத்தினர், அற்புதத் திருப்புகழ் பாடிய அருணகிரியாரின் ஒப்பற்ற, 'திருஎழுகூற்றிருக்கை'யை முதன் முதலில் சுவாமிமலை அருள்மிகு சுவாமிநாதசுவாமி திருக்கோயிலில் சலவைக் கல்லில் தேர்வடிவில் அமைத்தார்கள். தமிழ் இலக்கியத்தில் இவ்வகை நூதன பாடல்கள் இருப்பதை அன்று அறிந்தேன். இந்நிகழ்ச்சியைத் தொடர்ந்து, அழகான முறையில் பாடப் பெற்றுள்ள இப்பக்திப் பாடல்களைப் பொது மக்கள் அறிந்து கவிநயத்தை அனுபவிக்க வசதியாக மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் நக்கீரர் அருளிய திருஎழுகூற்றிருக்கையும், கும்பகோணம் அருள்மிகு சாரங்கபாணி சுவாமி திருக்கோயிலில் திருமங்கையாழ்வார் அருளிய திருஎழுகூற்றிருக்கையும் சலவைக் கல்லில் அமைக்கப் பெற்றுள்ளன. தமிழ்மொழியின் சமய இலக்கியச் சிறப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டாக உள்ள இப் பாடல்களுக்குத் தக்க விரிவுரையுடன் நூல்மூலமாகவும் பரப்புவதற்குச் சென்னை முருகன் திருவருட் சங்கத்தின் செயலாளர் நண்பர் திரு கிருஷ்ணனும். பேராசிரியர் திரு சி. ஜகந்நாதாசாரியார் அவர்களும்

ஊக்கமளித்தனர். சிறந்த புலமைமிக்க பேராசிரியர் திரு சி. ஜகந்நாதாசாரியார் அவர்களே இதற்கு உரை எழுதுவது மிகவும் பொருத்தமாகவிருக்கும் என்று உணர்ந்து இப்பணியை முடித்துத்தர வேண்டு மென்று அவர்களிடம் கேட்டுக் கொண்டதற் கிணங்க இத்தகைய அருமையான உரைநூலைப் பேராசிரியப் பெருந்தகை உருவாக்கியுள்ளார். அவர் களுக்கு இத்துறையின் நன்றி என்றுமுளது.

திருவண்ணுமலை அருள்மிகு அருணுசலேச்வரர் திருக்கோயிலில் அருணகிரிநாதர் அருளிய திருஎழு கூற்றிருக்கையைச் சலவைக்கல்லில் அமைத்து இந் நூலைச் சிறப்புற வெளியிடும் திருவண்ணுமலை திருக் கோயில் அறங்காவலர் குழுவினருக்கு எனது நன்றி யையும் பாராட்டுதலையும் தெரிவித்துக் கொள்கிறேன். அருணகிரிநாதர் அருளிச்செய்த திருஎழுகூற்றி ருக்கை சலவைக்கல்லில் அமைக்கப் பெற்றுத் திறக்கப்பெறும் நன்ஞளில் இந்நூல் வெளியிடப் படுவது தமிழக சமய வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சி யாகும். தமிழக மக்கள் இந்த அரிய நூலைப்படித்து உணர்ந்து இன்புறுவார்களாக.

யு. சுப்ரமணியன்.



அருள்மிகு அண்ணமலையார் திருக்கோயில்
இராஜகோபுரம்

உயரம் — 212 அடி



அருணகிரிநாதர்

அருள்மிகு அருணாசலேச்வரர் திருக்கோயில்

*திருவண்ணாமலை*

# முகவுரை

எப்போ தகத்து நினைவார்க் கிடரில்லை
கைப்போ தகத்தின் கழல்.

சான்றோர்களே !

தொன்மையாம் நம் தமிழ் மொழிக்கு அணி செய்வன பலவற்றுள் சித்திரகவி என்ற வகையும் ஒன்று. இது சித்திரத்தில் அமையும்படி சொற்களையும் அவற்றின் பரியாயங்களையும் அமைத்துப் பெரும் புலமை மிக்கவரால் பாடப்படுவது. நாகபந்தம், முரச பந்தம், சருப்பதோபத்திரம் போன்ற இன்னவற் றோடு திருவெழுகூற்றிருக்கை என்பதும் ஒன்று. இதன் இலக்கணம் நூலின் உரைத்தொடக்கத்துக் காண லாம். இது ஆசிரியப்பாவால் பாடப்படுவது. ரதபந் தத்தில் அமைவது. இந்த வகைச் சித்திர கவி பாடு வதில் மிகச் சிறந்தவராகக் கருதப்பட்ட நால்வர் களது பாடல்களும், அவற்றோடு வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் பாடலும் இந்நூலாக்கத் தில் இடம் பெறுகின்றன. அவற்றை ரதபந்தத்தில் அமைத்துக் காட்டியுள்ளோம். எண்முறை அமைந் துள்ள திறத்தை வியந்து பாராட்டாமல் இருக்க முடியாது. இந்தப் பாடல்களுக்குப் பதவுரையும், விசேடவுரையும் விரிவாக எழுதும்படி எனக்கு ஆணையிட்டனர், இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் திரு. U. சுப்ரமணியன் I. A. S. அவர்கள். இப் பெருந்தகை என்பால் பேரன்பு வைத்து என்னை இந்நற்றுறையில் ஈடுபடுத்தியமைக்கு எஞ் ஞான்றும் கடமைப்பட்டுள்ளேன்.

ஆலவாயைப் பற்றிய நக்கீரர் பாடலும், சீகாழி யைப் பற்றிய ஞானசம்பந்தர் பாடலும், திருக்குடந்

தையைப் பற்றிய திருமங்கை மன்னன் பாடலும், சுவாமி மலையைப் பற்றிய அருணகிரிநாதர் பாடலும், திருவல்லிக்கேணியைப் பற்றிய வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் பாடலும், ரதபந்தத் திலே அமைத்துச் சித்திரமாகவே இந்நூலில் காட்டப் பட்டுள்ளன. இவற்றுள் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் பாடல் நீங்கலாக ஏனைய நான்கினையும் அதே (ரதபந் தத்தில்) தேர்வடிவில் சலவைக் கல்லில் பொறித்து அமைத்து அக்கவிகளைப் பொதுமக்கள் படித்துத் தெரிந்து கொள்ள வேண்டும் என்ற பெருநோக்கோடு அறிந்து இந்து சமய அறநிலையத்துறை, தமிழக அரசு ஆற்றிவரும் இந் நற்பணி சாலப் பெரிதும் போற்றத்தக்கது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களும், மாண்புமிகு அறநிலையத்துறை அமைச்சர் அவர்களும் இந்து சமயத்திற்குச் செய்து வரும் சிறப்புமிக்க பணி பாராட்டுதற்குரியது. தமிழக அரசு செய்து வரும் இக்கடப்பாட்டுக்குக் தக்க கைம்மாறு செய்ய வல்லோமல்லோம். ஆக, சுவாமி மலையிலும், திருக்குடந்தையிலும், மதுரையிலும் அனைவர்க்கும் பக்தியும் அறிவும் பரப்பும் நோக்கோடு செய்த இச்செயல் (Spiritual uplift and Mass Education) மிகச் சிறப்புற்றது எனில் மிகையாகாது.

இனி ஒரு முக்கிய விஷயம் கூற விழைகின்றேன். சென்னை திருவல்லிக்கேணியில் முருகன் திருவருட் சங்கம் 25 ஆண்டுகளுக்கு மேலாக முருகனருள் பரப்பி வருவதை அனைவரும் அறிவர். இச்சங்கத்தின் இருகண்கள் போன்று எப்பொழுதும் விழிப்புடன் கண்ணும் கருத்துமாய் அதன் முன்னேற்றத்தில் ஈடுபடுபவர் திரு ஆர். கிருஷ்ணன், B. com., என்பவரும் திரு வே. கணேசன் என்பவரும் ஆவர். இச்சிறுவர் இருவரும் என்னை இந்த நற்றுறையில் இறக்கி விட்டனர். இந்து சமய அறநிலைய ஆட்சித் துறை ஆணையாளர் அவர்கள் கைகொடுத்தார். அதன் விளை வாக திருவெழுகூற்றிருக்கையில் ஐந்து இஞ்ஞான்று சிறந்த உரை நூலாக வெளி வருகின்றன

இன்னும் சிறப்பாகச் சொல்லப் போனால், மேற்குறித்த திரு. ஆர். கிருஷ்ணனும், அவருடைய தர்ம பத்தினியார் செள டி. வி. சுந்தரவல்லியும் செய்த உதவிமறக்கற்பாற்றன்று. அத்தம்பதியர் என் உரை முழுவதையும் பட்டோலை செய்து படி எடுத்து எழுதி நல்ல கையெழுத்தில் அமையும்படி செய்தமை குறிப்பிடத்தக்கது.

அனைத்துக்கும் மேலாக, இத்தகைய சித்திரகவி நூல்களுக்கு உரை எழுதும்படியான ஆற்றலை என்னுடைய ஆசிரியப் பெருந்தகை உரையாசிரியச் சக்கரவர்த்தி **ஸ்ரீ உ. வே. வை. மு கோபால கிருஷ்ணமா சார்யர் ஸ்வாமி** அவர்கள் தோன்ருத் துணையாயிருந்து அளித்தனர். அவர் ஆசி என்றும் என்பால் நில வட்டும் என்று சொல்லி அவரை வணங்குகிறேன். இந்நூலாக்கத்தைச் செவ்வனே அமையும்படி செய்த திருவருளை வழுத்துகின்றேன்.

இந்த உரைநூல் திருவண்ணுமலை அருள்மிகு அருணுசலேச்வரர் திருக்கோயில் சார்பில் வெளியிடப் பெறுகிறது. இங்கும் ஸ்ரீஅருணகிரிநாதர் அருளிச் செய்த திருவெழுகூற்றிருக்கை சித்திரகவியாக ரதபந்தந்தில் அமைக்கப்பட்டுச் சலவைக்கல்லில் பொறிக்கப்பட்டு அனைவரும் படித்துப் பயன்பெறும் படி செய்யப்பட்டுள்ளது. அண்ணுமலையார் திருமுன்பு சமர்ப்பித்து இந்த உரைநூலைச் சிறப்பாக வெளியிடும் அருள்மிகு அருணுசலேச்வரர் திருக்கோயில் அறங்காவலர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**" நக்கீரர் தாம்பணித்த நல்லவெழு கூற்றிருக்கை
மிக்கபுகழ்ச் சம்பந்தன் வேற்கலியன்—தக்க
அருணகிரி வண்ணச் சரபமிவர் பாக்கள்
மருணமக்கு நீக்கும் மருந்து."**

38, நாகோஜிராவ் தெரு,
திருவல்லிக்கேணி,
சென்னை — 5
4—3—82

இங்ஙனம்
**C. ஜகந்நாதாசார்யர்**

# திருவெழுகூற்றிருக்கை

திருவெழுகூற்றிருக்கை நாற்கவி வகைகளில் ஒன்ருகிய சித்திர கவியினைச் சேர்ந்தது. திரு என்பது சிறப்புப்பற்றி வரும் அடைமொழி. எழுகூறு அமைந்திருத்தலின் எழுகூற்றிருக்கை எனப்பட்டது. சித்திர கவியில் வகைகள் பலஉள.

“ ஏகபாதமும் எழுகூற்றிருக்கையும்
காதை கரப்பும் கரந்துறை செய்யுளும்
கூடசதுக்கமும் கோமூத்திரியும்
இவை முதலாவன சித்திர கவியே”

என்பது நூற்பா. எனவே எழுகூற்றிருக்கை என்ற இது சித்திரகவி வகையினைச் சார்ந்தது.

“ ஒன்று முதலா ஒரேழ் ஈருச்
சென்ற எண்ணீரேழ் நிலந்தொறும் திரிதர
எண்ணுவ தொன்ரும் எழுகூற்றிருக்கை”

என்றது மாறனலங்காரம்.

இந்தச் சித்திரகவியாகிய எழுகூற்றிருக்கையை ரத பந்தத்தில் அமைப்பது கவிமரபு.

**ரதபந்தமாவது :** தேரின் உருவம் தோன்றும்படி நேர்க் கோடிட்டுக் கட்டங்கள் போட்டு அவற்றில் எண் முறையைப் பின்பற்றி, வரும் பாசுரப் பகுதிகளை அடக்கவேண்டும். தேருக்கு மேற்பாகம், கீழ்ப்பாகம் இருப்பனபோல் இந்த ரத பந்தத்துக்கும் இருபாகம் கொள்ளவேண்டும். ஒவ்வொரு பாகத்திலும் ஏழுகூறுகள் உளவாம்படி கோலவேண்டும். அப்படிக் கோலும்போது முதற்கூறு மூன்று அறையும், இரண்டாம் கூறு ஐந்து அறையும், மூன்றும் கூறு ஏழுஅறை

யும், நான்காம்கூறு ஒன்பது அறையும், ஐந்தாம்கூறு பதினொரு அறையும், ஆறு, ஏழாம் கூறுகள் பதின்மூன்று அறையும் உடையதாய் இருக்கும். இப்படி நோக்க, ஒவ்வொரு அறையும் ஒன்றற்கொன்று இரண்டிரண்டு அறைகள் மேற் படக் காணப்படும்.

[இவை நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார் ஆகியோர் அருளிச்செய்துள்ள திருவெழுகூற்றிருக்கைகளில் அமைந்துள்ள அமைப்பாகும். ஆனால் அருணகிரிநாதர் அருளிய திருவெழுகூற்றிருக்கையில் சிறிது மாற்றம் செய்து முதற்கூறு ஓரறையும், இரண்டாம்கூறு மூன்றுஅறையும் மூன்றாம் கூறு ஐந்து அறையும், நான்காம்கூறு ஏழுஅறையும் ஐந்தாம்கூறு ஒன்பது அறையும், ஆறாம்கூறு பதினொரு அறையும், ஏழாம்கூறு பதின்மூன்று அறையும் உடையதாக அமைத்தார்] மேற்கூறிய அடைவினைப் பின்பற்றிக் கீழ்ப் பாகத்திலும் கோலவேண்டும். அப்போது மேற்பாகத்தில் உச்சி (Top)யிலிருந்தும், கீழ்ப்பாகத்தில் அடி (Base)யிலிருந்தும் இந்தக் கிரமம் அமைந்திருப்பதைக் காணலாம்.

**எண்களின் நிரப்பு—(உதாரணம் மேற்பாகத்தில் மட்டும்)**

[நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார் ஆகி யோரது எழுகூற்றிருக்கைகளில் காணும்படி]

1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

**எண்களின் நிரப்பு**—[அருணகிரிநாதர் எழுகூற்றிருக்கையில் காணும்படி]


1
1 2 1
1 2 3 2 1
1 2 3 4 3 2 1
1 2 3 4 5 4 3 2 1
1 2 3 4 5 6 5 4 3 2 1
1 2 3 4 5 6 7 6 5 4 3 2 1

இந்த நிரப்புப் படத்தில் மேற்பாகத்தின் எண்களை மாத்திரம் அந்தந்தக் கூறு அறைகளில் நிரப்பப்பட்டுள்ளது. இதனை உற்று நோக்கின் $1, 11^2, 111^2, 1111^2, 11111^2, 111111^2, 1111111^2$ என்ற கணித நுண்மையை (Square of the numbers) ஆரோஹண அவரோஹண முறை வைப்பினிற் காணலாம். மற்றும் ஒவ்வொரு கூறிலுள்ள அறையின் இலக்கங்கள் மொத்தத்தையும் (Total) கூட்டினுல் 1, 4, 9, 16, 25, 36, 49 என ஆகும். அவை முறையே $1^2, 2^2, 3^2$ $4^2, 5^2, 6^2, 7^2$ என அமையும் நுண்மையையும் சுவைக்கலாம். மேலும் இந்த எண்கள் தேரைச் சூழநின்று தொங்கல் மாலைகள் போலத் தூங்கி நிற்கின்ற பாங்கினையும் ரசிக்கலாம்.

திருவெழுகூற்றிருக்கை பாடியுள்ள அனைவரும் மேற் காட்டிய எண்முறையிலேயே தத்தம் பாடலில் சொற்கள் அமையும்படியும் பொருள் சிறக்கும்படியும் யாத்திருக்கும் சாமர்த்தியம் மிகவும் பாராட்டற்குரியது. இதனில் வருஞ் சொற்கள் தமது சப்த ஆற்றலாலாயினும், அர்த்தஆற்றலா லாயினும் எண்களைக் குறிக்குமாறு தொகுக்கப் பட்டிருப் பதைக் காணலாம். இது எல்லா திருவெழுகூற்றிருக்கை களுக்கும் ஒக்கும்.

இனி, திருவெழுகூற்றிருக்கை வகையில் சிறப்புறக் கவிபாடியவர்கள் ஐவராவர். நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், திருக்குருகைப் பெருமாள் கவிராயர், அருணகிரிநாதர். இவர்களது பாடல்கள் முறையே 47, 46 51, 55, 30 வரிகள் கொண்டமைந்தன. இவ்வைந்தும் ஆசிரியப்பாவில் அமைக்கப்பட்டவை. இவர்களைப் பின் பற்றிப் பிற்காலத்து வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள் போன்ரோர் திருவெழுகூற்றிருக்கை பாடியுள் ளனர். வண்ணச்சரபம் பாடிய பாடல் திருவல்லிக்கேணி பார்த்தசாரதி ஸ்வாமியைப் பற்றியதாகும். இது 34 அடிகளைக் கொண்ட ஆசிரியப்பாவாகும்.

இனி நக்கீரர், திருஞானசம்பந்தர், திருமங்கையாழ்வார், அருணகிரிநாதர், வண்ணச்சரபம் ஆகியோர் அருளிச் செய்த திருவெழுகூற்றிருக்கைகளை முறையே ரதசித்திரத்தில் (தேர்வடிவில்) அமைத்து இந்நூலில் உரையாக்கஞ் செய்து விளக்கிக் காட்டப்பெற்றுள்ளது. அவ்வுரையாக்கம் பின் வருமாறு.



நக்கீர தேவ நாயனர்
அருள்மிகு சுப்ரமண்ய சுவாமி திருக்கோயில்
*திருப்பரங்குன்றம்*



திருஞானசம்பந்தர்

அருள்மிகு சட்டநாத சுவாமி திருக்கோயில்,

*சீர்காழி*

# நக்கீர தேவ நாயனர்

மதுரைக் கடைச் சங்கப் புலவர்கள் நாற்பத்தொன்பதின்மர்களுள் தலைமைத்தானம் பெற்றிருந்தவர் நக்கீரர். திருப்பரங்குன்றத்தில் சரவணப் பொய்கையில் நீராடி வழிபடும் நியமமுடைய அவர் ஒருநாள் ஓர் அரசிலை மீனும் பறவையுமாக மாறிப் பொருவது கண்டு உதவ முனைய, சிவாபராதம் செய்ததாகக் கற்கிமுகி என்னும் பூதத்தால் சிறைப்பட்டு, ஏற்கெனவே அப்பூதத்தால் சிறைப்பட்டிருந்த 999 பேர்களுடன் வருந்தும் போது முருகவேளைத் துதித்துத் திருமுருகாற்றுப்படை பாடி அனைவரையும் காத்து உய்வித்தவர் என்பர். ஒரு சமயம் பாண்டியனது மனக்கருத்தைக் கூறும் புலவருக்கு ஆயிரம் பொன் வழங்குவதாகத் தெரிவிக்க, அப்போது தருமியின் வறுமை நீங்கச் சிவபெருமான் பாடிய

"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத்தும்பி !
காமம் செப்பாது கண்டது மொழிமோ
பயிலியது கெழிஇய நட்பின் மயிலியற்
செறிஎயிற் றரிவை கூந்தலின்
நறியவும் உளவோ நீ அறியும் பூவே."

என்ற பாடலில் குற்றம் கண்ட நக்கீரர், சிவபெருமான் சினத்திற்கு ஆளாகி வெப்பு நோய் அடைந்து பின் கயிலை தரிசனத்தால் உய்வடைந்தார். அவ்வெப்பு நோயால் வருந்தியபோது இத் திருஎழுகூற்றிருக்கையை அவர் பாடியது என்று இந்நூலின் இறுதியில் காணப்பெறும் வெண்பாவால் கருத இடமுண்டு. நக்கீரர் அருளிய நூல்கள் மொத்தம் பத்து :—1. கயிலைபாதி காளத்திபாதி அந்தாதி 2. திரு ஈங்கோய் மலை எழுபது 3. திருவலஞ்சுழி மும்மணிக்கோவை 4. திரு எழுகூற்றிருக்கை 5. பெருந்தேவபாணி 6. கோபப் பிரசாதம் 7, காரெட்டு 8. போற்றித் திருக்கலிவெண்பா 9. திருமுருகாற்றுப்படை 10. திருக்கண்ணப்பதேவர் திருமறம். இவையனைத்தும் பதினோராம் திருமுறையில் இடம் பெற்றுள்ளன.

# நக்கீர தேவ நாயனுர் அருளிச்செய்த
# திரு எழுகூற்றிருக்கை
## (இணைக்குறள் ஆசிரியப்பா)

ஒருடம்(பு) ஈருரு ஆயினை; ஒன்று புரிந்(து)
ஒன்றி னீரிதழ்க் கொன்றை சூடினை;
மூவிலைச் சூலம் ஏந்தினை;
சுடருஞ் சென்னி மீமிசை
இரு கோட்(டு) ஒருமதி எழில்பெற மிலைச்சினை;
ஒருகணை இருதோள் செவியுற வாங்கி
மூவெயில் நாற்றிசை முரண் அரண் செகுத்தனை;
ஆற்ற முன்னெறி பயந்தனை;
செறிய இரண்டு நீக்கி
ஒன்று நினைவோர்க்(கு) உறுதி ஆயினை;
அந்நெறி ஒன்று
மனம் வைத்து இரண்டு நினைவிலோர்க்கு
முன்னெறி உலகம் காட்டினை; அந்நெறி
நான்கென ஊழி தோற்றினை;
சொல்லும் ஐந்தலை அரவு அசைத்தசைந்தனை;
நான்முகம் மேன்முகம் கபாலம் ஏந்தினை;
நூன்முக முப்புரி மார்பில்
இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய
ஒருவ நின் ஆதி காணு(து) இருவர்
மூவுல(கு) உழன்று நாற்றிசை உழிதர
ஐம்பெருங் குன்றத் து) அழலாய்த் தோன்றினை;
ஆறுநின் சடையது; ஐந்து நின் நிலையது;
நான்குநின் வாய்மொழி, மூன்று நின் கண்ணே;
இரண்டு நின் குழையே; ஒன்று நின் ஏறே;
ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க,
இருங்களிற்றுரிவை போர்த்தனை; நெருங்கி
முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய
அறுதொழிலாளர்க்(கு) உறுதி பயந்தனை;
ஏழில் இன்னரம்(பு) இசைத்தனை;
ஆறில் அமுதம் பயந்தனை; ஐந்தில்
விறலியர் கொட்டு மழுத்த ஏந்தினை;

ஆலநீழல் அன்றிருந்(து) அறநெறி
நால்வர் கேட்க நன்(கு) இனிதுரைத்தனை;
நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்
கொன்(று) அங்(கு) இருவரை எறிந்த ஒருவன்
தாதை, ஒருமிடற்(று) இருவடி(வு) ஆயினை;
தருமம் மூவகை உலகம் உணரக்
கூறுவை; நால்வகை
இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை;
ஐங்கணை யவனெடு காலனை அடர்த்தனை;
அறுவகைச் சமயமும் நெறிமையில் வகுத்தனை;
ஏழின் ஓசை இராவணன் பாடத்
தாழ்வாய்க் கேட்(டு) அவன் தலையளி பொருத்தினை;
ஆறிய சிந்தையாகி ஐங்கதிர்த்
தேரொடு திசை செல விடுத்தோன்;
நாற்றோள் நலனே நந்தி பிங்கி இருடி யென்(று)
ஏற்ற பூதம் மூன்றுடன் பாட
இருகண் மொந்தை ஒருகணம் கொட்ட
மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண
நட்டம் ஆடிய நம்ப! அதனால்
சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்
வறிதெனக் கொள்ளா யாதல் வேண்டும்;
வெறிகமழ் கொன்றையொடு வெண்ணில(வு) அணிந்து
கீதம் பாடிய அண்ணல்
பாதம் சென்னியிற் பரவுவன் பணிந்தே.

### நக்கீர தேவ நாயனுர் அருளிய

## திரு எழுகூற்றிருக்கையின் உரை

**ஓருடம்பு ஈருரு ஆயினே**

(இதன் பொருள்):—

ஓர் உடம்பு-ஒரு திருமேனியில்
ஈர் உரு ஆயினே-இரு உருக் கொண்டாய்:

(விளக்கவுரை) :—

"ஒன்றே யுடம்பங்கிரண்டேயிடும் பங்கு"
என்ருர் குமர குருபரரும். ஈருரு-ஆணும் பெண்ணும் : அர்த்தநாரீசுவர மூர்த்தம் பேசப்பட்டது.

**ஒன்று புரிந்து**
**ஒன்றி னீரிதழ்க் கொன்றை சூடினே;**

(இ-ள்) – ஒன்று புரிந்து–(அவ்வீருருவில்) பெண்ணுருவாகிய ஒன்றினே விரும்பி ஏற்று
ஒன்றின்—மற்ருெரு ஆணுருவில்
ஈர்இதழ் கொன்றை சூடினே—குளிர்ச்சி பொருந்திய கொன்றைப் பூவைச் சூடியுள்ளாய்.

(வி–ரை):–புரிதல்-விரும்புதல்; சிவன் சத்தியை விரும்பி வாமபாகத்து ஏற்றமை காண்க 'புரிந்து' என்னவே, முன்னர் வந்த 'ஒன்று' பெண்ணுருவுக்காகியது. பின்னர் வந்த 'ஒன்று' எஞ்சிய ஆணுரு குறித்தது. கொன்றை சிவனுக்குரித்தேயன்றிச் சத்திக்கு அன்று என்பதை நினைக.

**மூவிலேச் சூலம் ஏந்தினே:—**

(இ-ள்) மூவிலேச் சூலம்—மூன்று இலேகளேப் போல் கூரிய நுனிகளேக் கொண்டதாய் நிமிர்ந்துள்ள சூலத்தை
ஏந்தினே—ஏந்தியுள்ளாய்;
(வி-ரை) மூவிலேச் சூலம்—திரிசூலம் எனவும் படும்.

**சுடருஞ் சென்னி மீமிசை**
**இரு கோட்டொரு மதி எழில் பெற மிலேச்சினே**

(இ-ள்) சுடரும்—ஒளி விடுகின்ற
சென்னி மீமிசை—சிரசின் மேலிடத்தில்
இரு கோட்டு ஒரு மதி—இரண்டு கொம்புகள் போல் முனைகளைக கொண்ட ஒற்றைப் பிறைச் சந்திரனை
எழில் பெற—அழகு பெறும்படி
மிலைச்சினை—சூடியுள்ளாய்;

(வி-ரை) சென்னி சுடர்தல்—மின்னூர் செஞ்சடையினனுதலால். மீமிசை—ஒருபொருட்பன்மொழி; மீமிசைச் சொல். இருகோட்டு ஒருமதி-பிறைச்சந்திரன் என்றபடி. எழில் பெற-தாம் எழில் பெறுதலோடு சந்திரனும் எழில் பெற என்றபடி. சந்திரனுக்கேற்பட்ட சாபம் போக்கி வளரச் செய்த எழில் நோக்குக.

**ஒருகணை இருதோள் செவியுற வாங்கி**
**மூவெயில் நாற்றிசை முரண் அரண் செகுத்தனை**

(இ-ள்) இருதோள் - இரண்டு தோள்களைக் கொண்டு,
செவிஉற – காது வரையில் படும்படி,
வாங்கி – வில்லை வளைத்து,
ஒருகணை – ஓர் அம்பால்,
நால்திசை - நான்கு திக்குக்களிலும் பறந்து சென்று,
முரண்-வலுச் சண்டையிட்டு வருத்தி வந்த
மூ எயில் அரண்-முப்புரங்களாகிய கோட்டைகளை
செகுத்தனை-எரித்து நீறுக்கினுய்;

(வி–ரை) செவியுற வாங்கியது-(மேருமலையாகிய) வில்லை; 'கணை' என்பதன்பின் மூன்றனுருபு தொக்கது. மூவெயில்-திரிபுரம்"; மின்செய்த மூவெயிலும் எரித்தீர் முதுகுன்றமர்ந்தீர்" என்ருர் சுந்தரரும். இவை முறையே பொன், வெள்ளி, இரும்பு முதலியவைகளாற் கட்டப்பட்டிருந்த கோட்டைகளையுடையன வாயிருந்தன: எனவே 'அரண்' என்றது. திரிபுரத்தைத் தகித்தது புன்சிரிப்பேயாயினும், சிலை வாங்கி ஒருகணையால் செகுத்தது முதலாக் கூறியது-முன்னர்ச் செய்த தொழில் வகைகளை நோக்கி என்க. இங்ஙனம் கூறுவது மரபாதலை "விண்பயில் புரங்கள் வேவ வைதிகத் தேரில் மேருத், திண் சிலை குனிய நின்ருர்" என்ற சேக்கிழார் வாக்கினுலும் அறியலாம். தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி,

மூவரும் திரிபுர அரண்களைக் கொண்டு ஆகாயத்தில் சஞ்சரித்து அட்டூழியஞ் செய்து வர, அவர்களைத் திரிபுரங்களோடு எரிந்து நீறுகும்படி செய்தனர் சிவபிரான் என்பது பிரசித்தம்.

**ஆற்ற முன்னெறி பயந்தனை**

(இ-ள்) முன் - ஆதிக்காலத்து
ஆற்ற - மிகுதியாக
நெறி – ஆகமங்களை
பயந்தனை – வெளியிட்டருளினுய்;

(வி–ரை) ஆற்ற - மிகுதிப் பொருளில் வரும் இடைச்சொல். ஆகமங்கள் இருபத்தெட்டு. இவை ஈசான முகத்திலிருந்து வெளிப்பட்டன.

**செறிய இரண்டு நீக்கி**
**ஒன்று நினைவோர்க்கு உறுதி ஆயினை**

(இ-ள்) செறிய – அடர்க்க வருகின்ற
இரண்டு – அகப்பற்று, புறப்பற்ருகிய இரண்டினையும்
நீக்கி - (அறக்)களைந்து
ஒன்று - ஒரே மெய்ப்பொருளாகிய நின்னை
நினைவோர்க்கு – தியானிப்பவர்க்கு
உறுதி ஆயினை–(அடையத்தக்க) சித்தாந்தப் பொருளாயினுய்;

(வி–ரை) ஒன்று - அழிவற்ற ஒன்று, ஈசன்.
உறுதி - பிராப்யம், அடையப்படு பொருள்.

**அந்நெறி ஒன்று**
**மனம் வைத்து இரண்டு நினைவிலோர்க்கு**
**முன்னெறி உலகம் காட்டினை**

(இ–ள்) அந்நெறி - அந்த ஆகமங்கள் காட்டிய வழிபாட்டு மார்க்கங்களில்
ஒன்று - ஏதேனும் ஒரு(வழிபடும்) மார்க்கத்தை,
மனம் வைத்து - மனத்தில் நன்கு பதிய வைத்து,
இரண்டு நினைவிலோர்க்கு - வேறொரு மார்க்கத்தில் நினைவு செல்லாதவர்க்கு
[அதாவது, ஏகாக்ரசித்தராய் வழிபாடு புரிவோர்க்கு]

முன்நெறி உலகம் – முற்பட்ட சாலோக்ய பதவியை,
காட்டினை - அருளுகின்ருய்;

(வி-ரை) அந்நெறி - அகரச்சுட்டு முன்னர் 8-ஆம் வரியில் கூறிய முன்னெறியை [ஆகம நெறியை]க் காட்டியது. ஆகமங்கள் கூறியுள்ள வழிபாட்டு வழிகள்—புலர்வதன் முன் அலகிடுதல், மெழுக்கிடுதல், பூமாலை புனைதல், புகழ்ந்து ஏத்தல், தலையாரக்கும்பிடுதல் போல்வன. உலகம் என்றதால்-சாலோக பதவி எனக் கொண்டது.

**அந்நெறி**

**நான்கென ஊழி தோற்றினை**

(இ-ள்) அந்நெறி - அங்ஙனம் மேற்குறித்த வழிபாட்டு மார்க்கங்கள்.
நான்கு என - நான்காவன என்று
ஊழி - முறையே
தோற்றினை - தோன்றச் செய்தாய்;

(வி-ரை) நான்கு மார்க்கங்கள்-சற்புத்திர, தாஸ, சக, சன்மார்க்கம் என்பன. [முறையே இம்மார்க்கங்களைக் கடைப் பிடித்து வழிபாடியற்றி முத்தியடைந்தவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற சமய குரவர் நால்வரும் என்பது ஈண்டு அறிய வேண்டுவது] "சன்மார்க்கம் சகமார்க்கம் சற்புத்திர மார்க்கம் தாஸ மார்க்கம் என்னும் சங்கரனை யடையும் நன்மார்க்கம் நாலவை தாம்"— என்றது சிவஞான சித்தியாரும். இனி, இவையிற்றை முறையே" ஞானயோக நற்கிரியா சரியையென நவிற்றுவதும் செய்வர்."

**சொல்லும் ஐந்தலை அரவு அசைத்து அசைந்தனை**

(இ-ள்) சொல்லும் - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற
ஐந்தலை அரவு - ஐந்து தலைகளையுடைய பாம்பை
அசைத்து - விசித்துக் கட்டி
அசைந்தனை - ஆடினுய்;

(வி-ரை) நாகங்களை ஆபரணங்களாகக் கொள்பவனுதலின் 'அரவு அசைத்து' என்ருர். "நாதர் முடிமேலிருக்கும் நாகப் பாம்பே" என்றது சித்தர் பாடல்.
அசைந்தமை - இங்கே ஆடுதல் என்ற பொருளது.


**நான்முகன் மேன்முகம் கபாலம் ஏந்தினை**

(இ—ள்) நான்முகன் – பிரமதேவனின்
மேல் முகம் - மேனோக்கி இருந்த தலையின்
கபாலம் - மண்டையோட்டை
ஏந்தினை - ஏந்தினாய்;

(வி-ரை) பிரமதேவனுக்கு நான்கு திக்குக்களிலேயும் நோக்கிய நான்கு முகங்களோடு வானோக்கி யிருந்ததோர் முகமும் உண்டு; எனவே அவனும் சிவனைப்போலே ஐம்முகனாய் இருந்தான். சிவபிரானோ ஏற்கெனவே பஞ்சானன மூர்த்தி. ஆகவே சில சமயங்களில் கண்டார் மருள நேர்பட்டது. இதனால் மேனோக்கி இருந்த தலையைச் சிவபிரான் கிள்ளி எறிய, அந்தப் பிரம கபாலம் கையிலேயே ஒட்டிக்கொண்டது. எனவே கபாலியாயினான் என்றபடி, படைத்தற் கடவுளையே அடக்கினவன் என்பது குறிப்பு. மேல் **முகம்** என்றவிடத்து 'முகம்' - தலைக்கு இலக்கணை.

**நூன்முக முப்புரி மார்பில்**
**இருவர் அங்கம் ஒருங்குடன் ஏந்திய**
**ஒருவ! நின் ஆதி காணாது இருவர்**
**மூவுலகு உழன்று நாற்றிசை உழிதர**
**ஐம்பெருங் குன்றத்து அழலாய்த் தோன்றினை**

(இ—ள்) முப்புரி நூல் முக மார்பில் - முறுக்கேறிய மூன்று இழைகளோடு கூடிய பூணூலணிந்த மார்பின் முன்னிடத்து,
இருவர் அங்கம் - பிரம விஷ்ணுக்களின் காயங்களை,
ஒருங்குடன் ஏந்திய - ஒரு சேர முழுதும் ஏறிட ஏந்தியுள்ள
ஒருவ - ஒப்பற்றவனே!—
நின் ஆதி காணாது-உன் உற்பத்தி மூலம் காணமாட்டாது,
இருவர்–பிரம, விஷ்ணுக்கள்
மூவுலகு உழன்று–மேல், கீழ், நடு என்ற மூன்று லோகங்களையும் சுற்றிச் சுழன்று
நால்திசை உழிதர–நான்கு திசைகளிலேயும் திரிய, (அது கண்டு இரங்கி, அவர்கள் உன் அடிமுடி ஆதிகண்டு வரும்படி),
ஐம்பெருங்குன்றத்து-அழகிய பெரிய திருவண்ணாமலையிடத்து,
அழலாய் தோன்றினை-சோதி அனற்பிழம்பாய்த் தோற்றமெடுத்தருளினாய்;




மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண நட்டம் ஆடிய நம்ப! அதனல்
சிறியேன் சொன்ன அறிவில் வாசகம் வறிதெனக் கொள்ளா யாதல் வேண்டும்;
வெறிகமழ் கொன்றை யொடு வெண்ணிலவு அணிந்து கீதம்பாடிய அண்ணல்! பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே.

நக்கீர தேவ நாயனர்

அருளிச்செய்த

**திருஎழுகூற்றிருக்கை**

**அருள்மிகு மீனட்சி சுந்தரேசுவரர் திருக்கோயில்** மதுரை.

(வி-ரை) தொடக்க வரிகளில் காயாரோஹணத் திருக் கோலம் குறித்தபடி. மகாபிரளய காலத்தில் சிவபிரான் அனைத்தையும் ஒடுக்கித் தன் சரீரத்தில் லயித்துக் கொள்ளுங் கால், பிரம விஷ்ணுக்களின் மெய்களையும் தன் மெய்யில் ஆரோஹணித்துக் கொள்கிறான் என்பது சைவநூல் மரபு. இப்படி, காயாரோஹணித்த க்ஷேத்திரங்கள்—நாகை, குடந்தை, கச்சி என்பவை.

இனி திருவண்ணாமலையிடத்து அனற் பிழம்பின் சோதி யாய்ச் சிவன் நிற்ப, அச்சோதியின் அடி ஆதியைக் கண்டு வர விஷ்ணுவும், முடி மூலத்தைக் கண்டுவர பிரமனும் முறையே பன்றியுருக் கொண்டும், அன்னப் பறவையுருக் கொண்டும் சென்றும் காணாது திகைத்துத் திரும்பினர் என்பது வரலாறு. சிவபிரான் காயத்திடத்து ஆரோஹணித் திருந்தும் அவர்களால் காண முடியவில்லை என்றது ஈண்டு நயம்.

**ஆறுநின் சடையது; ஐந்து நின் நிலையது;**
**நான்குநின் வாய்மொழி; மூன்று நின் கண்ணே;**
**இரண்டு நின் குழையே; ஒன்றே நின் ஏறே;**
**ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க,**
**இருங்களிற்றுரிவை போர்த்தனை**

(இ-ள்) நின் சடையது ஆறு-கங்கையாறு உமது (கபர்த்தம் என்னும்) சடையினிடத்துத் தங்கியுள்ளது;
நின்நிலையது ஐந்து-உமது கிருத்திய நிலை ஐந்தாக உள்ளது;
நின் வாய் மொழி நான்கு-உமது சொற்கள் நான்கு வேதங் களாகும்;
நின் கண் மூன்று-உமது கண்களோ மூன்றாகும்(ஆனால்) [உமது காதுகளோ இரண்டாகும்; ஏனெனில்]
நின் குழையே இரண்டு—நீர் அணிந்துள்ள காதணிகளோ இரண்டாகும்.
நின் ஏறு ஒன்று— (நீர் ஏறிச் செலுத்தும்) வாகனமோ இடப மாகிய ஒன்று [இப்படிப்பட்ட தன்மையையுடைய நீர்]
ஒன்றிய காட்சி உமையவள் நடுங்க-(வைத்த கண் வாங்காது இமை கொட்டாதே) ஊன்றிக் கவனித்துப் பார்த்துக் கொண்டே இருந்த உமாதேவியார் நடுங்கும்படி,

இருங்களிற்று உரிவை–(உம்மை எதிர்த்து வந்த) பெரிய ஆண்யானையினைக் கொன்று அதன் தோலை உரித்து, போர்த்தனை–போர்வையாகப் போர்த்துக் கொண்டாய்;

(வி–ரை) சடையது, நிலையது–இரண்டும் குறிப்பு வினை முற்றுக்கள். வாய்மொழி–வேதம்; எழுதாக் கிளவியாதலின், வாய்மொழிவழியே வந்ததாயிற்று. ஈண்டு, வேதம் தமிழ் செய்ததாகலின் நம்மாழ்வார் வாய்மொழியினைத் "திருவாய் மொழி'' என்று வழங்கும் வழக்கும் நோக்குக.
முக்கண்ணன் என்பது–சிவனுக்கே காரண இடுகுறிப் பெயராய் வழங்குவது காட்டப்பட்டது.
குழை என்பது–காதணி; இங்கு காதினையே காட்ட வந்த தெனலாம், முன்னர் வந்த கண்ணோடு தொடர்பு படக் கூறப் பட்டிருக்கும் அழகு நோக்கி என்க.

ஒன்றிய காட்சி-கண் இமையாது உற்றுப் பார்க்கும் பார்வை. களிறு-தாருக வனத்து முனிவரால் ஏவப்பட்டது;
"பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்" என்றார் அப்பரும்.
"பொரு சமரிடையெதிர் பிளிறுமோர் களிறு பிளந்தொரு போர்வை புறஞ்சுற்றி நின்றன" என்றார் மதுரைக் கலம்பகத்தும்.

**நெருங்கி**

**முத்தீ நான்மறை ஐம்புலன் அடக்கிய**
**அறு தொழிலாளர்க்கு உறுதி பயந்தனை**

(இ-ள்) நெருங்கி–உன்னைக்கிட்டி
முத்தீ-ஆகவனீயம், காருகபத்தியம், தட்சிணாக்கினி என்ற மூன்று வைதிகாக்னிகளையும் வளர்த்து,
நான்மறை-இருக்கு, யசுசு, சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதங்களையும் ஓதி,
ஐம்புலன்- (மெய் வாய் கண் மூக்கு செவி என்ற) ஐம்பொறி களையும் (பஞ்சேந்திரியங்களையும்)
அடக்கிய -(வென்று)ஒடுக்கிய
அறு தொழிலாளர்க்கு-பிராம்மணர்களுக்கு
உறுதி பயந்தனை-(அவர்கள் கோரிய) புருஷார்த்தத்தை (பயனை)க் கொடுத்தருளினாய்;

(வி-ரை) முத்தீ-அந்தணர்க்குரித்தாயவை.
ஐம்புலன் அடக்கிய அறுதொழிலாளர்-ஜிதேந்திரியராகிய அந்தணர்.
அறுதொழில்-ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு தொழில்களையும் கொண்டவர்.
உறுதி-அவர்கள் நாடி வந்த பயன்.

**ஏழில் இன்னரம்பு இசைத்தனை**

(இ-ள்) இன் நரம்பு-இனிய சுரங்களை
ஏழில்-குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம் என்று ஏழினுக்கும் ஒப்ப-ஸ-ரி-க-ம-ப-த-நி என்ற ஏழு அட்சரங்களினின்று
இசைத்தனை-உண்டாக்கியருளினாய்; இனி "ஆ-ஈ-ஊ-ஏ-ஐ-ஓ-ஔ" என்ற ஏழு நெடில்களையும் ஸ்வராட்சரங்களாகக் கூறுவாருமுளர்.

(வி-ரை) ஏழில்–ஏழினின்று; இல்–ஐந்தனுருபு நீக்கப் பொருளில் வந்தது. இனி ஏழில்-ஏழாக எனினுமாம்.
நரம்பு-சப்தஸ்வரங்கள், ஏழிசைகள்;

**குரலே துத்தம் கைக்கிளை உழைஇளி**
**திரமுகு விளரி தாரமா முறையே**
**சரிகமபதநி யிவற்றின் அக்கரமாம்-**

என்றார் அரபத்தநாவலர். மகாபரத சூடாமணியும் "குரல் சட்சத்திற்காகும்" என்றது: அடியார்க்குநல்லாரும் குரல் முதலிய ஏழிசைகட்கு உரிய எழுத்துக்கள் சரிகமபதநி என்பர்.

**ஆறில் அமுதம் பயந்தனை**

(இ-ள்) ஆறில்-அறுவகைச் சுவையினின்று
அமுதம்-உணவு வகைகளை
பயந்தனை-உண்டாக்கியருளினாய்;

(வி-ரை) இறைவன் அறுசுவை உண்டி படைத்தபடி குறித்தமை இது- உணவினை அமுதம் என்றது, உயர்வு நோக்கி. அறுசுவை-இனிப்பு, புளிப்பு, துவர்ப்பு, உவர்ப்பு, கார்ப்பு, கசப்பு என்பன.

**.......................ஐந்தில்**
**விறலியர் கொட்டு மழுத்த ஏந்தினை**

(இ-ள்) ஐந்தில்-(பஞ்ச கிருத்தியங்களில்) ஐந்தாவதாகிய அருளலைச்செய்தல் காரணமாக,
விறலியர் கொட்டு-பாண்மகளிர் முழங்கும் துடியை
மழுத்த-நன்கு அழுத்தமாக அடிக்கும்படி
ஏந்தினை – வலக்கரத்தில் ஏந்தியுள்ளாய்;

(வி-ரை) துடி - படைப்பதற்குச் சூசகமாம் இசைக்கருவி. உலகம் ஒடுங்கிப்போனபின் தழைக்கும்படி துடி முழக்கி நடனம் புரிவர் என்பது முடிபு. "தோற்றம் துடியதனில்." ஐந்து-ஐந்தாவது தொழிலைக் காட்டி வந்த குறிப்பு மொழி. இல்-ஏதுப் பொருளில் வந்த ஐந்தனுருபு (கல்வியில் பெரியன் கம்பன் என்ற விடத்துப்போல)

**ஆலநீழல் அன்றிருந்(து) அறநெறி**
**நால்வர் கேட்க நன்(கு) இனிதுரைத்தனை**

(இ-ள்) அறம் நெறி-வேத மார்க்கத்தை (அதாவது) வேதத்தின் தீர்ந்த முடிபு என்ன என்பதை
நால்வர் கேட்க - சனகர், சனத்குமாரர், சனந்தனர், சனாதனர் என்ற பிரமபுத்திரர் நால்வர்களும் கேட்டறியும்படி வர,
அன்று- அக்காலத்து [அவர்கள் சந்தேகம் நீங்கும்படி]
ஆலம் நீழல்-கல்லால மரத்தின் நிழலின் கண்ணே,
இருந்து-(தட்சிணாமூர்த்தமாக) எழுந்தருளியிருந்து
நன்கு இனிது உரைத்தனை–செவ்வனே மனங்கொள உபதேசித்தாய்;

(வி-ரை) உரைத்தனை என்றது-வாயைத் திறந்து சொல்லாமலே சொல்லித் தெளிவித்த படியை. "இருந்தனை இருந்தபடி இருந்து காட்டிச் சொல்லாமற் சொன்னவரை" என்றார் பரஞ்சோதி முனிவர்.

கல்லால மரத்தின்கீழ் தட்சிணாமூர்த்தி கோலத்தோடு எழுந்தருளி, மௌனமாய் இருந்த இறைவன் வாயைத் திறந்து பேசாமலேயே வலக்கையை மடக்கிச் சின்முத்திரையைக் காட்டினான். வலக்கை கட்டை விரலின் அடியில் ஆள்காட்டி விரலை மடக்கிச் சேர்த்து ஏனைய மூன்று விரல்களையும் மடக்காமல் நிறுத்திக் காட்டினர். இதன் கருத்து:—கட்டைவிரல் -

பதி; அதன் திருவடியில் ஆள்காட்டி விரலான ஆன்மா (உயிர்) பசு; இவை ஏனைய மூன்று விரல்களான பாசத்தை விட்டு நீங்கிப் பதியை அடைதல் என்ற சைவ சித்தாந்த உண்மைத் தத்துவத்தை விளக்கித் தெளிவித்தபடி. "சீர் கொள் கரதலம் ஒன்று சேர்த்தி மோன முத்திரையைக் காட்டி, ஒருகணம் செயலொன்றின்றி யோகு செய்வாரினுற்ருன்" என்றது கந்தபுராணம். ஆகவே, "கேட்க......உரைத்தனே" என்பது–கேட்டறியும்படி வர, சந்தேகத்தைத் தெளிவித்தனே என்ற குறிப்பினது.

**நன்றி இல்லா முந்நீர்ச் சூர்மாக்**
**கொன்று அங்கு இரு வரை எறிந்த ஒருவன்**
**தாதை, ஒரு மிடற்றிருவடிவாயினே;**

(இ–ள்) நன்றி இல்லா–நன்மையே இராத (தீமையையே புரிந்து வந்த)
சூர்-சூரபதுமனுகிய
மா-மாமரத்தை
முந்நீர்-கடலினிடத்து
கொன்று-பிளந்து அழித்து
அங்கு–அப்போது (அதற்கு முன்னர்)
இரு வரை எறிந்த-பெரிய கிரௌஞ்ச கிரியையும் (வேலாயுதத்தால்) பிளந்தெறிந்த
ஒருவன்-ஒப்பற்ற குமரக் கடவுளின்
தாதை-தந்தையாகி,
ஒரு மிடல் திருவடிவு ஆயினே–ஒப்பற்ற ஆற்றல் கொண்ட முடியுடை மன்னனுக வடிவு கொண்டாய்;

(வி-ரை) மிடல்–மிடுக்கு; வலிமை, 'குமரன்தாதை' என்றதால் வந்த மிடுக்கு. மிடல் திருவடிவு–முடிசூடிச் சௌந்தர பாண்டிய மன்னனுயினமை. குமரக்கடவுள் உக்கிரப் பெருவழுதியாயினமையும் உணர்க.

மிடல்+திருவடிவு=மிடற்றிருவடிவு எனவரும்;

இனி ஒரு மிடற்று இரு வடிவு ஆயினே எனக் கொண்டு கூறுவாரும் உளர். அஞ்ஞான்று, கண்டத்து வலப்பக்கம் நீல நிறமாய்ச் சங்கு வடிவிலும், இடப்பக்கம் பச்சை நிறமாய்க் கமுகு வடிவிலும் இருப்பதாகக் கொள்க.சங்கு–ஆண்மகனின்

கழுத்துக்கும், கமுகு பெண் மகளின் கழுத்துக்கும் உவமை கூறுவது மரபு. ஈண்டு ஒரு மிடற்றில் இருவடிவு கூறியது- உமைபாகராதல் நோக்கி.

**தருமம் மூவகை உலகம் உணரக் கூறுவை**

(இ-ள்) மூவகை உலகம் உணர-திரிபுவனங்களில் உள்ளாரும் உணர்ந்து கடைப்பிடிக்கும்படி
தருமம்-அறநெறியை,
கூறுவை-போதிக்கின்ருய்;

(வி-ரை) கயிலையில் சிவஞான போதத்தை உபதேசித் தமையும், தட்சிணாமூர்த்தியாய்ச் சின்முத்திரை காட்டித் தெளி வித்தமையும் குறிக்கப்பட்டது இங்கு. அது பின்னர் மூவுலகும் பரந்தது என உரைத்தார். முதன்முதலில் சிவபெருமான் கயிலாயத்தில் நந்தி தேவருக்குச் சிவஞான போதத்தை உபதேசித்தார், பிறகு, நந்தி தேவர் சனத் குமாரருக்கு உபதேசிக்க, அவர் சத்திய ஞான தரிசினிகளுக்கு உபதேசிக்க, அவர் பரஞ்சோதியாருக்கு உபதேசித்தார். இது அகச் சந்தான வரலாறு; கயிலாயத்தில் நிகழ்ந்தது.

பரஞ்சோதியார் நிலவுலகத்திற்கு வந்து மெய்கண்ட தேவருக்குச் சிவஞான போதத்தை ஞானோபதேசம் செய்தார். அவர் அருணந்தி சிவாசாரியருக்கு உபதேசிக்க, அவர் மறை ஞான சம்பந்தருக்குச் சொல்லி வைக்க, அவர் உமாபதி சிவாசாரியருக்குச் சொல்லி வைத்தார். ஆக, இப்படி பரம்பரை வளர்ந்தது. நிலவுலகத்திலே ஏற்பட்டதால் இது புறச்சந்தானம் எனப்படும்.

இனி, தட்சிணாமூர்த்தியாய்த் தெளிவித்தது பிரம புத்திரர்களுக்காதலின், சத்யலோகம் குறிக்கப்பட்டது. ஆக "மூவகை உலகம் உணர" என்றது-சிவலோகம் (கயிலாயம்), சத்யலோகம், பூலோகம் என்ற மூன்றையும் காட்டும் எனலாம்.

**நால்வகை**
**இலக்கண இலக்கியம் நலத்தக மொழிந்தனை**

(இ-ள்) நால்வகை இலக்கணம்-எழுத்து, சொல், பொருள் யாப்பு என்ற நான்கு வகைப்பட்ட இலக்கணத்தையும்

இலக்கியம்-அந்த நான்கினுக்கேற்ற (நால்வகை) இலக்கியங்
களையும்
நலத்தக-நன்மையுண்டாகுமாறு
மொழிந்தனை-நீ சொற்றாய்;

(வி-ரை) மொழிந்தது-அகத்தியர் போன்றார்க்கு; முதற் சங்கத்தில் புலவராயிருந்து, தமிழாராய்ந்தபோதும், இறையனார் களவியல் போன்ற சூத்திரங்களை வெளியிட்டபோதும் "நலத்தக மொழிந்தமை" நினையலாம்.

நால்வகை இலக்கணம் என்றது-அணியிலக்கணத்தைச் சொல்லிலும் பொருளிலும் அடக்குதல் நோக்கி. நால்வகை இலக்கியம்-எழுத்துக்கு இலக்கியம் எழுத்ததிகாரத்து இயல்கள்; சொல்லுக்கு இலக்கியம் சொல்லதிகாரத்து இயல்கள்; பொருளுக்கு இலக்கியம் பொருளதிகாரத்து இயல்கள்; யாப்புக்கு இலக்கணம் செய்யுளியல், பாட்டியல் போன்ற நூல்களும் ஆகும். இந்த இயல்களில் கூறப்பட்டுள்ள நூற்பாக்களைக் கொண்டுதான் பின்னர் இயல் இசை நாடகத் துறைகளில் முத்தமிழ் இலக்கிய நூல்களைச் சமைத்தனர் என்று ஓர்க. இனி, நால்வகை இலக்கியம் என்பதற்கு நால்வகைக்கவிகள் எனக் கொண்டு, ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற கவிகள் என்று பொருள் கூறுவாருமுளர்; பொருந்துமேற் கொள்க.

**ஐங்கணையவனொடு காலனை அடர்த்தனை**

(இ-ள்) ஐங்கணையவனொடு-ஐந்து மலரம்புகளைக் கொண்ட
மன்மதனோடு
காலனை-யமனை
அடர்த்தனை-காய்ந்து ஒடுக்கினாய்;

(வி-ரை) மன்மதனை எரித்ததோடு காலனை அடர்த்ததையும் உடன்வைத்துக் கூறியது-துஷ்டர்களை நிக்ரகித்தமையும் சிஷ்டர்களைப் பரிபாலித்தமையும் தோற்றற்கு. ஐங்கணை-தாமரை, மா, முல்லை, கருங்குவளை, அசோகு.

**அறுவகைச் சமயமும் நெறிமையில் வகுத்தனை**

(இ-ள்) அறுவகைச் சமயமும்-ஆறுவகைப்பட்ட சமயங்களை
யும்

நெறிமையில்-முறைப்படியே
வகுத்தனை-(செவ்வியுற) அமைத்தாய்;

(வி—ரை) சைவம், வைணவம், கௌமாரம், காணுபத்யம், சாக்தம், சௌரம் என்ற ஷண்மதங்களைச் செவ்வையுற ஆக்கினுய்; இவை முறையே சிவன், விஷ்ணு, முருகனை, கணபதி, அம்பிகை, சூரியன் ஆகிய இவர்களை முழுமுதற் கடவுளாகக் கொண்டு வழங்குவன. சைவம் வகுத்த சிவபிரானே பிறசமயங்களையும் வகுத்ததாகக் கூறியது—தலைமைபற்றி என்க.

**ஏழின் ஓசை இராவணன் பாடத்**
**தாழ்வாய்க் கேட்டு அவன் தலையளி பொருத்தினை**
**ஆறிய சிந்தை யாகி ஐங்கதிர்த்**
**தேரொடு திசைசெல விடுத்தோன் (ஆகி)**

(இ—ள்) தாழ்வாய்—பணிவோடு (செருக்கு நீங்கி)
இராவணன்—,
ஏழின் ஓசைபாட—சப்த சுவரங்களோடு கூடிய சாமகானத்தை வீணையில் இசைத்துப்பாட
ஆறிய சிந்தையாகி—(உடல்நெரித்த அவன்பால்) சினம் தணிந்த மனமுடையையாய்
ஐங்கதிர்த் தேரொடு—அழகிய ஒளிவிடுகின்ற புஷ்பக விமான மாகிய தேரொடு
திசைசெல-தென்திசை இலங்கைக்குச் செல்லும்படி
விடுத்தோன் (ஆகி)—விடைகொடுத்து அனுப்பினவனுகி
அவன் தலை—அவனிடத்து
அளி பொருத்தினை-கருணையைப் புரிந்தாய்;

(வி—ரை) புட்பக விமானத்தோடு கயிலைமேற் பறந்த போது அம்மலையின் மகிமையால் அவ்விமானம் தடைப்பட அதனைப் பெயர்த்தெறிவேன் என்று இராவணன் சினந்து தூக்க முற்பட, கையகப்பட்டுத் தலைங்சுங்கிப் பின் சாம கானம் பாடி இறைவனை மகிழ்வித்து விடுதலை பெற்று இலங்கை திரும்பினுன் என்ற வரலாறு உட்கொண்டு இங்ஙன் கூறியது.

தாழ்வாய் இராவணன் பாடக்கேட்டு என இயைக்க. ஐங்கதி' என்ற பாடத்திற்கு–அழகிய செலவோடு கூடிய என்பது பொருள். அதாவது புஷ்பகம் தன்மேல் ஏறுபவர் அனைவருக்கும் இடம் கொடுத்து நினைத்த இடத்திற்குப் பறந்து செல்லும் செலவினை உடையது. விடுத்தோன்—வினையாலணையும் பெயர். இதன் பின்னர் "சிந்தையாகி' என்பதிலுள்ள வினையெச்சத்தைக் கூட்டிக் கொள்க. அஞ்ஞான்று, "விடுத்தோனாகி அளி பொருத்தினை'' என முன்னர்க் கொண்டுகூட்டிப் பொருள் கொள்ள அமையும். அவன் தலை—தலை ஏழனுருபு, இனி, அவன்—அவனிடத்து, தலையளி—மேலான கருணையை, பொருத்தினாய்–எனப் பொருள் கொள்ளினுமாம்; அப்போது 'அவன்' என்ற சொல்லின் பின் இடப்பொருளில் வரும் 'கண்' என்ற ஏழனுருபு தொக்கது என்க.

**நாற்றோள் நலனே நந்தி பிங்கி இருடியென்று**
**ஏற்ற பூதம் மூன்றுடன் பாட**
**இருகண் மொந்தை ஒரு கணம் கொட்ட**
**மட்டுவிரி அலங்கல் மலைமகள் காண**
**நட்டம் ஆடிய நம்ப!**

(இ-ள்) நால் தோள் நலனே–[இராவணனை நெரித்த] (நினது) நான்கு தோள்களின் அழகினையே,
நந்தி பிங்கி இருடி என்று - நந்திதேவர், பிருங்கி முனிவர், நாரதர் என்ற மூவரும்,
ஏற்ற பூதம் மூன்றுடன் – சங்கீதத்தில் வல்ல பூதங்கள் மூன்றுடனும்
பாட - உடன்பாட (ஒத்து ஒருசேரப் பாடா நிற்க), [அப்போது]
இருகண் மொந்தை – இரண்டு கண்களைக் கொண்ட மொந்தை என்ற முழக்குக் கருவியை
ஒரு கணம் கொட்ட - ஒரு சிவபூதகணம் அடித்து ஒலியெழுப்ப,
மட்டு விரி அலங்கல் – தேன் பெருகுகின்ற மாலையை அணிந்த
மலைமகள் காண – பார்வதி தேவி காணும்படி
நட்டம் - நடனம்
ஆடிய—,
நம்ப!—கடவுளே!

(வி–ரை) தோள்நலன் – திண்மையும் பொலிவும். இருடி – இங்கு நாரதர். "நாரதர் யாழ்தூக்க" என்பது வழக்கு. என்று– எண்ணிடைச்சொல். நந்தியும், பிருங்கியும் இருடியும் மூன்று பூதம் உடன் பாடப் பாடினர் என்க. கண் - அடிக்கப்படும் இடம். மொந்தை - ஒருகண் பறை வகை; தோற்கருவி. காண - கண்டு மகிழும்படி.

களிற்றுரிவை போர்த்த போது கண்டு நடுங்கிய உமையவள் இதுபோது நட்டம் ஆடுதல் கண்டு மகிழ்ந்தனள் என்க. ஆடியது – வெள்ளியம்பலத்தில்; கால் மாறி ஆடியது, இராசசேகர பாண்டியனுக்காக.

**அதனால்**
**சிறியேன் சொன்ன அறிவில் வாசகம்**
**வறிதெனக் கொள்ளா யாக வேண்டும்.**

(இ-ள்) அதனால் - (இராவணன்றலை அளி பொருத்தினை) அதனால்,
சிறியேன் சொன்ன – அற்பனாகிய நான் கூறிய
அறிவில் வாசகம் - புத்தி கெட்ட சொற்கள்
வறிது என - பொருளற்றவை என்று (அதனால்)
கொள்ளாயாக - மனத்துக் கொள்ளாதவனாக இருக்கும்படி
வேண்டும் – பிரார்த்திக்கின்றேன்;

(வி-ரை) 'அதனால்' என்ற காரணச்சுட்டு, முன்னர் இராவணனுக்கு அருள் செய்தமையைக் காட்டி நின்றது. [அவனுக்குத் தலையளி செய்ததுபோல எனக்கும் அருளுக என்பது குறிப்பு] அறிவில் வாசகம்-"நீ தினம் வழிபடும் இறைவியாகிய ஞானப்பூங்கோதையம்மையாரின் கூந்தலோ?" என்று வினவிய போது "அதுவும் அத்தன்மைத்தே" என்று விடையிறுத்த வாசகமும், "சடைகொண்டு வெருட்டல் வேண்டா; நின் உடலம் முழுதும் கண்ணேயாயினும் உனது பாடல் குற்றம் குற்றமே" முதலாய பிதற்றல் வாசகங்களும் போல்வன. வறிது - வீண் பேச்சு: பயனில்சொல்; பொருளற்றவை என்றபடி. கொள்ளாயாக - எதிர்மறை வினையெச்சச்

சொல்; வேண்டும் என்ற வினைமுற்றோடு முடியும். இவ்வினையெச்சத்தில் கொள் - பகுதி; ஆய் - முன்னிலை விகுதி; ஆ- எதிர்மறை இடைநிலை புணர்ந்து கெட்டது; ஆக - வினையெச்ச விகுதி. இந்த வினையெச்ச விகுதி தொழிற்பெயர்த் தன்மைப் பட்டு வந்தது என்று கொண்டு, ஆக - ஆதல் எனவுமாம். இனி "ஆதல்" என்றே கொண்டு "கொள்ளா யாதல் வேண்டும்" என்ற பாடமும் உண்டு.

[இனி "கொள்ளாயாக" என்பதற்கு "கொள்வதாக" என உடன்பாட்டுப் பொருள்கொண்டு, வீணன பயனில் சொற்கள் என்று உளம் கொளவேண்டும் என்று பிரார்த்தித்த வாறுமாம். அஞ்ஞான்று கொள் - பகுதி; ஆய் - முன்னிலை விகுதி; உடன்பாடு தெரிவிப்பது; ஆக - வினையெச்ச விகுதி; இடைநிலை கிடையாது. வேண்டும் - வியங்கோள் வினைமுற்று]

**வெறிகமழ் கொன்றை யொடு வெண்ணிலவு அணிந்து**
**கீதம்பாடிய அண்ணல்!**
**பாதஞ் சென்னியிற் பரவுவன் பணிந்தே.**

(இ-ள்) வெறிகமழ் - வாசனை வீசுகின்ற
கொன்றையொடு - கொன்றைப் பூவொடு
வெண்நிலவு அணிந்து - வெள்ளிய பிறைச் சந்திரனை அணிந்து,
கீதம்பாடிய - பாணபத்திரனுக்காக இசை (கானம்) பாடிய
அண்ணல்! - பெரியோனே!
பாதம் - நினது திருவடிகளை
சென்னியில் பணிந்து - சிரசால் வணங்கி
பரவுவன் - வாயினால் பாடித்துதிப்பேன் [என்றவாறு.]

(வி-ரை) கொன்றை - பொன்னிற முடையது. அதனோடு சூடிய வெண்ணிலவு - அழகு மிகுவிக்கும் என்றபடி. பாணபத்திரனுக்காகக் கீதம் (சாதாரிப்பண்) பாடியதைத் திருவிளையாடற்புராணத்து விறகுவிற்ற படலத்தில்காணலாம். மற்றும் ஈழத்துப் பாடினியை இசைவாதில் வென்றது முதலாயதும் நினைக. அண்ணல் - ஆண்பாற் சிறப்புப்பெயர். ஈற்றடியில் - மனத்தால் 'உள்குவன்' என்பதை உப லக்ஷணத்தாற் கொள்க.

## வெண்பா

பணிந்தேன்நின் பாதம் பரமேட்டி பால்நீ(று)
அணிந்தால வாயில் அமர்ந்தாய்—தணிந்தென்மேல்
மெய்யெரிவு தீரப் பணித்தருளு வேதியனே
ஐயுறவொன் றின்றி அமர்ந்து.

(இ-ள்) பரமேட்டி - மேலானவனே!
நின்பாதம் பணிந்தேன் - ;
பால்நீறு - வெண்மையான விபூதியை
அணிந்து - தரித்து
ஆலவாயில் - மதுரையில்
அமர்ந்தாய் - விரும்பி எழுந்தருளியிருக்கின்றாய்;
வேதியனே - வேதங்களாலே பிரதிபாதிக்கப்பட்டவனே!
ஐயுறவு ஒன்று இன்றி - சந்தேகம் சிறிதும் இல்லாமல்
அமர்ந்து - மனம் விரும்பி
என்மேல் தணிந்து - என்மேல் கொண்ட கோபம் ஆறி
மெய்யெரிவு தீர - (எனக்கு ஏற்பட்ட) உடம்புஎரிச்சல் தீரும்படி
பணித்தருளு - சாபவிடை அருள்வாயாக.

(வி-ரை):-நக்கீரன்மேல் சிவபெருமான் சினங்கொண்டு நெற்றிக் கண்ணைத் திறந்து பார்க்க, அவன் மெய்யெல்லாம் எரிச்சல் உண்டாகத் தாங்க மாட்டாமல் ஓடிப்போய்ப் பொற்றாமரைக் குளத்தில் வீழ்ந்து வருந்தினான் என்பது ஈண்டு உணர வேண்டிய விவரம். அப்போது அவர் கோபம் ஆறும்படி இந்தத் திருவெழுகூற்றிருக்கை பாடி, "சிறியேன் சொன்ன அறிவில் வாசகத்தை மனங்கொள்ளாது என்னை மன்னித்தருள வேண்டும்; மேலும் என் உடம்பெரிச்சல் தீரும்படி உம் அருட் பார்வை (கடாட்சம்) என்மேல் விழ வேண்டும்" என்றும் வேண்டி, அவர் திருவடியைப் பணிந்து இறைஞ்சுகிறார் நக்கீர தேவ நாயனார் என்க.

பரமேட்டி—பரமேஷ்டி. பால்நீறு-திருநீறு வெண்ணிற மாகவேயிருப்பின் மிகச் சுத்தம்; வெள்ளைத் திருநீற்றை யணிந்தால் சகல செல்வங்களும் வந்து சேரும். கருநிறமுள்ள திருநீறும், செந்நிறமுள்ள திருநீறும் ஆகா. வறுமை, பிணி,

கடன் முதலியவை வந்து சேரும் இவற்றை யணிவதால். ஆக, வெண்ணிறத் திருநீறு சிலாக்கியம். ஆலவாய்—மதுரை; விஷத்தை வாயிலே கொண்ட பாம்பினாலே எல்லை காட்டப் பட்டமையால் வந்த பெயர். அருளு—உகரச் சாரியை பெற்றுவந்த வியங்கோள் வினைமுற்று.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

## ஸ்ரீ திருஞானசம்பந்தர் அருளிச்செய்த

# திரு எழுகூற்றிருக்கை


திருஞானசம்பந்தர் சீகாழியில் வேதவடிவாகிய திருத்தோணியில் வீற்றிருந்த விண்ணோர் பெருமானைப் பாடிப் பணிந்து அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளிலே, செந்தமிழ்ப் பாமாலையின் விகற்பங்களாகிய மொழிமாற்று, மாலைமாற்று திருவியமகம், ஏகபாதம், இருக்குக்குறள் முதலானவற்றை அருளிச்செய்து திருநீலகண்ட யாழ்ப்பாணரும் மதங்க சூளாமணியாரும் இப்பதிகங்களை ஏழிசை பற்றிப் பாட வைத்தனர். அப்போது சிவபாத விருதயர் தமது பூசைக் காலத்து நாள்தோறும் பிள்ளையாரது திருப் பதிகங்களை ஓதும் நியமம் உடையவராய் இருந்தார். ஆனால் நாள்தோறும் திருப்பதிகங்கள் பெருகி எண்ணிறந்தவையாயின. எனவே, தந்தையாகிய சிவபாதவிருதயர் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பேறுண்டாகும்படி இந்தத் திரு எழுகூற்றிருக்கையை அருளிச்செய்தார் மகனார். ஆகவே, இதனை நித்திய பாராயணம் செய்யின், சம்பந்தரது எல்லாத் தேவாரப் பதிகங்களையும் ஓதிய பேறுண்டாகும் என்பது ஆன்றோர் முடிபு.

திருச்சிற்றம்பலம

# திருவெழுகூற்றிருக்கை

( இணைக்குறளாசிரியப்பா )

ஓருரு வாயினை மானுங் காரத் (து)
ஈரியல் பாய்ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்ப மும்மூர்த்தி களாயினை:
இருவரோ டொருவ னாகி நின்றனை;
ஓரானீழ லொண்கழ லிரண்டும்
முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி
காட்டினை; நாட்ட மூன்றுகக் கோட்டினை;
இருநதி யரவமோ டொருமதி சூடினை;
ஒருதாள் ஈரயின் மூவிலைச் சூலம்
நாற்கான் மான்மறி ஐந்தலை அரவம்
ஏந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி ஈடழித் துரித்தனை;
ஒருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்
கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை;
ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை; ஒருங்கிய மனத்தோ(டு)
இருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறை யோதி ஐவகை வேள்வி
அமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை;
அறுபத முரலும் வேணுபுரம் விரும்பினை;
இகலிய மைந்துணர் புகலி அமர்ந்தனை;
பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை;
பாணிமு வுலகும் புதைய மேல்மிதந்த




திருஞானசம்பந்தர் அருளிச்செய்த

**திருஎழுகூற்றிருக்கை**

தோணிபுரத் துறைந்தனை; தொலையா இருநிதி
வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை;
வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை;
ஒருமலை எடுத்த இருதிற லரக்கன்
விறல்கெடுத் தருளினை; புறவம் புரிந்தனை;
முந்நீர்த் துயின்றோன் நான்முகனறியாப்
பண்பொடு நின்றனை; சண்பை அமர்ந்தனை;
ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்
ஊழியும் உணராக் காழி அமர்ந்தனை;
எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை;
ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்/
மறைமுத லுணர்ந்தோர்
மூன்று காலமுந் தோன்ற நின்றனை;
இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்
அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவரில்லை நீணிலத்தே.

## திருவெழுகூற்றிருக்கையின் உரை

ஓருருவாயினை மானாங் காரத்து
ஈரியல் பாய்

(இ-ள்) மான் ஆங்காரத்து - சக்தி :சிவம் என்ற,
ஈரியல்பாய்— இரண்டு தத்துவங்களின் தன்மை யாய் இருந்து,
ஓர் உருஆயினை - (அந்தச் சக்தியுடனே இணைந்து) ஒரே உருவம் கொண்டு ஒன்ருகி நின்றனை.

(வி-ரை) சைவசித்தாந்தத்தின்படி தத்துவங்கள் முப்பத்தாற னுள் மான் என்பது—சக்தியையும், ஆங்காரம் என்பது— அந்தச் சக்தியைக் கொண்டு ஐந்தொழில்களையும் நடத்துகின்ற சிவத்தையும் காட்டும். அந்தச் சிவசக்தி இணைப்புதான் ஓருருவாகிச் சர்வானுக்ரஹமான பஞ்ச கிருத்தியங்களையும் நடத்துகின்றது. பஞ்சகிருத்தியங்கள்—ஐந்தொழில்கள், அவை படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்பன. சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம், திரோதானம், அனுக்கிரஹம்

என்பர் வடமொழியில். ஒருருவாயினை—சிவசக்தி ஐக்கியம் தெரிவித்தபடி.

ஒரு விண்முதல் பூதலம்
ஒன்றிய இருசுடர் உம்பர்கள் பிறவும்
படைத் தளித்தழிப்ப மூம்மூர்த்திகளாயினை

(இ-ள்) ஒருவிண்முதல் பூதலம் – எங்கும் ஒரே மாதிரியாய்ப் பரந்துள்ள ஆகாச முதலாகப் பூமியீருக உள்ள பஞ்ச பூதங்களையும்,

ஒன்றிய இருசுடர் – பொருந்திய சந்திர சூரியர்களாகிய இரண்டு ஒளிகளையும்,

உம்பாகள் – தேவர்களையும்

பிறவும் – (ஏனைய) ஆத்மாக்களையும்

படைத்து – சிருட்டித்து

அளித்து – காத்து

அழிப்ப – துடைக்க

மும்மூர்த்திகள் ஆயினை – (முறையே) பிரம, விட்டுணு, உருத்திரன் என்கின்ற மூன்று மூர்த்திகள் ஆயினுய்;

(வி-ரை) பஞ்சபூதங்கள்—நிலம், நீர், தீ, காற்று, ஆகாயம் என்பன. இவை முறையே ஆகாயத்திலிருந்து காற்றும், காற்றிலிருந்து தீயும், தீயிலிருந்து நீரும், நீரிலிருந்து நிலமுமாக உண்டாகும். தாம் தோன்றிய முறையே பிரளய காலத்திலும் ஒன்றினுள் ஒன்று இலயித்துப் போகும். இருசுடர்-சூரியசந்திரர்; உபலட்சணத்தால் கிரஹங்களையும் தாரகைகளையும் கொள்க. உம்பர்கள் – தேவர்கள்; மேலிடத்தில் இருப்பவர் என்பது பற்றி வந்தது; உம்பர்–மேலிடம், அவர்கள் முப்பத்து முக்கோடி தேவர்கள்; எனப்படுவர். பிற–ஏனைய அசுரர்கள், பூதகணங்கள் போன்ற ஆத்மாக்கள். பிரமனுகிப் படைத்தும், விட்டுணுவாகிக் காத்தும், தானுனதன்மையில் உருத்திரனுய் அழித்தும் மும்மூர்த்திகளின் செயலாற்றுபவன் இறைவன் என்பது கூறப்பட்டது.

[ அதேசமயத்தில் ]

**இருவரோடு ஒருவனாகி நின்றனை**

(இ-ள்) இருவரோடு – பிரம விஷ்ணுக்களோடு
ஒருவனாகி – ஏகமூர்த்தி சொரூபனாகி
நின்றனை – நின்றாய்;
(வி-ரை) பிரமனை வலப்பக்கத்திலும் விஷ்ணுவை இடப் பக்கத்திலும் அடக்கிக்கொண்டு ஏகமூர்த்தி சொரூபத்திலேயே மும்முகங்களோடு அமைந்து திரிமூர்த்தி என்று வழங்கும்படி நின்றாய்.

[பம்பாய்க்கருகிலுள்ள எலிபாண்டா தீவிலுள்ள குகை களில் (Elephanta Caves) இந்தத் திரிமூர்த்தி ஸ்வரூபத்தைக் கல்லில் வடித்திருப்பது பிரசித்தம்]

**ஓரானீழல் ஒண்கழலிரண்டும்**
**முப்பொழு தேத்திய நால்வர்க் கொளிநெறி**
**காட்டினை**

(இ-ள்) ஓர் – ஒப்பற்ற
ஆல் நீழல் – கல்லால மரத்தின் நீழலிலே [தக்ஷிணாமூர்த்தி யாக எழுந்தருளியிருந்த போது நினது]
ஒண்கழல் இரண்டும் – ஒளி பொருந்திய திருவடிகள் இரண் டினையும்
முப்பொழுது–காலை, உச்சி, மாலை என்ற மூன்று காலங்களிலும்,
ஏத்திய – துதி செய்து நின்ற
நால்வர்க்கு – சனகாதி முனிவர் நால்வர்க்கு
ஒளிநெறி – சைவசித்தாந்த உண்மைத் தத்துவத்தை (மௌன மாயிருந்தே)
காட்டினை – தெரிய விளக்கி உபதேசித்தாய்;

(வி-ரை) பிரமபுத்திரர்களாகிய சனகர், சநாதனர், சனந்தனர், சனற்குமாரர் என்ற நால்வர்க்கும் தக்ஷிணாமூர்த்தி வடிவாகி ஒளிநெறி காட்டிய விவரத்தை நக்கீரர் எழுகூற்றிருக்கையில் பரக்கக் கூறியுள்ளோம். அங்குக் காணவும். இனி ஒரு ஆலமரத்தின் நீழலிலே அகஸ்தியன், புலஸ்தியன், ஜனகன்,

சனற்குமாரன் என்னும் நான்கு இருடிகளுக்கும் தன் சொருப மான திருமேனியைக் காட்டியருளினன் என்பதும் உண்டு. ஆனல் "ஒளிநெறி" என்பதை நோக்கும் போது முன்னர்க் கூறியது சிறக்கும் எனலாம். நக்கீரரும் "ஆல நீழல் அன்றிருந்து அறநெறி, நால்வர் கேட்க நன்கினிதுரைத்தனை" என்றதும் ஒப்பு நோக்குக. விருட்சங்களுக்குள்ளே வட விருட்சம் (ஆலமரம்) சிறந்ததாகும்; ஆதலின் **ஓர்ஆல்** என்றது. "**உன்** கழல் இரண்டும்" என்றும் பாடம்.

**நாட்டம் மூன்ருகக் கோட்டினை**

(இ-ள்) நாட்டம் – கண்கள்,
மூன்ருக – மூன்ருகும்படி (நெற்றியிலும் ஒன்று); கொண்டு,
கோட்டினை – புருவம் நெரித்து (இருளைத் துரந்தாய்)

(வி-ரை) சிவபெருமானுக்குச் சூரியன், சந்திரன், அக்னி என்ற மூன்றையும் கண்ணுகக் கூறுவது வழக்கம். இம்மூன்று சுடர்களையும் கொண்டு, செறிந்த அந்தகாரமான இருட்டையும் ஓட்டியருளுகின்ருர் என்பது உணர வேண்டுவது, பிரமன் முதலாய ஆத்மாக்களுக்கும் கூடக் கட்புலனுகாத பதார்த்தங்களை இவர் மூன்ருவதாக ஒருகண் நெற்றியில் கொண்டு இருளை யோட்டிக் காண்கின்ருர் என்றபடி. கோட்டுதல்—கோணுதல்; கண் கோணுதலாவது— புருவம் நெரித்தல்; இது சினக்குறி.

**இருநதி அரவமோடு ஒருமதி சூடினை**

(இ-ள்) அரவமோடு – நாகப்பாம்பினேடு
இருநதி - பெரிய கங்கா நதியையும்
ஒருமதி - ஒப்பற்ற பிறைச் சந்திரனையும்
சூடினை - (சிரசில்) அணியாகச் சூடியுள்ளாய்;

(வி-ரை) கங்கை தங்கும் சடையையும், பிறையாகிய கண்ணி யையும் சேர்த்துக் கட்டுகின்றது அரவம் என்ற நயம், "அரவமோடு" என்ற தொடரை இடையிற்பெய்து அமைத் திருத்தலால் பெறப்படும். இரு நதி–நதிக்குப் பெருமை தூய்மை. ஒருமதி-பிறைக்கு ஒப்பின்மை ஒரு காலத்திலும் முதிராமை.

**ஒருதாள் ஈரயில் மூவிலைச் சூலம்**
**நாற்கால் மான்மறி ஐந்தலை அரவம்**
**ஏந்தினை**

(இ-ள்) ஒருதாள் - ஒற்றைக்காம்பினையும்
ஈரயில் - ஈர்கின்ற கூர்மையினையும் கொண்டுள்ள
மூவிலைச்சூலம் - மூன்று இலைவடிவினதாகிய சூலத்தையும்
நால்கால் - நான்கு கால்களையுடைய
மான்மறி - மான் கன்றினையும்
ஐந்தலை அரவம் - ஐந்து தலைகளையுடைய நாகத்தையும்
ஏந்தினை - கைகளிலே தரித்துள்ளாய்;

(வி-ரை) மூவிலைச்சூலத்தில், மூன்று இலைகளும் பிரம்மா, விஷ்ணு உருத்திரன் என்ற மூவரையும் குறிப்பது என்றும், அதன் ஒற்றைக்காம்பு பிரணவத்தைக் குறிப்பது என்றும், மான்மறியின் நான்கு கால்களும் நான்கு வேதங்களைக் குறிப்பது என்றும், அரவத்தின் ஐந்தலை பஞ்சாட்சரத்தைக் குறிப்பது என்றும், உட்பொருள் கூறுவர் சான்றோர். அயில் - கூர்மை; ஈர் அயில் - மிக்க கூர்மை.

**காய்ந்த நால்வாய் மும்மதத்து**
**இருகோட் டொருகரி யீடழித்து உரித்தனை**

(இ-ள்) காய்ந்த - தன்மேல் கோபித்து வந்த
நால்வாய் - தொங்குகின்ற வாயினையும்
மும்மதத்து - மூன்று மதநீர்ப் பெருக்கினையும்
இருகோடு - இரண்டு தந்தங்களையும் (உடைய)
ஒரு கரி - ஒரு ஆண் யானையினது
ஈடு அழித்து - வலியைக் கெடுத்து
உரித்தனை - (அதன்) தோலை உரித்துப் போர்வையாக் கொண்டாய்;

(வி-ரை) "நிழலொடு மறலும் யானை" என்பதால் "காய்ந்த" என்றதுமாம்; யானைக்குச் சினத்தல் இயல்பு. "பனைக்கை மும்மத வேழம் உரித்தவன்" என்றார் அப்பர்சுவாமிகளும், உரித்த வேழம் - தாருக வனத்து முனிவர் ஏவியது.

**ஒருதனு இருகால் வளைய வாங்கி**
**முப்புரத்தோடு நானிலம் அஞ்சக்**
**கொன்று தலத்துற அவுணரை அறுத்தனை**

(இ-ள்) ஒரு தனு - ஒப்பில்லாத (மேரு மலையாகிய) வில்லை
இருகால்வளைய வாங்கி - இரண்டு முனையும் சேர வளையும்படி வணக்கி,
அவுணரை - (தாரகாட்சன், கமலாட்சன், வித்யுன்மாலி என்ற) அசுரர்களை
நானிலம் அஞ்ச - பூமியில் உள்ளார் பயப்படும்படி
கொன்று-(புன்சிரிப்பால்) எரித்துக் கொன்று
முப்புரத்தோடு (அவர்களது அரண்களாகிய) திரிபுரத்தோடு
தலத்துற - மண்ணில் வீழ்ந்து கிடக்கும்படி
அறுத்தனை - செகுத்தாய்;

(வி-ரை) வில்லாக வளைத்த மேருமலை பொன்மலையாதலின் அதனை 'ஒரு தனு' என்றார். கால்-தலை, முனை. நானிலம் - இடவாகுபெயர். அவுணரைக் கொன்று முப்புரத்தோடு தலத்துற அறுத்தனை என இயைக்கவும்.

**ஐம்புலன் நாலாம் அந்தக் கரணம்**
**முக்குணம் இருவளி ஒருங்கிய வானோர்**
**ஏத்த நின்றனை.**

(இ-ள்) ஐம்புலன் - சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்ற ஐந்து புலன்களையும்
நாலாம் அந்தக் கரணம் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்கிற அந்தக்கரணங்கள் நான்கினையும்
முக்குணம் - சாத்துவிதம், ராசதம், தாமதம் என்கின்ற மூன்று குணங்களையும்
இரு வளி - பிராணன், அபானன் என்கிற இரண்டுவாயுவையும்
ஒருங்கிய – மூலாதாரத்திலே ஒடுக்கிக்கொண்டு ஏகாக்கிர சித்தராயிருந்துள்ள,
வானோர் - சிறந்த யோகியர்,
ஏத்த நின்றனை - துதிக்க நின்றருளினாய்;

(வி-ரை) புறக்கரணங்கள் ஐந்து, அகக்கரணங்கள் நான்கு, குணம் மூன்று, வளி இரண்டு இவற்றை ஒடுங்கச் செய்தால் ஒன்றியமனம் ஏற்படும். அப்போது சித்தம் இறைவனிடத்திலேயே இலயித்து நிற்கும்.

ஒருங்கிய மனத்தோடு
இருபிறப்போர்ந்து முப்பொழுது குறைமுடித்து
நான்மறையோதி ஐவகை வேள்வி
அமைத்து ஆறங்க முதலெழுத்தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்
பிரமபுரம் பேணினை

(இ-ள்) ஒருங்கிய மனத்தோடு- (உணவு, உறக்கம், அச்சம், புணர்ச்சி என்று இவற்றில் செல்லும்) மனத்தைப் பரமசிவனுடைய திருவடிகளிலே பொருந்த வைத்தவர்களாய்,-

இரு பிறப்பு ஓர்ந்து - முன்னர்த் தாம் தம் தாய் வயிற்றுப் பிறந்த கருமபிறப்பையும், உபநயனத்தின் பின்னர் உண்டாகும் ஞானப் பிறப்பையும் தெள்ளத் தெளிய விசாரித்து அறிந்து

முப்பொழுது-காலை, உச்சி, மாலை என்ற மூன்று சந்தியிலும்

குறை முடித்து-செய்ய வேண்டிய கர்மாக்களான அனுஷ்டான, ஜப, தர்ப்பண, ஓமங்களைச் செவ்வனே செய்து முடித்து,

நான்மறை ஓதி-(இருக்கு,யசுசு, சாமம், அதர்வணம்என்கின்ற) நான்கு வேதங்களையும் ஓதி

ஐவகை வேள்வி அமைத்து-பித்ரு, தேவ, மனுஷ்ய, பிரம, பூத யக்ஞங்களாகிய ஐந்து வேள்விச் சடங்குகளையும் சரிவர அமையச் செய்து

ஆறு அங்கம் முதலெழுத்து ஓதி-'ஓம்' என்ற பிரணவத்தோடு தொடங்கி, சிட்சை, வியாகரணம், சந்தஸ், நிருக்தம், ஜோதிடம், கல்பம் என்ற

வேதாங்கங்கள் ஆறினையும் [அறியச் சொல்லி,—

வரன்முறை பயின்று-தொன்றுதொட்டுப் பரம்பரையாக வருகின்ற உச்சரிப்புமுறை, ஸ்வரம் முதலியவற்றை ஓதியோதி மனத்தில் பயில வைத்து,

எழு—ஆகாயத்தில் எழுகின்ற

வான் தனை-மேகங்களை (மழை பொழியும்படி செய்ய)

வளர்க்கும்-வேள்வித் தீ வளர்த்து [அதனில் தேவலோகத்தி லுள்ள தேவர்களுக்கு அவி கொடுத்து] மழையை வருவிக்கும்

பிரமபுரம்-பிராம்மணோத்தமர்கள் வாழும் பிரமபுரம் என்னும் சீகாழித் திருப்பதியைக் கோயிலாக் கொண்டு

பேணினை-விரும்பி எழுந்தருளியுள்ளாய்;

(வி-ரை) இருபிறப்பு—கர்ம மடியாகப் பிறக்கும் பிறப்பு ஒன்று; பிரம்மோபதேசம் பெற்ற பின்பு வரும் ஞானப்பிறப்பு இரண்டு: இந்த இரு பிறப்பாளரை 'த்விஜர்' என்பர். இவர் அந்தண ராவர். வேதம் ஓதுதற்கும், ஓதுவித்தற்கும் தகுதி பெற்றவர்.

குறை- கட்டாயம் செய்ய வேண்டிய நியம காரியம்; இதனைச் செய்யாவிடில் குறை ஏற்படும். அந்தணர்கள் காலை, மத்தியானம், மாலை ஆகிய மூன்று சந்திகளிலும் சந்தியா வந்தனம் காயத்ரி ஜபம் இவற்றைச் செய்தே தீர வேண்டும். பிராம்மணனுக்குக் குலதனம் வேதம், எனவே, அவற்றை ஓத வேண்டும். "ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்" என்றாள் தமிழ் ஔவையும். "மறப்பினும் ஓதிக்கொளலாகும்" என்றார் வள்ளுவனாரும். "பிராம்மணனுக்குப் பித்துப் பிடித் தாலும் வேதம் சொல்லுமாப் போலே" என்பது வியாக்யான பங்க்தி. இவற்றையெல்லாம் உளங்கொண்டு ஞானசம்பந்தர் "நான்மறை **யோதி** என்றும், "ஆறங்கம் முதலெழுத்து ஓதி" என்றும் "வரன்முறை **பயின்று**" என்றும் ஒருமுறைக்கு மும் முறை உறையச் சொல்லி, அத்தகைய சிரேட்டர்கள் தீயோம்பி வான் வழக்கம் காணும் பெற்றிமையோராய் வாழும் பிரம புரம் என்று சீகாழியைச் சிறப்பித்து, அத்தகைய சீர்மையை

யுடைய சீகாழிப்பதியில் நீ விரும்பிக் கோயில் கொண்டுள்ளாய் என இறைவனை நோக்கிக் கூறினார்.

ஐவகை வேள்வி-இவற்றின் விவரம் பின்னர் உரைகளில் கூறுவோம்; ஆங்குக் கண்டு கொள்க. ஆறு அங்கம்-வேதம் கற்பதற்கு முன் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டிய அம்சங்கள் ஆறு. அவை வேதாங்கங்கள் எனப்படும், அவைகளை முன்னர்க் குறித்தாம். இனி ஐவகை வேள்வி என்பதை-சிவபூஜை, குருபூஜை, மகேசுவர பூஜை, அந்தண சத்காரம், அதிதி சத்காரம் (சத்காரம்-உபசரிப்பு) எனக் கொண்டும்; ஆறங்கம் என்பதை-ஆறு தொழில்கள் எனக் கொண்டும் உரை வகுப்பாரும் உளர்; பொருந்துமேற் கொள்க. முதலெழுத்து-ஓங்காரம். "ஓம்" என்னும் பிரணவம்; இது ஏகாட்சரம். இதனுள், அகார, உகார, மகார மூன்றும் இயைந்து ஓரெழுத்தாயிற்று. இதன் தத்துவார்த்தம் வாக் கிறந்தது! வரன்முறை பயிலல்-வேதம் குரு-சிஷ்ய பரம்பரையாக ஓதி அறிய வேண்டியதொன்று; அஃது உதாத்தம் (எடுத்தல் (ஓசை) அநுதாத்தம் (படுத்தலோசை) ஸ்வரிதம் (நலிதல் ஓசை) முதலான ஸ்வரங்களோடு சற்றும் பிறழாமல் அபசப்தம் கலசாமல் ஓத வேண்டிய நிர்பந்தங்களை உடைய தென்பது ஈண்டு உணர்த்தப்பட்டது. இத்தகைய பிராமண சிரேட்டர்கள் வருணஜபம் முதலியன செய்து, வேள்வித் தீ வளர்த்து, அவிர்ப்பாகம் கொடுப்ப, வான் பிலிற்றும் என்பது நூல்துணிபு. 'தீயோம்பி வான்வழக்கம் காண்பார்" என்றார் குமர குருபரர். இனி,

" அருமறை யந்தணர் மன்னும் இருக்கையான
ஆகுதியின் புகை மடுத்த அம்பொன்மாடப்
பெரு மறுகுதொறும் வேள்விச் சாலை யெங்கும்
பெறும் அவிப்பாகம் கொடுக்கும் பெற்றிமேலோர்
வருமுறைமை அழைத்துவிடும் மந்திரமெம்மருங்கும்...
... ... ... ... ... ... ... ... ... ... ... ...
நெருங்கும் எல்லாத் தேவரையும் அணித்தாகக் கொண்டு
செல்லும்"

என்றும், "மங்குல் தோய் மாடச்சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும், அங்கவை பொழிந்த நீரும் ஆகுதி புகைப்பால்

நாறும்'' என்றும், சேக்கிழார் கூறியுள்ளவற்றை ஈண்டு நினைக. மற்றும் "அவர் கற்பின் நின்றது காலமாரியே'' என்றது போல, "வேதம் ஓதும் வேதியர்க் கோர்மழை'' என்ற பெரு வழக்கும் காண்க. "வாழ்க அந்தணர்.........வீழ்க தண்புனல்'' என்று இவரே வாழ்த்தியுள்ளமையும் நோக்கற்பாலது.

[கவனிக்க வேண்டிய முக்கிய குறிப்பு:—இனி 24ஆம் வரி முதற்கொண்டு இச்செய்யுள் முடியும் வரை வந்துள்ள பகுதியில் ஞானசம்பந்தர் தாம் பிறந்த ஊராகிய சீகாழிக்கு வழங்கும் 12 திருப்பெயர்களையும் முறைப்படுத்தி உளங் கொண்டு உருச்சொல்லுமாறு பொதிய வைத்துள்ளார். அப் பெயர்கள் பின்வருமாறு :—பிரமபுரம், வேணுபுரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம். புறவம், சண்பை, காழி, கொச்சை (கொச்சைவயம்), கழுமலம் என்பன. இவற்றின் பெயர்க் காரணம் மேல் விளக்க உரையில் கூறப்படும்] இங்கு வந்துள்ள **பிரமபுரம்**—பிரமன் தனது சிருஷ்டித் தொழிலைப் பெற வேண்டிப் பூசித்துப் பெற்றமையால் வந்த பெயர்.

**அறுபதம் முரலும் வேணுபுரம் விரும்பினை**

(இ-ள்) அறுபதம் - ஆறு கால்களையுடைய வண்டுகள்
முரலும் - இசைபாடும் (பொழில்கள் சூழ்ந்த)
வேணுபுரம் - சீகாழியை
விரும்பினை - ;

(வி-ரை) அறுபதம்-வண்டுக்குப் பண்புத்தொகையன்மொழி.
**வேணுபுரம்** - இந்திரன் சூரபதுமனால் துன்புற்று மூங்கிலுருக் கொண்டு பூசித்தமையால் வந்த பெயர்.

**இகலி அமைந்துணர் புகலி யமர்ந்தனை**

(இ-ள்) இகலி - (சூரபதுமனோடு) மாறுபட்டு
அமைந்து - [அவனிடத்துத் தோற்று வருத்தமுற்று] யுத்த மொழிந்து
உணர் - (பின்பு) பரமேச்வரனது திருவடியே தஞ்சம் என்று உணர்ந்து,

புகலி - இந்திரன் முதலிய தேவர்கள் புகல் புகுந்த சீகாழிப் பதியை
அமர்ந்தனை - விரும்பினாய்-

(வி-ரை) அமர்தல்-விரும்புதல், புகலி-சூரபதுமனால் வருத்த முற்ற இந்திரன் முதலிய தேவர்கள் புகல் அடைந்தமையால் வந்த பெயர். இனி, இகலிய-பகைத்த சூரபதுமனின், மைந்து-வலிமை, உணர்-உணர்ந்து என்று கூறுவாரும் உளர்.

**பொங்குநாற் கடல்சூழ் வெங்குரு விளங்கினை**

(இ-ள்) பொங்கு - (அலைகள்) கிளர்ந்தெழுந்து மேல்வந்து
நால்கடல் சூழ் - நான்குபுறங்களிலும் கடல் நீரால் சூழப்பட்ட
வெங்குரு - சீகாழிப்பதியில்
விளங்கினை - புகழொடு திகழ்கின்றாய்;

(வி-ரை) **வெங்குரு** - சுக்கிரன், 'நாம் அசுரர் அனைவருக்கும் குருவாயிருக்கின்றோம்' என்று கொண்ட அகங்காரம் காரண மாக வெங்குருவாய்ச் செலுத்தி வந்த அதிகாரத்தை மாற்றி, அவன் மீண்டும் பூசிக்க அருள் புரிந்தமையால் வந்த பெயர். இனி தேவ குருவாகிய பிரகஸ்பதி அகங்கரித்தான் என்று கூறுவாரும் உண்டு. நாற்கடல் சூழ்ந்தது–கற்பாந்த வெள்ளத்தின் போது என்க.

**பாணிமூ வுலகும் புதையமேல் மிதந்த**
**தோணிபுரத்து உறைந்தனை**

(இ-ள்) பாணி – நீரானது (பிரளயமாய்ப் பெருகி)
மூவுலகும் புதைய – பூமி, ஆகாசம், சுவர்க்கம் என்ற மூன்று லோகங்களையும் புதைப்ப
மேல் மிதந்த - (அதைச் சங்காரம் பண்ணி அடக்கி) அதன் மேலே (தோணிபோல) மிதந்த
தோணிபுரத்து - சீகாழியிலே
உறைந்தனை – கோயில் கொண்டுறைகின்றாய்;

(வி–ரை) **தோணிபுரம்**—உலகனைத்தையும் அழிக்க வந்த கற்பாந்த வெள்ளத்தில் அழியாமல் தோணிபோல மிதந்தமை யால் வந்த பெயர். பாணி-நீர்; மேல்வரும் 'தோணி' என்பதற் கேற்ப எதுகை கொண்டு வந்தது எனலாம்.

**தொலையா இருநிதி**
**வாய்ந்த பூந்தராய் ஏய்ந்தனை**

(இ-ள்) தொலையா இருநிதி - வேண்டினர் வேண்டியது கொடுத்தும் தொலையாமல் மேன்மேலும் மாறாது கொடுக்கும் வரத்தைப் பெற்ற பதுமநிதி, சங்கநிதி என்ற இருநிதிகளும்
வாய்ந்த – பொருந்தியிருக்கின்ற
பூந்தராய் - சீர்காழியிலே
ஏய்ந்தனை – எழுந்தருளியிருக்கின்றாய்;

(வி-ரை) **பூந்தராய்**—பதுமநிதி, சங்கநிதி எனும் இருநிதிகளும் வேண்டுவோர் வேண்டிய வண்ணம் தொலையாமல் கொடுக்கத்தக்க வரத்தைப் பெறும் காரணமாக முறையே பூவும் தராயும் கொண்டு பூசித்தமையால் வந்த பெயர்- பதுமநிதி பூக்கொண்டும், சங்கநிதி தராய்க் கொண்டும் பூசித்தது என்க. தராய் - ஒருவகைப் பூண்டு; கீரை வகையினது, கீழ் நோக்கிச் செழித்து வளரும் பிரமிப்பூண்டு என்பர். சிந்தாமணியில் "தராய்ச்சாறு" என வருதலை நோக்கியபோது, இது மருந்துப் பூண்டு எனத் தெரிகிறது. மற்றும் தொலையாத வரத்தைக் கொடுத்தருளியபின் சிவபெருமான் மகா சங்கார காலத்திலும் தம்முடைய திருக்கைகளிலே பூவும் தராயுமாய் ஏந்தியருளும் வரப்பிரசாதமும் கொடுத்தருளினதால் பூந்தராய எனப் பெயருண்டாயிற்று.

**வரபுரம் என்றுணர் சிரபுரத் துறைந்தனை**

(இ-ள்) வரபுரம் என்று - அத்விதீயமான புரம் என்று
உணர் - உணரத்தக்கதான
சிரபுரத்து - சீகாழியிலே
உறைந்தனை - கோயில் கொண்டுள்ளாய்;

(வி-ரை) **சிரபுரம்** — விஷ்ணுவானவர் திருப்பாற்கடலில் தோன்றிய அமிர்தத்தைத் தேவர்களுக்குப் பகிர்ந்து கொடுக்குங் காலத்து அவர்களோடு மறைந்துண்டு பின் சட்டுவத்தால் வெட்டுண்ட இரண்டு அசுரர்களது **சிரங்களும்** சிவபெருமானைப் பூசித்து இராகு கேதுக்களாகிய கிரஹநிலையைப் பெற்றமை

யால் சிரபுரம் எனப் பெயருண்டாயிற்று. [இச்சொல் தலைமை பெற்றபுரம் என்றும் ஒருபொருள் தோன்ற நின்றது]

வரபுரம்—வரம்-சிரேட்டம், இணையற்றது என்று பொருள் பட்டு ஒப்பதும் மிக்கதும் இல்லாத ஒன்றுக்கு வரும். எனவே அத்விதீயம். அத்விதீயம் - இரண்டல்லாதது, ஒப்பில்லாதது, இஃது ஒன்றே என்றபடி. இங்கு வரம் என்ற சொல் தன் பொருளாற்றலால் ஒப்பற்ற தன்மையைக் காட்டி "ஒரு" என்பதன் பரியாயச் சொல்லாக வந்துள்ளது. ஆக, வரபுரம் என்ற பாடமே தொன்றுதொட்டு வருவது. இதனை 1896-இல் சுப்பராய நாயகர் அவர்கள் இயற்றிய பெரியபுராணத்துப் பொழிப்புநூல் உரையிலும் (பக்கம் 107), கி. பி. 1886-இல் ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் இயற்றிய பெரியபுராணப் பதவுரை நூலிலும் (பக்கம் 143) நாம் அறியலாம். அங்ஙனிருப்ப சிலர் "ஒருபுரம்" என்றே பாடமுண்டு எனச் சாதிப்பர். அன்னூர் "எண்கள் அப்படியே வரவேண்டும் என்ற கொள்கையினர் போலும். அஃது வேண்டுவதின்று. அந்த எண்ணின் சூசகமான சொற்கள் லக்ஷணையாகவோ, லக்ஷித லக்ஷணையாகவோ வந்து பரியாயமாகலாம். இனி, வரபுரம் என்பதற்கு—வரத்தைத் தருவதானபுரம் என்று பொருள் கூறுவர். அப்போதும் அதன் ஒப்பற்ற தனிப் பெருமைதான் விளங்கும். எனவே, வரபுரம் என்ற தொல்வரவை விட்டு ஒருபுரம் என்று மாற்றவேண்டிய நியதியின்று.

**ஒருமலை யெடுத்த இருதிறல் அரக்கன்**
**விறல்கெடுத் தருளினை**

(இ–ள்) ஒருமலை - ஒப்பற்ற பெருமையுள்ள கயிலாய மலை யாகிய நினது இருக்கையை
எடுத்த - தூக்க முயன்ற
இருதிறல் - மிக்க புயவலிமை படைத்த
அரக்கன் - இராவணனுடைய
விறல் - ஆற்றலை
கெடுத்து - போக்கி
அருளினை – அவனுக்கு அருள் புரிந்தாய்;

(வி-ரை) இராவணன் வெள்ளிமலையைத் தூக்கி அபசாரப் பட்டதையும், அவனுக்குச் சிவபிரான் பின்னர் அருள்புரிந்த

தையும் சம்பந்தர் தமது தேவாரப் பதிகம் ஒவ்வொன்றிலும் எட்டாம் பாடலில் வைத்துப் போருவர். (அதே மாதிரி நாவுக்கரசர் தமது தேவாரப் பதிகத்து ஈற்றுப் பாடலில் வைத்துப் போருவர்). ஈண்டும், சம்பந்தர் சீகாழிக்கு எட்டாவது எண்பட மேல்குறித்துள்ள புறவம் என்ற பெயரோடு, இந்த இராவண விருத்தாந்தத்தை ஒருசேர வைத்திருத்தலைக் கூர்ந்து நோக்குக.

**புறவம் புரிந்தனை**

(இ-ள்) புறவம்-சீகாழிப் பதியை
புரிந்தனை - விரும்பி எழுந்தருளினாய்;
(வி-ரை) புறவம்—கௌதம முனிவர் இட்டசாபத்தினால் நர மாமிசம் உண்ணும் புரு வடிவம் பெற்ற பிரஜாபதி முனிவர் அச்சாபம் நீங்கப் புருவடிவோடிருந்து பூசித்தமையால் வந்த பெயர். புரிதல்-விரும்புதல்.

**முந்நீர்த் துயின்றோன் நான்முகன் அறியாப்**
**பண்பொடு நின்றனை**

(இ-ள்) முந்நீர் - சமுத்திரத்திலே (திருப்பாற்கடலிலே)
துயின்றோன் - யோக நித்திரை செய்கின்ற திருமாலும்
நான்முகன் - பிரமனும்
அறியா - அடியும் முடியும் (முறையே தேடியும்) அறிய மாட்டாத
பண்பொடு - (மேலாம்) தன்மையோடு
நின்றனை – நின்றருளினாய்;

(வி-ரை) மாலும் நான்முகனும் காணாத தன்மையைத் தமது தேவாரத் திருப்பதிகத்து ஒவ்வொன்றிலும் ஒன்பதாம் பாடலில் அமைத்துப் பாடுவர். அதற்கேற்பவே இங்குச் சீகாழிக்கு ஒன்பதாம் எண்பட மேல்குறித்துள்ள சண்பை என்ற பெயரோடு, இந்த இருவர் காணா விருத்தாந்தத்தை ஒருசேர வைத்திருத்தலையும் நோக்குக.

**சண்பை அமர்ந்தனை**

(இ-ள்) சண்பை - சீகாழிப்பதியை
அமர்ந்தனை – விரும்பி எழுந்தருளியுள்ளாய்;

(வி–ரை) **சண்பை** - துருவாச முனிவர் தாமிட்ட சாபத்தின்படி கோபால குமாரர்கள் **சண்பைக்** கதிர்களால் ஒருவரோடொருவர் தம்முள் அடித்துக்கொண்டு மடிய, அங்ஙனம் மடியச் செய்த பாவம் நீங்கப் பூசித்தமையால் வந்த பெயர்.
அமர்தல் - விரும்புதல், தங்குதல். "நின்றனை ...அமர்ந்தனை" என்ற முரணழகு காண்க. (வரி-35)

**ஐயுறும் அமணரும் அறுவகைத் தேரரும்**
**ஊழியும் உணராக் காழி யமர்ந்தனை**

(இ-ள்) ஐயுறும் - சந்தேகப்படும்படியே விடையிறுக்கின்ற
அமணரும் - சமணர்களும்
அறுவகை - எல்லாம் கணத்திலே தோன்றி **அற்றுப்** போகும் என்ற வகையினைச் சேர்ந்த
தேரரும் - பௌத்தரும்
ஊழியும் உணரா - ஊழிக்காலத்தும் அறியமாட்டாத
காழி - சீகாழியில்
அமர்ந்தனை - விரும்பி எழுந்தருளியுள்ளாய்;

(வி–ரை) ஐயுறும் அமணர் என்றது—அவர்களது "அநேக மாந்தவாதம்" நோக்கி என்க. அஃதாவது, உடம்பெடுத்ததற்கு முன் ஜீவன் உண்டோ இல்லையோ என வினயவழி 'உண்டாம், இல்லையாம், உண்டும் இல்லையாம், சொல் லொணுததாம், உண்டுமாஞ் சொல்லொணுததாம், இல்லையு மாம் சொல்லொணுததாம், உண்டுமில்லையுஞ் சொல்லொணுத தாம்' என்ற ஏழுவகையான் விடையிறுத்தல். கேட்ட வினுக்களுக்கெல்லாம் இவ்வாறே விடையிறுக்கப்படும் [ஆம் என்பது ஈண்டுச் 'சற்று' என்னும் பொருளது]. ஆகவே ஐயம் நீங்காதபடியே விடைகூறும் சமணர் என்றபடி. இத்தகைய சந்தேக வியக்திகள் ஊழிக் காலத்தும் உண்மை உணரார். இனி வேத வேதாந்த ஆகமங்களிலே கூறப் பட்டுள்ள உண்மைப் பொருள்களின் ஊற்றத்தைச் சந்தேகிப்பவர் சமணர்கள் எனினுமாம். ஆகவேதான் அவர்கள் சம்பந்தரை வாதுக்கு அழைத்தனர். இனி, தேரர்-பௌத்தர். இவர்களை **அறு**வகைத் தேரர் என்றது-எல்லாப் பொருள்களும் கணந்தோறும் (க்ஷணந்தோறும்) தோன்றி **அற்று** அழிந்து போகும் என்ற கொள்கையினராதல் பற்றி.

இவர்களைக் "கணபங்கவாதி"என்பர். இந்தப் பௌத்தர்-நான்கு வகைப்படுவர்; மாத்யமிகர், யோகாசாரர், சௌத்ராந்திகர், வைபாடிகர் என. இவர்களுள் மாத்யமிகர்—எல்லாப் பொருள் களும் சூன்யம் என்பர். (சூன்யவாதி); யோகாசாரர்-புறப் பொருள் சூன்யம் என்பர் (விஞ்ஞானவாதி); சௌத்ராந்திகர்-புறப்பொருள் உண்மை வழி அளவையான் அறியப்படும் என்பர் (சமுதாயவாதி); வைபாடிகர்-புறப்பொருள் காட்சிப் பொருள் என்பர். (இவர்களும் சமுதாய வாதிகளே). இத்தகைய 'க்ஷணபங்க வாதிகள்' ஊழிக்காலத்திலும் உண்மையை உணரார். இப்படி, கணபங்க வாதிகளாதல் நோக்கித் தேரரை "அறுவகைத் தேரர்" என்றது ஓர்க. இனி, சிலர் ஆறுவகைப்பட்ட சுவையுடைய பண்டங்களை உச்சிப் போதுக்கு முன்னே புசிக்கின்றதே பொருள் என்றிருக்கின்ற பௌத்தர் என உரை கண்டனர்; பொருந்துமேற் கொள்க. **காழி**-காளிதன் என்னும் சர்ப்ப ராஜன் பூசித்து வேண்டிய வரத்தைப் பெற்றமையால் வந்த பெயர்.

**எச்சன் ஏழிசையோன் கொச்சையை மெச்சினை**

(இ-ள்) எச்சன் - யாகம் செய்வோனும், யாகதேவதையும் நீயே:
ஏழிசையோன்–ஏழிசை வடிவமாயிருப்பவனும் நீயே: [அப்படிப் பட்ட நீ]
கொச்சையை - சீகாழிப்பதியை
மெச்சினை - மெச்சி அமர்ந்துள்ளாய்;

(வி-ரை) **கொச்சை** அல்லது **கொச்சைவயம்** :—பராசர முனிவர் மச்சகந்தியைப் புணர்ந்ததனால் உண்டாகிய உடலின் துர்க்கந் தம் நீங்கப் பூசித்துப் பழிச்சொல் நீங்கப் பெற்றமையால் வந்த பெயர். பராசரர் "அடியேனைப் பற்றின துர்க்கந்தத்தை விடு விக்கவேண்டும்" என்று விண்ணப்பம் செய்தபோது சிவபிரான் "இவனென்ன **கொச்சை** முனியோ" என்று வினவியதால் அந்தக் கொச்சைஎன்பதே அவன் எழுந்தருளியிருக்கின்ற திருப்பதிக்கும் பெயராயிற்று என்ப. எச்சன்-யக்ஞன்; யாகம் செய்வோன், யாக தேவதை. இங்கு அந்தச் சொல் யாக தேவதைக்கு (யக்ஞ புருஷனுக்கு) வந்தது. யாகத்தில் அவிர்ப் பாகம் பெறும் தேவதையாய் இருக்கிறாய். "யக்ஞோ

யக்யபதிர் யஜ்வ யக்ஞாங்கோ யக்ஞ வாகன:, யக்ஞப்ருத் யக்ஞக்ருத் யக்ஞி யக்யபுக் யக்ஞ ஸாதன: யக்ஞாந்தகிருத் யக்ஞ குஹ்யம் மன்ன மன்னுதியேவச" (104, 105 ஸ்ரீ விஷ்ணு ஸஹஸ்ரநாம ஸ்தோத்ரம்). ஏழிசையோன்–ஏழிசை வடி வானவன் சிவபிரான் என்பர். ஏழிசை–குரல் துத்தம் கைக்கிளை உழை இளி விளரி தாரம் என்பது. இதனை சப்தஸ்வரம் என்பர். "ஏழிசையாய் இசைப்பயனுய்'' என்ருர் சுந்தரரும். ஏழிசையைப் பற்றி முன்னர் நக்கீரர் நூலுரையில் காணவும்.

**ஆறுபதமும் ஐந்தமர் கல்வியும்|**
**மறைமுதல் நான்கும்**
**மூன்று காலமும் தோன்ற நின்றனே.**

(இ–ள்) ஆறுபதமும் - ஆறுசொற்களாகிய பெயர், வினை, இடை, உரி, வடசொல், திசைச்சொல், என்ற ஆறுபதங்களும்,
ஐந்து அமர் கல்வியும் - மெய், வாய், கண், மூக்கு, செவி என்ற ஐம்பொறிகளால் கற்கின்ற கல்வியறிவும்,
மறைமுதல் நான்கும் – இருக்கு, யஜுஸ், சாமம், அதர்வணம் என்கின்ற நாலு வேதங்களும்,
மூன்று காலமும் - இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என்ற மூன்று காலமும்,
தோன்ற – (நின்னிடத்துத்) தோன்றும்படி
நின்றனே - [கழுமலம் என்றதோர் பெயரினையும் கொண்ட] சீகாழிப்பதியில் நின்றருளினுய்;

(வி–ரை) பதம்–சொல் என்பதன் பரியாயமாகும்: பதவியல் என்ருர் பவணந்தியாரும். தமிழ்மொழியில் சொற்கள் ஆறுவகையினவாக வருதலை அறிவோம். வடசொல்லும் திசைச் சொல்லன்ருே தனித்தெடுத்தோதுவதுஎன்னையெனின், அதன் தகுதியும் பெருமையும் நோக்கி என்க. மற்றும் "வடசொற்கிளவி வடவெழுத் தொரீஇ, எழுத்தொடு புணர்ந்த சொல்லாகும்மே'', சிதைந்தன வரினும் இயைந்தன வரையார்'' என்று ஆசிரியர் தொல்காப்பியனுரும் தனிப்பட எடுத்துச் சொல்லியிருப்பதை அறிக. தமிழ் விரகன் ஆதலாலும், நாளும் தமிழ் பரப்பிய காழிச் சம்பந்தனுதலாலும் "ஆறு பதமும் தோன்ற நின்றனே'' என்ருர். இதனுல் **நூலறிவு**

கூறப்பட்டது. இனி, ஐந்து அமர் கல்வி—ஐம்பொறிவாயிலாலான அறிவு. அதாவது கல்வியறிவு. ஆக, இருவகையறிவும் தோன்றச் செய்தனை என்றபடி.

இனி ஆறுபதம்–பிரத்தி, பிரத்தியாகாரம், துல்லியம், துல்லியாதீதம், வித்தை, அவித்தை என்கின்ற 'ஆறுபதங்கள் (நிலைகள்) என்பர். பொருந்துமேற் கொள்க. பிரத்தி-பிரவிருத்தி; இந்திரியங்களை விஷயங்களில் விடுகை; பிரத்தியாகாரம்–இந்திரியங்களை விஷயங்களிலிருந்து திருப்புகை; துல்லியம்-ஒப்பு; துல்லியாதீதம்–ஒப்பிறந்த நிலை; வித்தை–ஆத்மாவுக்கு ஞானத்தைக் கொடுக்கை; அவித்தை-ஆன்மாவுக்கு (ஆணவம், மாயை மூலம்) அஞ்ஞானத்தைக் கொடுக்கை. இந்த ஆறு நிலைகளும் தோன்ற நின்றனை என்றது—எல்லாம் உன் அதீனம், எல்லாம் நீ இட்ட வழக்கு என்றபடி, ஐந்துஅமர் கல்வி–ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம், விரையம் என்கின்றவை பொருந்திய ஐந்து கல்வி என்பர். பொருந்துமேற் கொள்க. (விரையம்-விரைவாக, கம்பனைப் போல் அசுவதாட்டியாக, "விழுந்த ஞாயிறு எழுவதன்முன் கவி பாடியது எழுநூறே" என்பதைப் போல வெகுவேகமாகப் பாடும் கல்வித்திறன். வள்ளலார் அருட்பெருஞ்சோதி அகவல் பாடியதை இதனுள் சேர்க்கலாம்.)

"மறைமுதல் நான்கும்" என்றதால் வடமொழியும் குறிக்கப்பட்டதாகலின் தமிழ்மொழி வடமொழி இரண்டையும் தோற்றினவன் சிவபிரான் என்பதாயிற்று. "வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி அதற்கிணையாக், குடமுனிக்குத் தமிழுரைத்தார் கொல்லேற்றுப் பாகர்" என்றார் பரஞ்சோதி முனிவரும். காலாதீதன் ஆதலின் 'காலம் தோன்ற நின்றனை' என்றது. நின்றது–கழுமலமாகிய சீகாழியில்; தோணிபுரம் ஆதலின்.

**இருமையின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்**
**மறுவிலா மறையோர்**
**கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை**
**கழுமல முதுபதிக் கவுணியன் அறியும்.**

(இ-ள்) இருமையின் ஒருமையும் – சக்தி சிவம் என்ற இரு தத்துவங்களினூடே இரண்டறக் கலந்த நிலையிலேகாணப்படும் ஒன்றிய ஒன்றுந்தன்மையையும் (அதாவது அர்த்த நாரீசுவர மூர்த்தமாய் அம்மையப்பராய் இருக்கும் நிலையையும்)

ஒருமையின் பெருமையும் - (அத்தகைய) ஒன்றிய ஒன்றுந் தன்மையின் உள்ளமைந்துள்ள பெருமையினையும்

மறுவிலா மறையோர் - குற்றமற்ற அந்தணர்கள் வாழ்கின்ற

கழுமலம் முதுபதி - சீகாழியாகிய பழம் பதியிலே இருக்கும்

கவுணியன் - கவுணிய (கௌண்டின்ய) கோத்திரத்துப் பிறந்த இந்த ஞானசம்பந்தன்

அறியும் – நன்கு அறிவான்.

[இங்ஙனம் நன்கு அறிவான் என்பது மெய்ம் மொழியோ எனின், இஃது]

கழுமலம் முதுபதிக் கவுணியன் கட்டுரை [ஆகும்] – பழைய சீகாழிப்பதியிலே வாழ்கின்ற கவுணிய கோத்திரத்து ஞானசம்பந்தனின் பொருள் பொதிந்த பேச்சுக் களாகும்;

(வி–ரை) கழுமலம் - உரோமச முனிவர் கலிக்கஞ்சிச் சிவபெருமானைப் பூசித்துத் தமது மலங்களைக் கழுவப் பெற்றமையால் வந்த பெயர். இருமை - சத்தி சிவம்;-அம்மை அப்பன் என்ற இரு தனிப்பட்ட நிலை; ஒருமை–சிவசக்தி, அம்மையப்பர் என்று ஒன்றாக விவகரிக்கும் நிலை: அர்த்த நாரீசுவர மூர்த்தி நிலை. இந்த இரண்டற இணைந்த ஒருமையின் பெருமையைச் சம்பந்தர்தான் உண்மையாக அறிந்து கட்டுரையாக்கினார். எங்ஙனே என்னில் கூறுதும்:

எடுத்த எடுப்பிலேயே "தோடுடைய செவியன்" என்கிறார். தோடு–பெண்கள் அணிவது, செவியன்-அன், ஆண்பால் விகுதி. மற்றும் அத் தொடக்கப்பாசுரத்திலேயே "செவியன், கள்வன், பெம்மான்" என்று ஆண்பால் விகுதி கொடுத்துத் தெற்றெனக் கூறிவிட்டு, அதே சமயத்தில் "விடையேறி, மதிசூடி, பொடிபூசி என்று இருபாலுக்கும் பொதுவாக வரும்

இகர விகுதியைப் பெய்துகாட்டி இறுதியில் சிகரமாக "இருமை யின் ஒருமையும் ஒருமையின் பெருமையும்" நெஞ்சில் பதியும் படி "இவனன்றே" என்று தேற்றமாக ஆண்பாற் சுட்டுப் பெயர் கொடுத்துச் சுட்டிக்காட்டி "இவன் ஒருத்தன்ருனே பெருமையன்" என்று சித்தாந்தமாக்கினுர்.

கட்டுரை—பொருள் பொதிந்த சொல் என்ருர் அடியார்க்கு நல்லாரும்; கட்டிச் சொல்லும் வார்த்தையன்று என்றபடி, இனி கட்டு-காட்டாகிய, உரை-பாடல் எனக்கூறி, 'காட்டு' என்பது 'கட்டு' எனக் குறுகி நின்றது என்ருரும் உளர். இனி கட்டுரை - பதிகம் எனினுமாம். இந்த ஆழ்ந்த சொற் பொருளைக் கவுணியனே அறியும் என்றதால் "அறிவார் வேறில்லை" என்பது பெறப்பட்டது. இஃது மேலே "நினைய வல்லவர் இல்லை நீள் நிலத்தே" என்றதாலும் குறிக்கப்பட்டுள் ளது. சம்பந்தர் மாத்திரம் அறிவரோ என்னில், அவர் செவ் வேளாதலின் அறியும். இனி, கவுணியன் என்பதைக் கம்+உணி யன் எனப் பிரித்துக் காட்டி, கம்—பிரமனின் கபாலத்தில், உணியன்—உண்கின்றவனே, அறியும் என்பாரும் உளர். அஞ்ஞான்று "கவுணியன் கட்டுரையைக் கம் உணியனே அறியும்" என்று நயம்படக் கூறியதாகக் கொள்க. [கவனிப்பு—அடியேனும் கவுணியனே] இனி, கழுமலமுதுபதிக் கவுணியன் கட்டுரை என்பதற்கு—கழுமலம்-மலம் கழுவப் பெற்ற, முது-அநாதியான, பதி-நித்தியசிவத் தன்மையை அடைந்த, கவுணியன்-ஞானசம்பந்தரின், கட்டுரை—பதிகம் என்றும் உரை கூறுவர். கடைச்சங்க காலத்திலேயே கவுணியன் உண்டு என்பதைக் "கவுணியன் விண்ணந் தாயனுர்" என்ற புலவர் பெயரால் அறிக. மற்றும் தாம் பிறந்த கோத்திரத்தைப் பெருமையுறச் சொல்லிக் கொள்ளுதலை "மதுரைப் பாரத்துவாசி நச்சினுர்க்கினியர்" என்ற தொட ராலும் அறிக.

முதுபதி—பதியெழுவறியாப் பழங்குடி கெழுமியபதி; மூதூர் என்றபடி. கழுமலமுதுபதி—இருபெயரொட்டு. அறியும்-செய்யுமென் முற்று ஆண்பாலுக்கு வந்தது. சீகாழிக்குப் பன்னிரண்டு திருநாமங்கள் அமைந்துள்ளமை இங்கு ஞான சம்பந்தரால் காட்டப்பட்டுள்ளது. இதனை மனங்கொண்டு சேக்கிழாரும் தமது பெரியபுராணத்தில்,

பிரமபுரம் வேணுபுரம் புகலி பெருவெங்குரு நீர்ப்
பொருவில் திருத்தோணிபுரம் பூந்தராய் சிரபுரமும்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவு திருக்கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால்

என்று பாட்டிசைத்தார்.

அனைய தன்மையை யாதலின் நின்னை
நினைய வல்லவர் இல்லைநீள் நிலத்தே

(இ-ள்) அனைய - அப்படிப்பட்ட (மேற்கூறப்பட்டுள்ள)
தன்மையை ஆதலின் - (விழுமிய) இயல்புகளையுடையை யாதலின்
நின்னை - உன்னை
நினைய வல்லவர் – தியானிப்பதற்கும் தகுதி படைத்த வல்லமையுடையோர்
நீள்நிலத்தே இல்லை - இந்தப் பரந்த பூவுலகத்தில் எவரும் இல்லை; (எனவே நீ மனோதீதமானவன் என்றபடி)

(வி–ரை) நினையவல்லவர் என்று-நினைத்தலைக் கூறியிருப்பது ஏனைய வாக்கு காயங்களுக்கும் உபலடசணம் ஆக, திரி கரணங்களுக்கும் அப்பாற்பட்டவன் என்றது. "நீள் நிலத்தே நினைய வல்லவரில்லை'' எனவே, ஒருகால் கயிலாயத்திலே பார்வதி தேவி, நந்தி தேவர், பிருங்கி முனிவர் போன்றோர் ஒரு சிலர் நினையவல்லவராயிருக்கலாம் என்பது குறிப்பெச்சம்.

இனி, ஈற்றடிக்கு - நின்னை நினைக்கவல்லார்களுக்கு மறு பிறப்பு இல்லை என்றும் உரை கூறுவர்; பொருந்துமேற் கொள்க.

திருச்சிற்றம்பலம்

உ

# திருமங்கையாழ்வார்

“ வேலணைத்த மார்வும் விளங்குதிரு வெட்டெழுத்தை
மாலுரைக்கத் தாழ்த்த வலச்செவியும்—காலணைத்த
தண்டையும் வீரக்கழலும் தார்க்கலியன் வாண்முகமும்
கண்டு களிக்குமென் கண்.”

காவிரி புனல் பரந்து பொன் கொழிக்கும் சோழ மண்டலத்தில், திருமங்கை என்னும் நாட்டில், திருவாலி திருநகரி என்ற திவ்விய தேசத்துக்கு அருகிலுள்ள திருக்குறையலூரிலே கள்ளக்குடியிலே கார்த்திகை மாதத்தில் கார்த்திகை நாளில் சார்ங்கம் என்னும் வில்லின் அம்சமாய்த் திருவவதரித்தார் திருமங்கை மன்னன்.

இவர்க்குப் பெற்றோர் இட்டபெயர்: **நீலன்** என்பது. சோழ ராஜனுக்குச் சேனைத் தலைவராயிருந்து வீரங்காட்டிப் **பரகாலன்** என்று பேர் பெற்று வாகை சூடியவர். திருவெள்ளக்குளம் என்ற திருப்பதியில் அவதரித்த குமுதவல்லி நாச்சியாரை மணக்க விரும்பி அவள் நியமித்தபடி தினந்தோறும் ஆயிரத்தெட்டு ஸ்ரீ வைஷ்ணவர்களை அமுது செய்வித்துப் பின் தாம் உண்ணும் கடப்பாடுடையவராய் இருந்தார். “குமுதவல்லி மணாளர்” என்று சிறக்க வாழ்ந்து வந்த இவர், இங்ஙனம் ததீயாராதனம் நடத்தி வருகையில், பொருளனைத்தும் செலவழிந்துவிடவே, மேல் பொருளீட்டிக் கைங்கரியத்தை முட்டுப் படாமல் நடத்தத் திருவுள்ளங் கொண்டு, வழிபறி கொள்ளையில் இறங்கினார். இதனைக் கண்ட இறைவன் ஸ்ரீமந் நாராயணன் இவரை ஆட்கொள்ள நினைந்து, தாமே மணக்கோலத்துடன் இலக்குமிதேவியோடு புறப்பட்டு இவர் வழிபறிக்க எண்ணிப் பதிவிருந்த திருமணங் கொல்லை திருவரசமரத்தின் கீழ் எழுந்தருள, இவர் அவர்களை வளைத்து ஆடைகள் அணிகள் அனைத்தையும் அபகரித்தார். இறுதியில் அவர் அணிந்த காலாழி கழற்ற முடியாமற் போகவே, பற்களால் கடித்து வாங்க முயல, அந்த மிடுக்கை நோக்கி எம்பெருமான் இவர்க்குக் **கலியன்** என்ற பெயரைச் சூட்டினார்.

பின்னர், சுமையாகக் கட்டிய மூட்டையைத் தூக்க முயல இயலாது வருந்தி "என்ன மந்திரவாதம் பண்ணிஞய்" என வாள்வலி காட்டி அச்சுறுத்த, எம்பெருமான் "கிட்டே வாரும் அம் மந்திரத்தை உமக்குச் சொல்லுகிறேம்" என்று கூறி, அவன் காதில் அஷ்டாக்ஷர மகாமந்திரத்தை உபதேசித்துக் கருடாருடராய்த் திருமகளோடு சேவை சாதித்து மறைந்தருள, கலியன் "நான் கண்டு கொண்டேன் நாராயணு என்னும் நாமம்" என மகுடமிட்டு ஓர் பதிகம்பாடி, அதனையே முதலாக் கொண்டு, பெரிய திருமொழி, திருக்குறுந்தாண்டகம், திருநெடுந்தாண்டகம், **திருவெழுகூற்றிருக்கை,** சிறியதிருமடல், பெரியதிருமடல் என்ற ஆறு திவ்விய நூல்களையும் திருவாய் மலர்ந்தருளித் **திருமங்கையாழ்வார்** என்னும் திருநாமம் பெற்ருர். இந்த ஆறு நூல்களையும் மாறன் பணித்த தமிழ் மறைக்கு அங்கங்கள் என்பர்.

இவரது பாடல்கள் நெஞ்சுக்கிருள்கடிதீபம்; அடங்கா நெடும் பிறவி நஞ்சுக்கு நல்லவமுதம்; தமிழநன்னூல் துறைகள் அஞ்சுக்கிலக்கியம்; ஆரணசாரம்; வைணவ சமயத்தின் அச்சாணி

இவர் வடநாட்டுத் திருப்பதிகள் தொடங்கித் தொண்டை நாடு, நடுநாடு, சோழநாடு, பாண்டிநாடு, மலைநாடு இவை களிலுள்ள திருப்பதிகளையும் அநுபவித்து மங்களாசாஸநம் செய்தனர்.

இவர் கையில் வேலேந்தி நிற்பர்; இவர்க்கு "ஆலிநாடர், அருண்மாரி, அரட்டமுக்கி, அடையார்சீயம், மங்கை வேந்தன், கொற்றவேற் பரகாலன், கலியன், கலிகன்றி முதலிய பிருதுகள் உண்டு.

இவர் நூற்றைந்து ஆண்டுகள் வாழ்ந்து திருக்குறுங் குடியில் மகாயோகத்தால் தேஜோமயமான திவ்விய நகரம் சேர்ந்தார். இவர் நம்பெருமாள் சந்நிதியில் பிரார்த்தித்த படியே இன்றும் ஸ்ரீரங்கத்தில் மார்கழி மாதத்தில் அத்தியயந உற்சவத்தில் உபயவேத பாராயணமும் ஒழுங்காக நடந்து வருகிறது குறிக்கொள்ளத்தக்கது.

இவர் நான்கு வகை கவிகளும் பாடுதலில் வல்லவர். ஆதலால் **நாலுகவிப் பெருமாள்** எனப்படுவர். இவர் பாடிய சித்திரகவிதான் இந்தத்திருவெழுகூற்றிருக்கை.

## திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# திருஎழுகூற்றிருக்கை

### நிலைமண்டில ஆசிரியப்பா

ஒருபே ருந்தி இருமலர்த் தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை; ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா மும்மதிள்
இலங்கை இருகால் வளைய ஒருசிலை
ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியின்
அட்டனை; மூவடி நானிலம் வேண்டி
முப்புரி நூலொடு மானுரி யிலங்கு
மார்வினின் இருபிறப்பு ஒரு மாணாகி
ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை;
நால்திசை நடுங்க அஞ்சிறைப் பறவை
ஏறி நால்வாய் மும்மதத்து இருசெவி
ஒருதனி வேழத்து அரந்தையை ஒருநாள்
இருநீர் மடுவுள் தீர்த்தனை; முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை; ஐம்புலன்
அகத்தினுள் செறுத்து நான்குடன் அடக்கி
முக்குணத்து இரண்டவை யகற்றி ஒன்றினில்
ஒன்றிநின்று ஆங்கு இரு பிறப்பறுப்போர்
அறியும் தன்மையை; முக்கண் நால்தோள்
ஐவாய் அரவோடு ஆறுபொதி சடையோன்
அறிவருந் தன்மைப் பெருமையுள் நின்றனை;
ஏழுலகு எயிற்றினில் கொண்டனை; கூறிய
அறுசுவைப் பயனும் ஆயினை; சுடர்விடும்
ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை; சுந்தர!
நால்தோள் முந்நீர்வண்ண! நின்ஈரடி
ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து
மங்கையர் இருவரும் மலரன அங்கையின்

முப்பொழுதும் வருட அறிதுயில்; அமர்ந்தனை;
நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை;
மேதகும் ஐம்பெரும் பூதமும் நீயே;
அறுபதம் முரலும் கூந்தல் காரணம்
ஏழ்விடை யடங்கச் செற்றனை; அறுவகைச்
சமயமும் அறிவரு நிலையினை; ஐம்பால்
ஓதியை ஆகத்து இருத்தினை; அறம்முதல்
நான்கு அவையாய் மூர்த்தி மூன்றாய்
இருவகைப் பயனாய் ஒன்றாய் விரிந்து
நின்றனை; குன்றா மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை வருபுனல் பொன்னி
மாமணியலைக்கும் செந்நெல் ஒண்கழனித்
திகழ்வனம் உடுத்த கல்போர் புரிசைக்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் செல்வம் மல்குதென்
திருக்குடந்தை அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க ஆடரவு அமளியில் அறிதுயில்
அமர்ந்த பரம! நின் அடியிணை பணிவன்
வரும் இடர் அகல மாற்றோ வினையே.

## திருமங்கையாழ்வார் அருளிய
## திருஎழுகூற்றிருக்கையின் உரை

ஒருபே ருந்தி இரு மலர்த்தவிசில்
ஒருமுறை அயனை ஈன்றனை

(இதன்பொருள்)

ஒருபேர் உந்தி - ஒப்பற்ற பெரிய கொப்பூழாகிய

இருமலர்த் தவிசில் - பரந்த தாமரை மலராகிய இருக்கை இடத்தினின்று

ஒருமுறை - மகாபிரளய யுகாந்த காலத்து முடிவில்

அயனை - பிரமதேவனை

ஈன்றனை-(நினது படைத்தற்றொழிலை மேற்கொண்டு செய்தற்கெனச்) சிருட்டித்தாய்;

(வி-ரை) படைத்தற் கடவுளாகிய பிரமதேவனைத் தனது நாபிகமலத்தினின்று நாராயணன் .தோற்றுவித்தான் என்பது

பிரசித்தம். "நான்முகனை நாராயணன் படைத்தான்" என்றார் திருமழிசையாரும்.பிரமனை ஈன்று அவன் மூலம் சிவனுள்ளிட்ட அனைவரையும் அனைத்தையும் உண்டாக்கியமை குறிப்பு. "நான் முகனும் தான் முகமாய்ச் சங்கரனைத்தான் படைத்தான்". மற்றும் மகா பிரளய முடிவு காலத்துப் பரமசிவன் உள்ளிட்ட தேவர்கள் அனைவரும் அனைத்தும் ஒடுங்கிப்போக, மீண்டும் அவற்றைப் படைப்பிக்க, முதன்முதலாகப் பிரமனைத் தோற்று வித்தமை குறித்தபடி.

அயன்—அஜன்; யாவராலும் தோற்றுவிக்கப்படாதவன் என்பது அவயவப் பொருள்; அப்படிப்பட்டவனைத் தன் கொப்பூழிடத்துத் தோற்றுவிக்கும்படி செய்தவன் நாராயணன் என்று அவன் அனைத்தின் தாயாம் தன்மை தெரிவித்தபடி என்பர்.

இனி அஜன் என்ற வடசொல்—திருமாலினிடத்தினின்று தோன்றியவன் என்று பொருள்படும்; அ—திருமால்.

ஒருமுறை
இருசுடர் மீதினில் இயங்கா மும்மதிள்
இலங்கை இருகால் வளைய ஒருசிலை
ஒன்றிய ஈரெயிற்று அழல்வாய் வாளியின்
அட்டனை

(இ–ள்) ஒருமுறை – ஒரு காலத்து (இராவணன், ஆதிக்கம் செலுத்திய காலத்து)

இருசுடர் - சூரிய சந்திரராகிய இரண்டு ஒளிவிடும் கோள் களும்

மீதினில் இயங்கா – தன்மீதாகச் சஞ்சரித்துப் போகாதபடி (ஒக்கங் கொண்டுள்ள)

மும்மதிள் இலங்கை - மூன்று மதில்களையுடைய இலங்கை மாநகரை

இருகால் வளைய – (சார்ங்கம் என்னும் வில்லின்) இரண்டு நுனிகளும் நன்கு வளையும்படி வணக்கி,

ஒருசிலை - ஒப்பற்ற அந்த வில்லில்

ஒன்றிய - (செவ்வன்) பொருந்தவைத்த

ஈர் எயிற்று அழல்வாய் வாளியின் - இரண்டு கூரிய பற்களைக் கொண்டு (பிறை வடிவாய் அமைந்து) நெருப்பைச் சொரிகின்ற அம்பினுல்

அட்டனை -: எரித்தழித்தாய்;

(வி-ரை) இலங்கைமேல் இராவணபயத்தால் சூரிய சந்திரர் போகார் என்பதைக் கம்பரும் "கதிர்மதி விலங்கி ஏகும் கடிமதில் மூன்றும் காணுய்," என்பதால் குறித்தார். பிள்ளைப்பெருமாள் ஐயங்காரும் "இலங்கைமேல் ஆதபன் ஓடக்கண்டான்" என்ருர். இராவணன் தனது நிபந்தனைகளுக்குப் பயந்து ஏவல் செய்யும்படி அவற்றைக் கட்டி ஆண்டவன் என்பது குறிப்பு.

மும்மதில்-மேலை கீழ் நடு என்ருற் போல மூன்று மதில்கள் உள்ளுக்குள் ஒன்ருக அமைந்தவை. "மும்மதில் நீள் இலங்கைபுக்கு" என்ருர் பெரியவாச்சான் பிள்ளையும். இனி, வன அரண், துர்க்க (கோட்டை) அரண், மலை அரண் என மூன்றும் என்பர்; பொருந்துமேற் கொள்க; ஏனெனில், இலங்கை கடலிடைப்பட்ட தீவாதலின் அதற்கு நீர் அரண் கூறுதல் மிகை.

ஈர்எயிற்றுவாளி – பிறை வடிவாய் அமைந்துள்ள அம்பு: பிறைச் சந்திரனுடைய இரு நுனிகளும் பிளவுண்டு கூரியன வாயிருக்கும். அர்த்த சந்திர பாணம் எனவும் கூறுவர்.

**மூவடி நானிலம் வேண்டி**
**முப்புரி நூலொடு மானுரி யிலங்கு**
**மார்வினின் இருபிறப்பு ஒருமாணுகி**
**ஒருமுறை ஈரடி மூவுலகு அளந்தனை**

(இ-ள்) மூவடி - (தன் சிறிய மூன்று அடிகளைக்காட்டி அவை யளவாக) மூன்று அடி மண்ணை

நானிலம் - இப்பூவுலகில்

வேண்டி - (கெஞ்சிப்) பெறும் பொருட்டு

முப்புரி நூலொடு – மூன்று புரிகளாய் அமைந்த பூணூலொடு (யக்ஞோபவீதத்தோடு)

மான்உரி - மான் தோலும் (கிருஷ்ணஜிநமும்)
இலங்கு - விளங்குகின்ற
மார்வினின் — மார்வினையுடையவனாகி
இருபிறப்பு - பிராமண ஜன்மத்தில்
ஒரு - ஒப்பற்ற
மாணாகி - பிரமசாரியாகி
ஒருமுறை - வாமனாவதார காலத்தில் (மகாபலியிடம் சென்று)
ஈரடி - (நினது) இரண்டு சிறிய திருவடிகளால்

மூவுலகு அளந்தனை — மேல் கீழ் நடு என்ற மூன்று லோகங்களையும் அளந்து (உனதாக்கிக்) கொண்டாய்;

(வி-ரை) மாவலிபால் வாமன பிரமசாரியாய் சென்று அவன் வேள்விச்சாலையில் "மாவலி மூவடி மண்தா" என்று இரந்து பெற்றுப் பின் திரிவிக்கிரமனாகி விண்ணுற ஓங்கி வளர்ந்து இரண்டு அடியினாலே மூவுலகத்தையும் அளந்து மற்றும் ஓரடிக்கு அவன் தலையில் வைத்து அவனைப் பாதலத்தில் அழுத்தி அவன் செருக்கை யொழித்தமை ஈண்டு அறிய வேண்டுவது.

மூவடி - மூவடி அளவு மண்ணுக்கு, அளவையாகுபெயர். நானிலத்து மூவடி வேண்டி என மாற்றிப் பொருள் கொள்க. நானிலம்-நான்கு பகுதிப்பட்ட நிலம்; குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்பன. முப்புரி - மூன்று இழை கொண்டு அமைத்த இழையும், அவ்விழை மூன்று கொண்டு அமைத்த வடமும், அப்படிப்பட்ட வடம் மூன்று கொண்டதுமாகப் பூணூல் அமைதலால் அது "முப்புரி நூல்" எனப்பட்டது. இதனோடு மான்தோலும் சேர்த்து அணிவது தூய்மை தெரிவிக்க. இந்தப் பூணூல் அணிவது பிராமணர், க்ஷத்திரியர், வைசியர். என்ற முதல் மூன்று வருணத்தார்க்கும் உண்டாதலின், இங்கு பிராமணபிரமசாரி என்று தெரிவிப்பதற்கு "இருபிறப்பு ஒரு மாணாகி" என்றார்-

'இருபிறப்பாளர்' என்ற சொல் பிராமணர்க்கே உரியது. 'த்விஜர்' என்பது வழக்கு. இவர்கள் தம் கர்மபிறப்போடு பிரம்மோபதேசம் பெறுவதால் ஞானப் பிறப்பும் பெறுபவராவர்; ஆதலால் இருபிறப்புடையவராவர். ஒரு மாண்- ஒப்பற்ற பிரமசாரி; இவரது ஒப்பற்ற தன்மையைப் பாகவத

புராணத்தில் வாமனுவதாரப் பகுதி கொண்டு அறியலாம். "மூவடியால் மூவுலகு அளக்க வேண்டியிருப்ப, ஈரடியாலேயே மூவுலகையும் அளந்த அளப்பரிய திறமையில் ஈடுபடுகிறுர் ஆழ்வார். "மூவுலகும் ஈரடியால் முறை நிரம்பா வகை முடிய, தாவிய சேவடி" என்ருர் இளங்கோவடிகளும். "தாளால் அளவிட்ட தக்கணைக்கு மிக்கானை" என்ருர் இம்மங்கை மன்னனே. (பெரிய திருமொழி 11-7-2)

**நால்திசை நடுங்க அஞ்சிறைப் பறவை**
**ஏறி நால்வாய் மும்மதத்து இருசெவி**
**ஒரு தனிவேழத்து அரந்தையை ஒருநாள்**
**இருநீர் மடுவுள் தீர்த்தனை**

(இ-ள்) ஒருநாள் – முன் ஒருநாள்
நால்திசை நடுங்க - நான்கு திக்கில் உள்ளாரும் நடுங்கும்படி
அம்சிறை - (வெகு வேகமாகத்தனது) சிறகுகளை விரித்து அறைந்து பறந்து வந்த
பறவை ஏறி – கருடன் மீதேறி,
இருநீர் மடுவுள் - ஆழ்ந்த நீரையுடைய மடுவின் கரைக்கு எழுந்தருளி.
நால்வாய் - தொங்குகின்ற வாயையும்
மும்மதத்து - (கர்ணமதம். கபோலமதம், பீஜமதம்) என்னும் மும்மத நீர்ப் பெருக்கையும்
இருசெவி - இருபெரும் காதினையும் (கொண்டிருந்த)
ஒரு தனி வேழத்து - ஒப்பற்ற யானையாகிய (நாகவர ஸ்ரீமானுகிய) கஜேந்திராழ்வானுடைய
அரந்தையை – துன்பத்தை (முதலைப்பிடியில் அகப்பட்டு அலறியதை)
தீர்த்தனை - நீக்கி (அப்பிடியினின்று விடுவித்து)க் காத்தருளினுய்;

(வி-ரை) கருடனது சிறகடிப்பு வேகத்தால் நால்திசையும் நடுங்கியது. "ஈயாடுவதோ கருடற்கெதிரே" என்பதும் வழக்கு. காத்தற் ருெழிலில் விரைந்தமையால் "அஞ்சிறை" யாயிற்று. ஒருதனி–ஒருபொருட் பன்மொழி. இருநீர்-இருமை, ஆழம் குறிப்பது. நாலுதல்-தொங்குதல். காது, கவுள், பீஜம் என்ற மூன்றிடங்களிலிருந்து ஆண்யானைக்கு மதநீர் பெருகுதல் இயல்பு.

முத்தீ
நான்மறை ஐவகை வேள்வி அறுதொழில்
அந்தணர் வணங்கும் தன்மையை

(இ-ள்) முத்தீ-காருகபத்தியம், ஆகவனீயம், தட்சிணுக்கினி என்ற மூவகை வைதிக அக்னியையும்

நான்மறை - (இருக்கு, யஜுர், சாமம், அதர்வணம்) என்ற நான்கு வேதங்களையும்

ஐவகை வேள்வி - (பிரம, தேவ, மனுஷ்ய, பித்ரு, பூத யக்ஞங்கள் என்ற) ஐம்பெரு வேள்விகளையும்

அறுதொழில் - (ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற) ஆறுவகைக் கர்மங்களையும் நிருபகங்களாக (தமக்கு உரித்தாக) உடையவரான

அந்தணர் - பிராமணர்களால்

வணங்கும் தன்மையை - சேவிக்கப்படும் தன்மையை உடையவனுயிருக்கிருய்;

(வி-ரை) "வேதவேதியர் வேள்வியே தீயன" என்றபடி எப்போதும் மூன்று வைதீகாக்னிகள் அந்தணர் இல்லத்தில் வளர்க்கப்படும். ஐவகை வேள்வி-பிரம்மயக்ஞம், தேவயக்ஞம், மனுஷ்ய யக்ஞம். பித்ரு யக்ஞம், பூதயக்ஞம் என்பன. (யக்ஞம் என்ருல் வேள்வி, புனிதச் செயல் என்பது பொருள்) இவை முறையே இறைவன், தேவர், அதிதி (விருந்து), தென்புலத் தாராகிய பிதிரர்கள் (அதாவது இறந்த குல முன்னோர் கள்), விலங்கு பறவை போன்ற இதர ஜந்துக்கள் இவை களைக்குறித்துச் செய்யப்படுகின்ற புனித காரியங்கள். விருந்தினை வேள்வி என்ருர் வள்ளுவனுரும். "விருந் தோம்பி வேள்வி தலைப்படாதார், விருந்தின் துணைத்துணை வேள்விப்பயன்" முதலிய இடங்களில் காண்க. 'தென்புலத்தார் தெய்வம் விருந்து' என்ற குறளும் ஈண்டு ஒருசார் ஒப்பு நோக்குக. ஆறு தொழில்களோடு அந்தணரைத் தொடர்பு படுத்தி யாண்டும் "அறுதொழிலோர்" என வழங்குவதை "அறுதொழிலோர் நூல் மறப்பர்"-(திருக்குறள்) "அறு தொழிலாளர்க்கு உறுதி பயந்தனை"-(நக்கீர தேவ நாயனுர்) "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்"-(தொல்காப்பியம்) முதலியவற்ருல் தெளியலாம்.

"அந்தணர் வணங்குந்தன்மையை" என்று அந்தணரைச் சிறப்புற எடுத்தமை—"தைவாதீனம் ஜகத் ஸர்வம், மந்த்ரா

தீனம் து தைவதம், மந்த்ரம் பிராம்மணுதீனம், பிராம்மணு மமதேவதா'' என்று இறைவனுலேயே சிறப்பிக்கப் பட்டுள்ளமை நோக்கி என்க.

**ஐம்புலன்**
**அகத்தினுள் செறுத்து நான்குடன் அடக்கி**
**முக்குணத்து இரண்டவை யகற்றி ஒன்றினில்**
**ஒன்றி நின்று ஆங்கு இருபிறப்பறுப்போர்**
**அறியும் தன்மையை**

(இ-ள்) ஐம்புலன் - (புறக்கரணங்களாகிய) பஞ்சேந்திரியங் களையும்
அகத்தினுள் செறுத்து – (பட்டிமேயாதபடி) உள்ளடங்கச் செய்து
நான்கு உடன் அடக்கி - (அகக்கரணங்களாகிய) மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்ற நான்கினையும் கூட அடக்கி,
முக்குணத்து – சத்துவம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங் களுள்
இரண்டவையகற்றி – பிற்கூறிய இரண்டினையும் விலக்கி
ஒன்றினில் ஒன்றி நின்று - சத்துவகுணம் ஒன்றிலேயே ஒருமுகப்பட்டு நின்று,
ஆங்கு - (பின்னர்ப்) பிராரப்தத்தின் முடிவில்
இருபிறப்பு - அநாதியாக நீடித்து வருகின்ற பிறவித் தொடர்ச்சியை
அறுப்போர் - அறுத்தெறியும் மகாயோகியராலே
அறியும் தன்மையை - அறியப்படும் தன்மையை உடையவனு யிருக்கிருய்;

(வி-ரை) ஐம்புலன்களாவன- சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பன. அவை இங்கு ஐம்பொறிகளுக்கு ஆகிவந்தது. ஐம்பொறிகளாவன-மெய், வாய், கண், மூக்கு, செவி; இவை 'பஞ்சேந்திரியம்' எனப்படும். இவை புறக்கரணங்கள். அதாவது, வெளி விஷயங்களிலே ஈடுபடுவன. இனி, அகக் கரணங்களாவன நான்கு. அவை மனம், புத்தி, சித்தம், அகங்காரம். இவை உள்முகமாகவே விஷயங்களில் ஈடுபடுவன. இந்த அகப்புறக் கரணங்களனைத்தையும் அடக்குபவர்

மஹா யோகியராவர். அவரை "இரு பிறப்பறுப்போர்" என்ற சொல்லாற் குறித்தார். இத்தன்மையோர் சுத்த சத்வ குணமே தலையெடுத்தவராய், ஏகாக்ர சித்தம் உடையராய் இறை யருளிலேயே இலயித்து நிற்பர்.

இனி, நான்குடன் அடக்கி என்பதற்கு - உணவு, உறக்கம், அச்சம், புணர்ச்சி என்ற நான்கினையும் அடக்கி என்றும்; பொய் குறளை கடுஞ்சொல் பயனில்சொல் என்ற நான்கினையும் அடக்கி என்றும் கருத்துக் கொள்வாருமுளர்.

**முக்கண் நால்தோள்**

**ஐவாய் அரவோடு ஆறுபொதி சடையோன்**
**அறிவரும் தன்மைப் பெருமையுள் நின்றனை**


இ-ள்) முக்கண்–மூன்று கண்களையும்
நால்தோள் – நான்கு தோள்களையும்
ஐவாய் அரவோடு - ஐந்தலை நாகத்தையும் கொண்டு
ஆறுபொதி சடையோன் – கங்கையாற்றைப் பிணித்த சடையை உடையவனாகிய உருத்திரனும்
அறிவு அரும் - அறிதற்கு அருமையான (அறியவாகாத)
தன்மை – இயல்பினனாய்
பெருமையுள் நின்றனை - பரத்துவ மேல்நிலையில் நிலைத்து நிற்கின்றாய்;

(வி-ரை) ஓடு-எண்ணுப் பொருளில் வந்த இடைச்சொல்; முன்னும் கூட்டப்பட்டது. கங்காதரனும் அறியவாகாத பரத்துவநிலை என்றவிடத்து "பேசநின்ற சிவனுக்கும் பிரமன் தனக்கும் பிறர்க்கும் நாயகன் அவனே கபால நன்மோக் கத்துக் கண்டு கொண்மின்" (4-10-4) என்ற நம்மாழ்வார் வாக்கு நினைக.

சிவனுக்கு எட்டுத் தோள்கள் உண்டென்பர். எண் தோளீசர் என்றார் திருமங்கை மன்னனே. இங்கு நான்கு தோள் கூறியது–நான்கு பெருந் திசைகளிலும் பரந்திருப்பனவற்றை நோக்கி. ஐவாய்–வாய் என்பது தலைக்கு இலக்கணை.

**ஏழுலகு எயிற்றினில் கொண்டனை**

(இ-ள்) ஏழ் உலகு–உலகங்கள் ஏழினையும் (சப்த லோகங் களையும்)




திருமங்கை ஆழ்வார் அருளிச்செய்த
திருஎழுகூற்றிருக்கை

அருள்மிகு சாரங்கபாணிசுவாமி திருக்கோயில்
கும்பகோணம்.

எயிற்றினில் கொண்டனை - வராகாவதார காலத்தில் கோட்டி
ஞல் குத்தி இடந்தெடுத்து அதனிடைக் கொண்டாய்;

(வி-ரை) ஏழுலகு - அதல விதல சுதல தராதல மகாதல ரசாதல பாதால என்ற கீழ் ஏழு உலகங்கள்; ஏழு தீவுகள் என்பதுமுண்டு. இரணியாட்சன் என்னும் அசுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிச் சமுத்திரத்தில் புக, அவனைக் கொல்வதற்காக வராகாவதாரம் எடுத்துக் கோட்டிஞல் கீழே இடந்து சென்று அவனைக் கொன்றபின் அப்பூமியைத் தன் கோட்டிலே கொண்டு வந்து மீண்டும் பரப்பினுர் என்பது வரலாறு.

**கூறிய**
**அறுசுவைப் பயனும் ஆயினை**

(இ-ள்) கூறிய - சிறப்பித்துச் சொல்லப்படுகின்ற,
அறுசுவைப் பயனும் ஆயினை–சுவைகள் ஆறினையும்கொண்ட
போக்யமான அன்னமும் ஆயினுய்;

(வி-ரை) எல்லா உபநிடதங்களும் எம்பெருமானை அன்னமாகவே ஓதும். "அஹமன்னம் அஹமன்னம்...என்றது சுருதியும். கீதையிலும் பகவான் "அஹம் வைச்வானரோ பூத்வா—(15—14) என்று கூறியிருத்தலையும், நம்மாழ்வார், "உண்ணுஞ் சோறு பருகுநீர் தின்னும் வெற்றிலையும் எல்லாம் கண்ணன் எம்பெருமான்" என்றதையும் ஒருபுடை நோக்குக. அறுசுவை–உப்பு, புளிப்பு, துவர்ப்பு, இனிப்பு, கார்ப்பு, கைப்பு என்பன. "அச்சுவைக்கட்டியென்கோ அறுசுவை யடிசிலென்கோ" என்ருர் நம்மாழ்வாரும்.

**சுடர்விடும்**
**ஐம்படை அங்கையுள் அமர்ந்தனை**

(இ-ள்) சுடர்விடும் – ஒளிவிடுகின்ற
ஐம்படை – ஆழி, வளை, வாள், தண்டு, வில் என்ற பஞ்ச
ஆயுதங்களும்
அங்கையுள் - அழகிய கைகளில்
அமர்ந்தனை - பொருந்தப் பெற்ருய்;

(வி–ரை) அமர்தல்—ஈண்டுப் பொருத்தமாக இருத்தல். இனி அமர்தல் - விரும்புதல் எனக்கொண்டு, விருப்பமாக ஏந்தி

யுள்ளாய் என்ற படியுமாம். ஆச்ரித ரக்ஷணத்திற்காக விரும்பிப் படை ஏந்தியபடி. பஞ்சாயுதங்கள்—சுதர்சனம் என்னும் சக்கரம், பாஞ்சசன்னியம் என்னும் சங்கு, நாந்தகம் என்னும் வாள், கௌமோதகி என்னும் கதை, சார்ங்கம் என்னும் வில்.

**சுந்தர!**
**நால்தோள் முந்நீர் வண்ண!**

(இ–ள்) சுந்தர–அழகனே!
நால் தோள் – நான்கு தோள்களைக் கொண்டு
முந்நீர் வண்ண - கடல்நீர் போன்ற நீல நிறத்தை உடையவனே !

(வி–ரை) திருமாலுக்குத் தோள்கள் நான்கு உண்டு என்பதை "உன் தோள்கள் நான்கும் கண்டிடக் கூடுங்கொல்" (திருவாய் மொழி, 4-7-5) என்ற இடத்தாலும் அறியலாம். முந்நீர்-மூன்று செய்கையை உடைய நீர் என்று கடலுக்குப் பண்புத்தொகை யன்மொழி. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத் தொழில்களையும் செய்யுந் தன்மையுடையது கடல். இனி ஆற்று நீர், ஊற்றுநீர், மேல்நீர் என்ற மூன்றையும்கொண்டு இங்ஙன் வந்தது என்பர். ஆற்றுநீர் மேல்நீராகலானும் இந்த இரண்டும் இல்லாதபோது ஊற்றுநீர் இன்றாமாதலானும் இஃது பொருந்துவதன்று.

**நின் ஈரடி**
**ஒன்றிய மனத்தால் ஒருமதி முகத்து**
**மங்கையர் இருவரும் மலரன அங்கையின்**
**முப்பொழுதும் வருட அறிதுயில் அமர்ந்தனை**

(இ–ள்) நின் ஈர் அடி - உமது இரண்டு திருவடிகளில்
ஒன்றிய மனத்தால் - பதித்த மனம் உடையராய்
ஒருமதிமுகத்து - ஒப்பற்ற சந்திரன் போன்ற முகமுடைய
மங்கையர் இருவரும் - திருமடந்தை, மண்மடந்தை என்ற இருவரும்
மலர் அன அங்கையின் - பூப்போல மெல்லிய சுகுமாரமான தங்களது அழகிய கைகளினால்
முப்பொழுதும் வருட - எப்போதும் அத்திருவடிகளைத் தடவிப் பிடிக்க

அறிதுயில் அமர்ந்தனை - (அந்தச் சுகானுபவத்தினுல்) யோக
நித்திரையில் ஆழ்ந்தருளினுய்;

(வி-ரை) நின் ஈரடி வருட என மேலும் இயையும்; "வடிவிணை இல்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்ருர் நம்மாழ்வாரும் (9-2-10). நாச்சிமாரும் கூசிப் பிடிக்கும் திருவடிகள் என்பது பங்க்தி. அறிதுயில்—யோக நித்திரை. நம் தூக்கம்போல் மறதி பெருது எல்லாம் அறிந்துகொண்டே துயிலல். "உறங்குவான் போல் யோகு செய்த பரமன்" என்ருர் பெரியாழ்வாரும். துயில் அமர்ந்தது பாற்கடலில், வியூக நிலையில். அன—அன்ன என்பதன் இடைக்குறை.

நெறிமுறை நால்வகை வருணமும் ஆயினை

(இ-ள்) நெறிமுறை - சாத்திரமுறைப்படி (அந்தந்த வருணத்திற்கு ஏற்ற தர்மநிலையில் நிற்கிற)
நால்வகை வருணமும் - அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்ற நான்கு வகுப்பினரின் வர்ணங்களுக்கும்
ஆயினை - நிர்வாஹகனுமாயினுய்;

(வி-ரை) நெறிமுறை என்றது புருஷ சூக்தம், பகவத் கீதை போன்றவை. (சாதுர்வர்ண்யம் மயாஸ்ருஷ்டம் குண கர்ம விபாகச:) என்ருர் பகவானும் கீதையில் (4-13)

மேதகும் ஐம்பெரும்பூதமும் நீயே

(இ-ள்) மேதகும் - ஆன்மாக்கள் மேவுதற்குத் தகுதியான
ஐம்பெரும் பூதமும் – பஞ்ச மகா பூதங்களாகிய நிலம், நீர், தீ, காற்று, விசும்பு என்றவற்றுக்கும்
நீயே - நிர்வாஹகனும் ஆயினுய்;

(வி-ரை) மாநிலம் சேவடியாகத் தூநீர்
வளைநரல் பவ்வம் உடுக்கையாக
விசும்பு மெய்யாகத் திசைகையாகப்
பசுங்கதிர் மதியமொடு சுடர்கண்ணுக
இயன்ற எல்லாம் பயின்றகத்தடக்கிய
வேதமுதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரியோனே

என்ருர் பாரதம் பாடிய பெருந்தேவனுரும் நற்றிணையில்.

**அறுபதம் முரலும் கூந்தல் காரணம்**
**ஏழ்விடை யடங்கச் செற்றனை**

(இ-ள்) அறுபதம் முரலும் – வண்டுகள் மணம் நாடிவந்து ஆரவாரிக்கின்ற
கூந்தல் காரணம் - கூந்தலையுடைய நப்பின்னை காரணமாக (நப்பின்னையின் பொருட்டாக)
ஏழ்விடை – ஏழு இடபங்களையும்
அடங்க - முழுவலியும் அடங்கும்படி
செற்றனை – ஒடுக்கினாய்;

(வி-ரை) கூந்தல் – கூந்தலையுடையாளுக்குச் சினையாகு பெயர். நப்பின்னையை மணம் செய்து கொள்ளும் பொருட்டுக் கண்ணபிரான் ஏழு எருதுகளைத் தழுவி வலியொடுக்கி அடர்த்தமை பிரசித்தம். "இமிலேற்று வன்கூன் கோட்டிடையாடினை கூத்து அடலாயர்தம் கொம்பினுக்கே" என்றார் நம்மாழ்வாரும் (திருவிருத்தம்: செ.21)

**அறுவகைச்**
**சமயமும் அறிவரு நிலையினை**

(இ-ள்) அறுவகைச் சமயமும் - பௌத்தம், சைனம், பைரவம் காளமுகம், லோகாயதம், சூனியவாதம் என்னும் ஆறு புறச் சமயங்களாலும்
அறிவு அரும் - அறிவதற்கு அரிதான
நிலையினை - நிலையுடையவனாயிருக்கிறாய்;

(வி-ரை) புறச்சமயங்கள் பெரும்பாலும் வேதத்திற்குப் புறம்பானவை: பாஹ்ய மதங்கள். இனி "சமயம்" என்ற சொல்லுக்கு – சித்தாந்தம் என்று பொருள்கொண்டு, பௌத்த, ஜைன, பாசுபத, சாங்க்ய, யோக, தர்க்க சித்தாந்தங்கள் ஆறினாலும் அறிதற்கு அரியவன் எனவும் கூறுவர். [அஞ்ஞான்று, வேதாந்த சித்தாந்தம் ஒன்றினாலேயே(அதாவது உபநிடதங்களினாலேயே) அறியக் கூடியவன் என்ற முடிபு வலியுறும்]

**ஐம்பால்**
**ஓதியை ஆகத்து இருத்தினை**

(இ–ள்) ஐம்பால் ஓதியை - ஐந்து வகையாக முடிக்கப்படும் கூந்தலினையுடைய திருமாமகளை

ஆகத்து - திருமார்பிலே
இருத்தினை - நிலைத்திருக்கச் செய்தாய்:

(வி-ரை) கொண்ட, குழல், பனிச்சை, முடி, சுருள் என்ற ஐவகையாக முடிக்கப்படுதலால் கூந்தலை "ஐம்பால் ஓதி" என்றது. இனி ஐம்பால் என்பதற்கு – ஐந்து இயல்பு எனப் பொருள்கொண்டு, மென்மை, கருமை, நீட்சி, குளிர்ச்சி, மணம் என்னும் ஐந்து இயல்பினைக் கொண்டது கூந்தல் எனினுமாம். ஓதி—கூந்தல்: கூந்தலையுடையாளுக்கு ஆகுபெயர்; அன் மொழித் தொகை யெனினுமாம். "அகலகில்லேன் இறையு மென்று அலர்மேல் மங்கையுறை மார்பனுதலின் (திருவாய்: 6–10–10)" ஆகத்து இருத்தினை என்றுர்.

**அறம் முதல்**
**நான்கு அவையாய் மூர்த்தி மூன்றுய்**
**இருவகைப் பயனுய் ஒன்றுய் விரிந்து**
**நின்றனை**

(இ-ள்) அறம்முதல் நான்கு அவையாய்—அறம் பொருள் இன்பம் வீடு என்ற நான்கு உறுதிப் பொருள்களையும் கொடுக்குமவனுய்,
மூர்த்தி மூன்றுய் – படைப்பு, அளிப்பு, அழிப்பு என்ற முத் தொழில்களையும் புரியும் மும்மூர்த்திகளின் சொரூபி யுமாய்
இருவகைப் பயனுய் - பிறப்பு வீடு என்னும் இரண்டினது வகையாகிய துன்ப இன்பக் கூறுபாடுகளுக்கு நிர்வாஹகனுமாய்,
[இவையனைத்துக்கும் மேலே]
ஒன்றுய் - தான் ஒருவனேயாய் (ஏக மூர்த்தியாய், பரவாசு தேவ விக்ரஹனுய்) இருந்து,
விரிந்து - (பிறகு) பிரபஞ்சமுமாகி முழுவதிலும் வியாபித்து
நின்றனை - நின்றருளினுய்;

(வி–ரை) தர்மார்த்த காம மோட்சப் பிரதானன் என்பதும், திரிமூர்த்தி சுவரூபன் என்பதும், ஜன்ம விமோசனங்களுக்கு நிர்வாஹகன் என்பதும், "ஏகோ வை நாராயண ஆஸீத் ந பிரம்ம ந ஈச:" என்றபடி ஏகன் பரவாசுதேவன் என்பதும், "அந்தர் பஹிஸ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:"

என்றபடி யாண்டும் விரிந்து நிற்பவன் என்பதும் ஈண்டுக் கூறப்பட்டன என அறியவேண்டுவது.

நான்கு அவையாய், அவை – பகுதிப்பொருள் விகுதி.

குன்ரு மதுமலர்ச் சோலை
வண்கொடிப் படப்பை வருபுனல் பொன்னி
மாமணி யலைக்கும் செந்நெல் ஒண்கழனித்
திகழ்வனம் உடுத்த கல்போர் புரிசைக்
கனக மாளிகை நிமிர்கொடி விசும்பில்
இளம்பிறை துவக்கும் செல்வம் மல்குதென்
திருக்குடந்தை அந்தணர் மந்திர மொழியுடன்
வணங்க ஆடரவு அமளியில் அறிதுயில்
அமர்ந்த பரம! நின் அடியிணை பணிவன்
வரும் இடர் அகல மாற்ருே வினையே.

(இ-ள்) குன்ரு - குறையாத

மதுமலர் சோலை - தேனையுடைய பூக்கள் நிறைந்த சோலைகளை யுடையதும்,

வண்கொடி படப்பை - வளப்பம் பொருந்திய வெற்றிலைத் தோட்டக் கூறுகளையுடையதும்

வருபுனல் பொன்னி - பெருகிவருகின்ற நீரினையுடைய காவிரி யாற்றினுல்

மாமணி அலைக்கும் – சிறந்த இரத்தினங்கள் அலை வீசிக் கொழிக்கப் பெற்றதாய்

செந்நெல் ஒண்கழனி - செந்நெற் பயிர்களாலே அழகிய கழனி களை யுடையதும் [நீரரண் குறித்தபடி]

உடுத்த திகழ்வனம் - நாற்புறங்களிலும் சூழ்ந்து விளங்கு கின்ற வனங்களையுடையதும் [காட்டரண் குறித்தபடி]

கல்போர் புரிசை - கற்களைச் செறியப் பொருந்த வைத்துள்ள மதிலையுடையதும் [கல்லரண் குறித்தபடி]

[மேலும்]

கனகமாளிகை – பொன்மயமான மாளிகைகளின் (உபரிகைகளில்)

நிமிர்கொடி - மேலோங்கிப் பறக்கும் கொடிகள்

இளம்பிறை துவக்கும்- இளம்பிறைச் சந்திரனைக் கட்டுண்ணும் படி செய்யும்

செல்வம் மல்கு - செல்வச் செழிப்பு நிறைந்ததுமான,
தென் திருக்குடந்தை - அழகிய திருக்குடந்தையிலே
அந்தணர் - பிராமணர்கள்
மந்திர மொழியுடன் வணங்க – வேத மொழிகளை யோதிக் கொண்டு சேவிக்கும்படி
ஆடு அரவு அமளியில் – படமெடுத்தாடும் ஆதிசேடனாகிய படுக்கையிலே
அறிதுயில் அமர்ந்த - யோகநித்திரை விரும்பியருளின
பரம! – பரமனே! (மேலோனே!)
நின் அடியிணை பணிவன் - உனது திருவடிகள் இரண்டையும் வணங்குகின்றேன்;
வரும் இடர் அகல – அடியேனுக்கு நேரக்கூடிய துன்பங் களெல்லாம் விலகும்படி
வினையே – (அடியேனது) பாவவினைகளனைத்தையும்
மாற்று - போக்கியருள்வீராக (ஓ—அசை).

(வி-ரை) சோலையினையும், படப்பையினையும், கழனியினையும், வனத்தினையும், புரிசையினையும் உடைய திருக்குடந்தை என இயையும். சோலை, படப்பை—நீர்வள நிலவளம் தெரிப்பன. கழனி, வனம், புரிசை—மூவரண் தெரிப்பன; திருக்குடந்தை நீரரண், காட்டரண், கல்லரண் என மூன்றினையும் உடையது என்றபடி. திருக்குடந்தை—தற்காலத்துக் கும்பகோணம்எனப் படுவது. “கற்போர் புரிசெய்'' என்று பாடங்கொண்டு கூறினா ரும் உளர். கனகமாளிகை—வீறுகோளணிபடக் கூறியது. கொடி விசும்பில் பிறை துவக்கும்—தொடர்புயர்வுநவிற்சி யணி. மந்திரமாவது—நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளக்கும் மறைமொழி; இங்கு வேத மந்திரங்கள். ஆடுஅரவம்—தன்மேல் பள்ளிகொண்ட செருக்கு நோக்கிக் கிளர்ச்சியொடு படமெடுத்தாடும் ஆதிசேடன்.

பரம! பணிவன்; வினைமாற்று என முடியும். மாற்றுதல்—போக்குதல்.

திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்

# அருணகிரிநாதர்

முருகப் பெருமான் மேல் சந்தத் திருப்புகழ்க் கவிகள் பாடிப் பரவிப் பெரும்புகழ் படைத்தவர் அருணகிரிநாதர் என்பது அனைவரும் அறிந்ததே. இவரது பிறப்பு முதலியன பற்றி நாம் தெற்றெனக் கூற முடியவில்லை யெனினும் போகூழ் வசத்தால் இவர் பரத்தையர் மயக்கிற் சிக்கிப் பொருளெல்லாம் இழந்து, வறுமையும் பிணியும் வாட்டத் தம் நிலைக்கு இரங்கி வருந்தினர் என்பது இவர் பாடிய திருப்புகழ்ப் பாடல்களால் பெறப்படுகிறது. தம் மன நிலை மாறி நல்வழியில் திருந்தி திருவண்ணுமலை திருக் கோயிலின் வடக்கு வாயில் கோபுரத்தின் கீழ்த் தவ நிலையில் அமர்ந்து அறுமுகப் பெருமான் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். ஒருசமயம் பிறவி மேல் வெறுப்பு ஏற்பட்டுத் தம் உயிரை மாய்த்துக் கொள்ளக் கருதிக் கோபுரத்திலேறிக் குதித்தார். அஞ்ஞான்று முருகன் அபயம் அளித்து அவரைக் காப்பாற்றித் தம் வேல் நுனியால் ஆறெழுத்து மந்திரத்தை நாவில் பொறித்து, "சும்மா இரு சொல்லற" என்ருர். இதன் பொருளை அப்போது அறியாது திகைத்தாரெனினும், இறை யருளால் அதுமுதல் உயிர் நீத்தல் கருத்தை அறவே விட்டு ['சும்மா இரு' என்றதன் பொருள்] நாத்தழும்பேறப் பல தலங் களிலும் சென்று பாடிப் பாடிப் பரவிச் சொற்களால் துதித்தார். ['சொல் அற'—அற சொல்-முடியப் பாடு என்றதன் பொருள்] முருகப் பெருமான் "முத்தைத் தருபத்தித் திருநகை" என்று சந்தப்பாவில் அடியெடுத்துக் கொடுத்தார். அதனையே முதலாகக் கொண்டு பதினாருயிரம் பாடல்களுக்கு மேல் பாடினர் என்பர். ஆனல் நமக்கு இப்போது கிடைப்பன 1330 பாடல்களே.

இவரோடு சமகாலத்திலிருந்த சம்பந்தாண்டான் என்ற செருக்கு மிக்க புலவன் இவரை வாதுக்கு அழைக்க, இவர் தமது முருக பக்தியுடன் பிரபுடதேவராயன் சபையில் "அதல சேடனராட" என்ற திருப்புகழைப்பாடி முருகவேளின் மயில்

மேல் நடனக்காட்சியை அரசவையில் காட்டுவித்தார். பின்னர் தலயாத்திரை மேற்கொண்டு சென்ற போது திருவாவினன் குடியில் ஜப மாலை பெற்றார்; திருஏரகமாகிய சுவாமி மலையில் பாததரிசனம் பெற்று உய்ந்தார். இங்ஙனம் தலயாத்திரையை முடித்துக் கொண்டு மீண்டும் திருவண்ணாமலை வந்தபோது சம்பந்தாண்டான் தூண்டுதலால் பிரபுடதேவராயன் விரும்பிய வண்ணம் விண்ணுலகிலிருந்து பாரிஜாத மலர் கொணரக் கிளி ரூபம் ஏற்றுச் சென்றபோது, அவர் விடுத்துச் சென்ற மானுட உடலைச் சம்பந்தாண்டான் எரித்து அழித்திட, அருணகிரியார் கிளி வடிவுடனேயே இருந்து பின்பு திருத்தணிகை முருகன் கரத்தில் தங்கிப் பேரின்பப் பெருவாழ்வு பெற்றார் என்பர்.

**இவர் அருளிய பிறநூல்கள் :**—திருப்புகழேயன்றி திருவகுப்பு, கந்தரந்தாதி, கந்தரலங்காரம், கந்தரநுபூதி, வேல்விருத்தம், மயில் விருத்தம், சேவல் விருத்தம், திருவெழு கூற்றிருக்கை முதலியன. இவைகளை நவமணிகள் என்பர். **இவரது காலம் :**—கந்தபுராணம் பாடிய கச்சியப்பசிவாசாரியரைப் பற்றிக் குறித்திருத்தலால் இவர்காலம் அவருக்குப் பிற்பட்டது என்பது தேற்றம்; ஆகவே கி. பி. 14–ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 15–ஆம் நூற்றாண்டின் முற்பகுதியும் எனலாம்.

அருணகிரிநாதர் அருளிச்செய்த

# திருவெழுகூற்றிருக்கை

(நேரிசையாசிரியப்பா)

ஒருரு வாகிய தாரகப் பிரமத்(து)
ஒருவகைத் தோற்றத்(து) இருமர பெய்தி
ஒன்றாய் ஒன்றி இருவரில் தோன்றி
மூவா தாயினை; இருபிறப் பாளரின்
ஒருவ னாயினை; ஓராச் செய்கையின்
இருமையின் முன்னாள் நான்முகன் குடுமி
இமைப்பினிற் பெயர்த்து மூவரும் போந்து
இருதாள் வேண்ட ஒருசிறை விடுத்தனை;
ஒருநொடி அதனில் இருசிறை மயிலின்
முந்நீ ருடுத்த நானிலம் அஞ்ச
நீ வலஞ் செய்தனை; நால்வகை மருப்பின்
மும்மதத் திருசெவி ஒருகைப் பொருப்பன்
மகளை வேட்டனை; ஒருவகை வடிவினில்
இருவகைத் தாகிய மும்மதன், தனக்கு
மூத்தோ னாகி நால்வாய் முகத்தோன்
ஐந்துகைக் கடவுள் அறுகு சூடிக்(கு)
இளையோ னாயினை; ஐந்தெழுத்ததனில்
நான்மறை உணர்த்தும் முக்கட் சுடரின்
இருவினை மருந்துக்(கு) ஒருகுரு வாயினை;
ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்
ஐம்புலக்கிழவன் அறுமுகன் இவன்என
எழில்தரும் அழகுடன் கழுமலத்(து) உதித்தனை;
அறுமீன் பயந்தனை; ஐந்தரு வேந்தன்
நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சூட்டு
அன்றில் அங்கிரி இருபிள வாக
ஒருவேல் விடுத்தனை; காவிரி வடகரை
மேவிய குருகிரி இருந்த ஆறெழுத்(து)
அந்தணர் அடியிணை போற்ற
ஏரகத் திறைவன் எனவிருந் தனையே.

அருணகிரிநாதர் இச்சித்திர கவியைத் திருவேரகம் என்னும் சுவாமிமலையில் (முருகவேளுக்குரிய நான்காவது திருப்பதி) அருளிச்செய்தார் என்பதை இதன் கடைசி வரிகளால் அறிய முடிகிறது. திருவேரகத்தை அடுத்த கும்பகோணத்தில் "செஞ்சொல் சேர் சித்ரத் தமிழால் உன் செம்பொன் ஆர்வத்தைப் பெறுவேனோ" என்று அவர் முருகனிடம் கேட்ட விண்ணப்பம் சுவாமிமலையில் நிறைவேறியது. இங்குத்தான் அருணகிரியாருக்குச் சுவாமிநாதப் பெருமான் திருவடி தீட்சை அளித்தார் என்பதை இத்தலத் திருப்புகழில் ஒன்றான "செகமாயை" என்னும் பாடலில் "தகையாதெனக்குன் அடிகாண வைத்த தனி ஏரகத்தின் முருகோனே" என்னும் அடி காட்டுகின்றது. இத் திருவெழுகூற்றிருக்கை அருணகிரிநாதர் அருளிச்செய்த 16000 திருப்புகழின் சாரமாகக் கருதப்படுகிறது. இதனைச் சென்னை, திருவல்லிக்கேணி முருகன் திருவருட்சங்கத்தார் பளிங்குக்கல்லில் தேர்வடிவில் அமைத்துச் சுவாமிமலை ஸ்ரீசுவாமிநாத சுவாமி கோயிலில் பதித்துள்ளார்கள்.

### அருணகிரிநாதர் அருளிச்செய்த

## திருவெழுகூற்றிருக்கையின் உரை

**ஓருரு வாகிய தாரக பிரமத்து**
**ஒருவகைத் தோற்றத் திருமரபெய்தி**
**ஒன்றாய் ஒன்றி இருவரிற் றோன்றி**
**மூவா தாயினை; இருபிறப் பாளரின்**
**ஒருவனாயினை;**

(இ-ள்) ஓர் உரு ஆகிய – ஒரு உருவத்தைக் கொண்டுள்ள

தாரக பிரமத்து-பிரணவ சொரூபமான பரப்பிரம்மத்தினிடத்து

ஒருவகைத் தோற்றத்து - மானுடப்பிறப்பில் ஒப்பற்ற ஆறு தனிச் சேய்களான வகையில் தோன்றி

இருமரபு எய்தி - தாய்மரபு, தந்தைமரபு என்ற இரு வகை மரபினையும் [ஏறிட்டு] அடைந்து

ஒன்றாய் ஒன்றி - (பின்பு) இருமரபினையும் ஒன்றாக்கியது போல் ஆறுமுகங்களும் சேரப் பெற்று ஒரு சேயாய் ஒன்றி

இருவரில் தோன்றி - (இப்படி) சிவம், சக்தி என்ற இருவர் அம்சமுமாய் அவதரித்து

மூவாது ஆயினை - மூப்பது என்பது இன்றி என்ஞான்றும் குமரனுகவே இருந்தருளினுய்;

இருபிறப்பாளரின் - அந்தணர்களுக்குள் (த்விஜர்களுக்குள்)

ஒருவன் ஆயினை - ஒப்பற்றவனுயிராநின்ருய்;

(வி–ரை) முருகன் பரப்பிரம்ம சொரூபன் என்பது சாராம்சம். தாரகப்பிரமம் என்பது "ஓம்" என்னும் பிரணவம்; அந்தப் பிரணவத்தின் சொரூபம் பரப்பிரம்மம். அந்தப் பரபிரம்மம் நாத வடிவாயது "நாதப்பிரம்மம்" என்பதும் காண்க. அந்த நாதம்[சப்தம், ஒலி] ஒரே படித்தாயிருத்தலின் "ஒருருவாகிய" என்று கூறி, அதன் ஏகத்வம் பெற வைத்தார். "ஏகம் ஸத் விப்ரா பஹுதா வதந்தி" —ஸத்தாயிருப்பது ஒன்றே; மஹான்கள் அதனைப் பல பேரிட்டு வழங்குவர்; இதனுல் அத்வைத நிலை பேசப்பட்டது.

ஒருவகை-எழுவகைப் பிறப்பில் மானுடவகை: "அரிதரிது மானுடராதல் அரிது", எழுவகைப் பிறப்பாவன- தேவர். மனிதர், விலங்கு, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. இவைகளின் மொத்தத்தொகை 84 லட்சம். ஈண்டு,

" அண்டசம் சுவேத சங்க ளுற்பிச்சம் சராயுசத்தோடு
எண்டரு நாலெண் பத்து நான்கு நூருயிரத்தாய்
உண்டுபல் யோனி யெல்லா மொழிந்து மானுடத்துதித்தல்
கண்டிடில் கடலைக் கையால் நீந்தினன் காரியங்காண்"

என்றது சிவஞான சித்தியார் திருவிருத்தம். அந்த மானுட வகையிலும் ஆறு தனிக் குழவிகளாய்த் தோன்றிய அருமை நோக்கி ஒருவகைத் தோற்றத்து என்ருர். இருமரபு எய்தி-சத்தி, சிவன் என்ற இருவரின் வழித்தோன்றியவன் என்னும்சம்ப்ரதாயத்தை அடைந்ததை. "எய்தி" என்ற சொல்லாற்றலால் தானே சங்கற்பித்து ஏறிட்டுக் கொண்டமையும் பெறப்படும்.

ஒன்ருய் ஒன்றியமை–ஆறுமுகத்தோடு ஒரே சேயாய் இணைந்தமை. இருவரில் தோன்றியவர் யாரும் மூவாதிருத்தல் இலராதலின், இவரது தனித்தன்மை பேசப்பட்டது இங்கு, யாண்டும் குமரனுகவே காட்சியளிப்பவனுதலின் என்க.

இருபிறப்பாளர்- அந்தணர், பிராமணர். வள்ளியைக் காணவந்த போது "நாடுபுகழ்ச் சைவ நெறி நற்றவ விருத்த வேடமது கொண்டு" என்றது கந்தபுராணம். இந்த விருத்த வேடம் பார்ப்பனக் கோலம் என்பதைப் பாரதியார் "பல்லினைக் கொண்டு வெண் முத்தைப் பழித்த சிறுவள்ளியை-குற வள்ளியை, ஒரு பார்ப்பனக் கோலம் தரித்துக்கரம் தொட்ட வேலவா-வடிவேலவா" என்று விளக்கினர். "விருத்த வேதியன்" என்றது பூத வேதாள வகுப்பு. மேலும் ஞானசம்பந்தராய்க் குமரன் திருவவதரித்த போது கௌணியர் கோத்திரத்து அந்தணராய்ப் பிறந்தார் என்பதையும் உணர்க.

**ஓராச் செய்கையின்**
**இருமையின் முன்னுள் நான்முகன் குடுமி**
**இமைப்பினிற் பெயர்த்து மூவரும் போந்து**
**இருதாள் வேண்ட ஒருசிறை விடுத்தனை;**

(இ-ள்) இருமையின் – பெருமிதத்தின் (இறுமாப்பின்) காரண மாக

ஓராச்செய்கையின் - ஆராய்ந்து பாராத செய்கையின் காரணமாக

முன்னுள் - முன் ஒருநாள் (அதாவது தனது தந்தையாகிய சிவபிரானைப் பார்க்கச் சென்ற காலத்து)

நான்முகன் – பிரமதேவன் (குமரனை மதியாது வணங்காமற் போகவே அவன் சினந்து)

குடுமி - அவனது தலைமுடியை (தலையில் குட்டியே)

இமைப்பினில் பெயர்த்து – ஒரு நொடிப் பொழுதிலே களைந்து இல்லையாகச் செய்து மொட்டையாக்கி (அதனோடு நில்லாது சிறையிலும் தள்ளவே அதனை அறிந்து)

மூவரும் – தந்தையாகிய சிவபிரான், விஷ்ணு, இந்திரன் ஆகிய மூவரும்

போந்து - எழுந்தருளிவந்து

இருதாள் வேண்ட - தனது இரண்டு திருவடிகளிலும் வீழ்ந்து இறைஞ்சிப் பிரார்த்திக்கவே

ஒருசிறை - ஒற்றைச் சிறையினின்றும்

விடுத்தனை - விடுவித்தருளினுய்;

(வி—ரை) இதனுல் பிரமனைக் குட்டிச் சிறையிலிட்டமை பேசப் படுகின்றது. இருமை—கர்வம். இந்தக் கர்வம்—தான் தான் படைத்தற் கடவுள் என்ற பெருமிதம் காரணமாகத் தோன்றி யது பிரமனுக்கு. இதனுல் புத்தி தடுமாறிக் குமரக் கடவுளை மதியாது போயினமையின் அது 'ஓராச் செய்கை'யாயிற்று. அதன் காரணமாக், குடுமிகளையப்பட்டுச் சிறையிலிடப் பட்டான். பின்னர் மூவர் போந்து வேண்ட சிறைவீடு பெற்றுன் என்பது ஈண்டு அறிய வேண்டிய கதை. மூவர் என்ற இடத்து இந்திரனுக்குப் பதில் வேறுஅண்டத்து நான்முகனைக் கொண்டாருமுளர். ஆனுல் "சுராதிபதிமாலும் அயனு மாலொடு சலாமிடும் சுவாமிமலை'' என்றது மறுக்கும். இருமையின், செய்கையின்—இரண்டிடத்தும் '**இன்**' ஐந்தனுருபு ஏதுப் பொருளது. நான்முகன் குடுமி—ஆறும் வேற்றுமைத் தொகை. பிராமணர்க்குக் குடுமியைச் சேதம் செய்தல் பேரவ மானம் விளைப்பதாதலின் அஃது பெரும் தண்டனையாயிற்று. பிரமன் அந்தணர் தலைவனுதலின் அவன் குடுமி போயிற்று. பிரவணப் பொருள் தெரியாது அவன் விழித்தமையால் தலையில் குட்டிச் சிறையிடப் பட்டான் என்பதும் ஈண்டு அறிய வேண்டுவது. "மூவரும் போந்து இருதாள் வேண்ட'' என்றதால் முருகனின், யாவரும் தொழநின்ற இறைமைத் தத்துவம் பெற வைக்கப்பட்டது.

**ஒருநொடி யதனில் இருசிறை மயிலின்**
**முந்நீ ருடுத்த நானிலம் அஞ்ச**
**நீ வலஞ் செய்தனை;**

(இ-ள்) ஒருநொடி அதனில் - கண்ணிமைக்கும் பொழுதிற் குள்ளே

இருசிறை மயிலின் – பெரிய சிறகுகளையுடைய மயிலின் மேலேறி

முந்நீருடுத்த – கடலாற் சூழப்பட்ட

நானிலம் – பூவுலகம்

அஞ்ச - பயப்படும்படி

நீ வலம் செய்தனை – நீ சுற்றி வந்தாய்;

(வி—ரை) இதனுல் அவன் மயிலின் பேராற்றல் குறிக்கப் படுகிறது.

" அண்ட கூடம் நடுங்க மால்வரை
தூளியாக அத்தூளியால்
ஆழியேழும் நிரம்பி மேடுபடக்
கலாபம் அடித்தெழும்
எண் திசாமுகமும் கடைக்கண் இமைக்கு
முன்னம் உலாவியே
என்று மாடல் இயற்றி வாழ்பவன்
ஏறுகின்ற மயூரமே"

என்றார் மார்க்கசகாய தேவரும். முந்நீர்—கடலுக்குப் பண்புத்தொகையன்மொழி. ஆக்கல், அளித்தல், அழித்தல் என்ற முத்தொழில்களையும் செய்யுந் தன்மையதாதலின் 'முந்நீர்' ஆயிற்று. இனி ஆற்றுநீர், ஊற்றுநீர், வேற்றுநீர் என முந்நீர் கொண்டு கூறினாரும் உளர். நானிலம்—குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் என்ற நான்கு வகை நிலங்களைக் கொண்ட இந்தப்பூமி, அது இங்கே இடவாகுபெயராய் உலகினர்க்காகியது.

வலம் செய்தல்—பிரதட்சிணம் பண்ணுதல்.

**நால்வகை மருப்பின்**
**மும்மதத் திருசெவி ஒருகைப் பொருப்பன்**
**மகளை வேட்டனை;**

(இ-ள்) நால்வகை மருப்பின் - நான்கு பகுதிப்பட்ட தந்தங்களையும்
மும்மதத்து – மூன்றிடங்களில் பெருகும் மதநீரையும்
இருசெவி - இரண்டு காதுகளையும்
ஒருகை - ஒப்பற்ற தும்பிக்கையையும் உடைய
பொருப்பன் – மலைபோன்ற ஐராவதத்தினுடைய (காப்பில் வளர்ந்த)
மகளை - பெண்ணாகிய தெய்வயானையம்மையை
வேட்டனை - விரும்பித் திருமணம் செய்துகொண்டாய்;

(வி-ரை) தெய்வயானையம்மையை முருகன் திருமணம் செய்துகொண்டது திருப்பரங்குன்றத்தில். ஐராவத யானையால் வளர்க்கப்பட்ட இவளை இந்திரன் திருமணம் செய்து கொடுக்க முருகன் தான் கொண்டான். [தெய்வயானையம்மை திருமாலின்

புத்திரியரிருவரில் ஒருத்தி. மற்றொருத்தி வள்ளி என்பது நினைக] ஒருவகைப் பொருப்பு என்றதால்—யானை என்றது. இது பிறகுறிப்பு; வெளிப்படை. பொருப்பன் என்று உயர்திணை யாக ஐராவதத்தைப் பேசியது திணைவழுவமைதி. அஃறிணை யிலேயே மிக உத்தமமானவற்றை உயர்திணையாக வழங்குதல் உண்டு என்பதை மும்மதன், குஞ்சரராஜன், சிங்கப்பிரான், யூதபதி (யானைத்தலைவன்) என்ற சொற்றொடர்களினாலும் உணரலாம். இனி பொருப்பன்—பொருப்புக்கு உரியவன் என்ற பொருளில் தேவேந்திரன் என்றும் கூறுதலுண்டு. அப்போது இந்திரன் மகள் என்பதற்கு—இந்திரனால் வளர்க்கப் பட்ட பெண் என்பது பொருள். 'வேட்டனை' என்ற சொல் லாற்றலால் சடங்குகளோடு கூடியது திருமணம் என்பது பெற்றும். தெய்வயானையம்மை திருமணம் பேசியபின் வள்ளி யம்மை திருமணம் தொனியாகக் குறிக்க வேண்டி மேல்வரி களில் விநாயகனை முன்னிட்டுக் கொண்டார்.

**ஒருவகை வடிவினில்**
**இருவகைத் தாகிய மும்மதன், தனக்கு**
**மூத்தோ னாகி நால்வாய் முகத்தோன்**
**ஐந்துகைக் கடவுள் அறுகு சூடிக்கு**
**இளையோ னாயினை;**

(இ-ள்) ஒருவகை வடிவினில் - ஒருவகையாகிய யானை வடிவத் திலேயே

இருவகைத்தாகிய – யானை உருவும் மானிட உருவும் இயையத் தாங்கிய

மும்மதன் – விநாயகனானவன்

தனக்கு - (குமரனாகிய) தனக்கு

மூத்தோனாகி - முன்பிறந்தவனாக இருக்கும்படி, [அந்த]

நால்வாய் முகத்தோன் - தொங்குகின்ற வாயையுடைய யானை முகத்தோனும்

ஐந்து கைக் கடவுள் - ஐந்து கரங்களையுடைய கடவுளும் ஆகிய

அறுகு சூடிக்கு – அறுகம் புல்லைச் சூடிக் கொண்டுள்ள [மேற்கூறிய] விநாயகனுக்கு

இளையோன் ஆயினை - தம்பியாய் நீ தோன்றினாய்;




ஸ்ரீ அருணகிரிநாதர்

அருளிச் செய்த

**திரு எழுகூற்றிருக்கை**

**ஸ்ரீ சுவாமிநாதசுவாமி திருக்கோயில், சுவாமிமலை.**

**அமைப்பு: முருகன் திருவருட் சங்கம்** திருவல்லிக்கேணி, சென்னை-600 005.

(வி-ரை) இந்த இடத்து அந்வயம் கவனிக்கற்பாலது. ஒருவகை வடிவினில் இருவகைத்தாகிய மும்மதன், குமரனுகிய தனக்கு மூத்தோனுகும்படி நீ அந்த நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள் அறுசூடிக்கு இளையோன் ஆயினை என்பது.

ஒருவகை வடிவினில்-யானை வடிவு. அதனில் இருவடிவு-கரங்கள் நான்கோடு மானுடர் போலவே கொண்ட வடிவு ஒன்று; தும்பிக்கை ஒன்ருேடு யானை போலவே கொண்ட வடிவு மற்ருென்று. ஆக "நால்வாய் முகத்தோன் ஐந்துகைக் கடவுள்" என்று மேல் கூறுவனவற்றைச் சமர்த்தித்தபடி. அறுகுசூடி-அறுகம்புல் விநாயகர் உகந்து சூடுவது. இங்கு நால்வாய் முகத்தோன், ஐந்து கைக்கடவுள், அறுகுசூடி-என்ற மூன்றும் ஒரு பெயர்ப்பொருளில் வந்த பல பெயர்கள்.

"மூத்தோனுகி என்ற விடத்து" ஆகி என்ற வினையெச்சம்' 'ஆக' என எச்சத்திரிபாயிற்று, 'ஞாயிறுபட்டு வந்தான் என்ற இடத்துப்போல; "சொல் திரியினும் பொருள் திரியா வினைக்குறை". இனி "தனக்கு" என்றது முன்னிலையில் வந்த படர்க்கையாகக் கொண்டு, 'நினக்கு' எனப் பொருள் கூறினும் அமையும். [கவனிப்பு-:இராமன் சூர்ப்பணகையை முன்வந்தவளோ நீ என்று வினவிய போது "நெருநல் நடந்தவரோ நாம் என்ன" (இங்கு நாம்—நீர் என்றபொருளது): "ஓரிடம் பிறவிடம் தழுவலும் உளவே" என்றவாறு வந்ததோர் இடவழுவமைதி. "நாம் அரையாமத்தென்னே வந்து வைகி நயந்தது" எனத் திருக்கோவையாரிலும் வருவதையும், அங்குப் பேராசிரியர் "நாம் என்னும் முன்னிலை உளப்பாட்டுத் தன்மை உயர்வு தோன்ற முன்னிலையின்கண் வந்தது" என உரைத்தமையையும் உணர்க. இங்ஙனம் வருதல் உலக வழக்கத்திலும் உண்மை காண்க.] அறுகுசூடி-இகரவிகுதி பெற்ற ஆண்பாற் பெயர்; பித்தா பிறைசூடி என்ற இடத்துப் போல. ஈண்டு அறுகு என்ற சொல் "ஆறு" என்ற சொல்லுக்குச் சூசகமாயிற்று.

**ஐந்தெழுத்ததனில்**
**நான்மறை உணர்த்தும் முக்கட் சுடரின்**
**இருவினை மருந்துக்கு ஒருகுரு வாயினை;**

(இ-ள்) ஐந்தெழுத்ததனில் - பஞ்சாட்சரத்தில் (பொதிய வைத்து), நான் மறை உணர்த்தும்- நான்கு வேதங் களும் தெரிய வைக்கின்ற

முக்கட்சுடரின் - மூன்று கண்களையுடைய ஒளிவடிவினனாகிய,
இருவினை மருந்துக்கு - மிக்க தீவினைகளைப் போக்கும் மருந்து
போல்வானாகிய தந்தையாகிய சிவபிரானுக்கு
ஒரு குருவாயினை - ஒப்பற்ற குருநாதனாக விளங்கினாய்;

(வி-ரை) பஞ்சாட்சரத்தை ஓதினால் நன்னெறிக்குய்த்து இருவினை நீக்கும்; இருவினை நீங்க மலபரிபாகம் ஏற்படும்; மலபரிபாகம் ஏற்பட்டால் நான்மறை உணாத்தும் பரம் பொருள் திரிநேத்ர தாரியே என்பது விளங்கும். "வேத நான்கினும் மெய்ப்பொருளாவது நாதன் நாமம் நமசிவாயவே.' பரமசிவனை 'மருந்து' என்று இங்குக் கூறுகிறார் அருணகிரியார். "அருமருந்து ஒரு தனி மருந்து அம்பலத்தே கண்டேனே!" என்றது கீர்த்தனை. கோபால கிருஷ்ண பாரதியாரும் "பித்தம் தெளிய மருந்தொன்று இருக்குது பேரின்ப மன்றினுள்ளே," என்றார். அந்த மருந்துக்கு ஒப்பற்ற குருவாயினாய் என்று பராவுகிறார்.

ஒப்பற்ற குருவாவது-மருந்துக்கு மருந்து கொடுப்பாருண்டோ; ஆனால் இங்குப் பிரணவப் பொருளுக்குப் பிரணவப் பொருள் கொடுத்தார். உபதேசத்தால் தகப்பனுக்கும் சுவாமியாயினமை குறிப்பு.

**ஒருநாள் உமைஇரு முலைப்பால் அருந்தி**
**முத்தமிழ் விரகன் நாற்கவி ராஜன்**
**ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவனென**
**எழில்தரும் அழகுடன் கழுமலத் துதித்தனை;**

(இ-ள்) ஒருநாள் - (தந்தையார் பிரமதீர்த்தத்தில் ஸ்நாநம் செய்யச் சென்றபோது உடனழைத்துச் சென்ற)அந்த நாளில்,
உமை - தோணிபுரத்து உமையம்மை
இருமுலைப்பால் அருந்தி - இரு முலைகளிலும் பெருகியபாலைப் பொற் கிண்ணத்தில் கொடுக்க அருந்தி,—
இவன் – இந்தப் பிள்ளை
முத்தமிழ் விரகன் (என)- மூன்று தமிழிலும் வல்ல திறலோன்
நாற்கவி ராஜன் (என)-நாற்கவி பாடுதலில் சக்கரவர்த்தி
ஐம்புலக்கிழவன் (என)– ஐம்புலன்களுக்கும் நிர்வாஹகனாகிய மன்மதன்

அறுமுகன் - சண்முகனுகிய செவ்வேள்
என - என்று சொல்லப்படும்படியும்
எழில் தரும் அழகுடன் - மேன்மேல் எழுச்சி தரும்படியான அழகோடு [கட்புலனும் அழகோடு]
கழுமலத்து உதித்தனை —சீகாழியில் தோன்றினுய்;

(வி—ரை) மேன்மேல் எழுச்சி தரும் அழகினை 'எழில் தரும் அழகு' என்றது; இங்கு-முத்தமிழ் விரகன் என்று தொடங்கி, நாற்கவிராஜன், ஐம்புலக்கிழவன், அறுமுகன் இவன் என்று ஒன்றன்மேல் ஒன்று உணர்ச்சியும் எழுச்சியும் பட அடுக்கிக் கூறிய அழகு முதலில் உணர வேண்டுவது. [என என்னும் இடைச்சொல் முன்னும் சென்று, விரகன், ராஜன், கிழவன் என்ற சொற்களோடு இயைய வைத்தமையும் நோக்குக.] பின்னர், எழில் என்ற சொல் -வெறும் அழகு என்ற பொருளைக் காட்டாது, கண்ணுக்குப் புலனுகும் அழகைத்தான் அது காட்டும் என்பதை உளம் நிறுத்துதல் வேண்டுவது; இங்கு மலைபடுகடாஅத்து 'எழில் நுடங்கு மடந்தை' [வரி 31] என்ற விடத்தில் "அழகு கட்புலனுகி நின்றசையும் மடந்தை" என்று நச்சினுர்க்கினியர் உரை காண்க. எனவே, எழில் என்பது அழகு கட்புலனுவது. கண்ணுக்குப் புலனுகும் அழகோடு உதித்தான் சம்பந்தன். அவன் அனைவரும் கண்காண 'கால் தரை தோய நின்று கட்புலக் குற்றதம்மா' என்னும்படி சீகாழியில் அவதரித்தான் என்பது உறுதி. அவனழகுக்கு உவமை கூறப்பட்ட ஐம்புலக் கிழவனதழகோ அறுமுகனதழகோ கண்ணுக்குப் புலனுகாத ஒன்று. மன்மதன்-அநங்கன். ஆறுமுகன் - காண்பதற்கப்பாலான். அவ்விருவர் அழகை இப்படித் தெனக் காண வகையில்லாத போது அதனை'எழுதரு- எழுத அரு—எழுதுவது அரிது' என்பது விரசம். ஆக, கண்ணுக்குப் புலனுகாத மன்மதன் அழகு போலவும் அறுமுகன் அழகு போலவும் இவன் அழகுடையவன் என்று, கண்ணுக்கு இலக்காகும் அழகுடைய சம்பந்தனுக்கு உவமை காட்டி "இவன் எழுத அரும் அழகுடன் உதித்தான்" என்பது பொருந்துமா? என்பதைச் சிந்திக்க வேண்டும். அதனுல்தான் "எழில்தரும்" என்ற பாடம் சிறக்கும் எனக் கொண்டனர் திருப்புகழ் பதிப்பாசிரியர். அவர் 'எழில்' என்பது-நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய் எழுச்சி பெற்றுக்

கண்ணுக்குப் புலனுகும் அழகாதலின், அதனை ஞானசம்பந்தப் பெருமானுக்கு ஏற்றிச் சொல்லின் அடிக்கழஞ்சு பெறும் என்று கொண்டனர். இனி ஒருசிலர் எழில், அழகு என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளைத் தருகின்றன வாதலின் 'கூறியது கூறல்' என்னும் குற்றத்தின் பாற்படும் என்பர். சரி, ஒன்று கவனிப்போம். அவர் கருத்துப்படி 'எழில் தரும் அழகு' என்பது "அழகு தரும் அழகு" எனப் பொருள் படும். இதனில் வந்துள்ள 'அழகு' என்ற இரண்டு சொற்களும் ஒரே பொருளையா தருகின்றன? பின்னர்க் கூறிய அழகு என்ற சொல் சாரதமமாகிய அழகையல்லவா காட்டு கிறது! "அழகினுக்கு அழகு செய்தார், திலகத்தைத் திலகமிட்டார்" என்ற இடங்களில் ஒரே பொருளனவா ? தாரதம்யம் பெறவைக்கப்பட்டுள்ளனவே.

இனி "எழு தரு" என்று பிரித்து, எழுச்சி தருகின்ற என்ற பொருளையும் காட்டுவர். இஃது 'எழில் தரும்' என்ற பாடப்பொருளோடு ஒரு சார் ஒத்திருப்பதேஒழிய கட்புலனுகும் அழகு என்ற சிறப்பு பெறப்படாது. ஆக, **இதன் முடிவு** :— "எழுத அரு" என்றும் "எழு தரு" என்றும் பிரித்துப் பாடங் கொண்டு கூறின், உவமை காட்டிய இருவரோடு உவமைப் பொருத்தம் செவ்வன் பெறுது ஒழிகின்றது என்பதும், "எழில் தரும்" என்ற பாடமே உவமையாக வந்த இருவர்க்கும் மேலாக ஒருபடிச் சென்று சம்பந்தன் அழகுக்கு மெருகூட்டிச் சிறப்பிக்கின்றது என்பதும் அறியவைத்தபடி. சம்பந்தரும் கருவேள் போலவும் செவ்வேள் போலவும் நாடோறும் **எழுச்சி** தரும் அழகோடு கண்ணுக்கு விருந்தாகத் திகழ்ந்தனராதலின் அதனைச் சிறப்புறக் காட்டிக் கழுமலத் துதித்தனை என்று ஊரைப் பாராட்டுகிருர்.

கழுமலம்—சீகாழி; உரோமச முனிவர் கலிக்கு அஞ்சிச் சிவபெருமானைப் பூசித்துத் தமது மலங்களைக் கழுவப் பெற்றமையால் வந்த பெயர். ஈண்டு

" சேனக்குரு கூடலிலன்று ஞானத்தமிழ்
நூல்கள் பகர்ந்து
சேனைச்சமணோர் கழுவின்கண் மிசையேறத்

தீரத்திருநீறு புரிந்து மீனக்கொடி
யோனுடல் துன்று
தீமைப்பிணி தீரவுவந்த குருநாதா
... ... ... ... ... ... ... ... ... ...
காழிப்பதி மேவியுகந்த பெருமாளே''

என்ற திருப்புகழும் நினைக. எழில் தரும் என்றவிடத்து 'எழில்'-ஏழு என்ற எண்ணுக்குச் சூசகம்.

இனி முத்தமிழ் - இயல் இசை நாடகம். நாற்கவி-ஆசு. மதுரம், சித்திரம், வித்தாரம். ஐம்புலக் கிழவன் - மன்மதன். ஐம்புலன்-சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் என்பவை. இந்த ஐம்புலன்களைத் தன்வழி இயங்கும்படி செய்யும் உரிமை பூண்டு செலுத்தும் தலைவன் என மன்மதனைக் காட்டும். அந்த மன்மதன்-பேரழகுக்கு உவமையாக வருபவன். அவனைப் போலவே அழகுடையவன் சம்பந்தன் என்று கருவேளைக் கூறியபடி. இனி அவனையும் அழகில் குர்ஜிதப்படுத்திய குமரனாகிய செவ்வேளை எடுத்துக்காட்டி, அவனைப் போலவே அழகுடையவன் சம்பந்தன் என்பதை "அறுமுகன் இவன் என" என்ற தொடரால் பெற வைத்தார். இனி சிலர், ஐம்புலன் களையும் அடக்கி ஆள்பவன் என்று கொண்டு ஜிதேந்திரியன் என்று உரை கூறுவர். ஞானசம்பந்தன் ஜிதேந்திரியனாக இருந்தால் நல்லூர்ப் பெருமணம் எதற்கு.

**அறுமீன் பயந்தனை;**

(இ-ள்) அறுமீன் - கார்த்திகைப் பெண்கள் ஆறுபேரால், பயந்தனை – [நீ பாலூட்டப் பெற்று) வளர்க்கப்பட்டாய்;

(வி-ரை) இங்கு "பயந்தனை" என்ற செய்வினை செயப்பாட்டு வினைப்பொருளில் வந்துள்ளது. பயத்தல் - ஈண்டு வளர்க்கப் படுதல் [பயம்-பயஸ்; பால் என்பது தொனி]. கார்த்திகைப் பெண்களால் வளர்க்கப்பட்டமை குறிப்பு. கார்த்திகேயன் என்ற பெயருண்மை காண்க. கிருத்திகை நட்சத்திரம் ஆறு புள்ளி உடையனபோல் காணப்படும். முருகனுக்குரிய நட்சத்திரம்.

**ஐந்தரு வேந்தன்**
**நான்மறைத் தோற்றத்து முத்தலைச் செஞ்சுட்டு**
**அன்றில் அங்கிரி இருபிளவாக**
**ஒருவேல் விடுத்தனை;**

(இ-ள்) ஐந்தரு வேந்தன் - இந்திரனுக்காக
நான்மறைத்தோற்றத்து - நான்கு வேதங்களின் அம்சமாய்த் தோன்றியுள்ள (வைதீகமான)
முத்தலை செஞ்சூட்டு - மூன்று பிளவினதாகிக் கவர்த்த சிவந்த உச்சிக்கொண்டையை உடையதான
ஒருவேல் - ஒப்பற்ற வேலாயுதத்தை
அன்றில் அங்கிரி – கிரௌஞ்சகிரி
இருபிளவாக - இருதுண்டாகி விழும்படி
விடுத்தனை – செலுத்தினாய்;

(வி-ரை) ஐந்தரு வேந்தன் – இந்திரன். தேவலோகத்திலுள்ள பஞ்ச தருக்களுக்கு அரசன். அவை சந்தானம், மந்தாரம், பாரிஜாதம், அரிசந்தனம், கற்பகம் என்பன. "நான்மறைத் தோற்றத்து" என்றது – வேல் வேதவடிவானது என்ற கருத்தும், ஞான சக்தி சொரூபமாகும் என்ற கருத்தும் பெற வைத்தற்கு. மேலும், மறை (மந்திரம்) ஓதிப் பிரயோகம் செய்வர் என்பதும் அறிய வைத்தபடி. இலைவடிவாயிருக்கும் வேலுக்கு "முத்தலைச் செஞ்சூட்டு" என்ற அடைகொடுத்தது— முரண்டரு தடந் தோள் அண்ணல் முத்தலை படைத்த சூலம், இரண்டொரு படையாய் வந்ததென்னவும் ஏகிற்றவ்வேல்" என்ற கந்த புராணம் பற்றி. கிரௌஞ்சகிரி என்பதற்கு அன்றிலங்கிரி பரியாயச் சொல்; குருகு பெயர்க் குன்றம் என்பதும் உண்டு. "வேல் அயில் கொடு குத்திய நெடுவரை ஒத்தனர் அயில்களெடுத்தவரே" என்று இச்செயலைப் பாராட்டினார் வில்லியாரும்.

[இத்தகைய முருகப் பெருமான் கோயில் கொண்டுள்ள சுவாமிமலையைச் சிறப்பித்து முடிக்கின்றார் அருணகிரிநாதர்.]

**காவிரி வடகரை**
**மேவிய குருகிரி இருந்த ஆறெழுத்து**
**அந்தணர் அடியிணை போற்ற**
**ஏரகத் திறைவன் எனஇருந்தனையே.**

(இ–ள்) காவிரி வடகரை-காவிரியாற்றின் வடக்குக்கரையில்
மேவிய - அமைந்துள்ள
குருகிரி - சுவாமி மலையில்
இருந்த - நித்தியவாசம் செய்து கொண்டிருக்கும்

ஆறு எழுத்து அந்தணர் - நம:குமாராய என்ற ஷடாக்ஷர மந்திரத்தை இடைவிடாது ஜபிக்கின்ற பிராம்ம ஞோத்தமர்கள்

அடியிணை போற்ற – நினது இரண்டு திருவடிகளையும் தோத்தரித்துப் புகழ

ஏரகத்து இறைவன் என - திரு ஏரகத்துத் தனிப் பெருங் கடவுளாக

இருந்தனையே - (தலைமை தோற்ற] வீற்றிருந்தருளுகின்றாய்; (எ—று)

(வி-ரை) அப்படிப்பட்ட இறைவனை வணங்குவோம் என்பது குறிப்பு. மேவுதல்-விரும்பி அமர்தல்; "நம்பும் மேவும் நசையாகும்மே"(தொல்). குருகிரி-சுவாமிமலை என்பதன் பரியாயம். குருபரனாயிருந்து பிரணவத்தைத் தந்தைக்கே உபதேசித்த செய்குன்றுடைமையின் "குருகிரி என்றது. ஆறெழுத்து-நம:குமாராய. இதனை ஷடாக்ஷரம் என்பர்: "இசைபயில் ஷடாக்ஷர மதாலே இகபர சௌபாக்யம் அருள் வாயே" என்றார் திருப்புகழில். இதனை "ஆறெழுத்தடக்கிய அருமறைக் கேள்வி" என்ற திருமுருகாற்றுப்படை வரியாலும் தெளியலாம். இது மகா மந்திரம். ஏரகம் என்றது சாடு. அதாவது உட்பொதிந்த பொருளுடையது. ஏர்அகத்து- உள்ளுவாரது அழகிய உள்ளத்தில், இறைவன் என இருந்தனையே- இந்தச் சொல்லாற்றலால், அவன் யாண்டும் நீக்கமற வீற்றிருக்கும் தலைமை தோற்றுவித்தபடி. ஆக, கடைசி மூன்று வரிகளும் தோத்திர முடிவு (ஸ்தோத்ர சமாப்தி) காட்டும்.

இங்ஙனம் ஸ்ரீஅருணகிரிநாதர் பாடியுள்ள 16000 திருப் புகழின் சாரமாக அவர் அருளிச்செய்த இத்திருவெழு கூற்றிருக்கை இலங்குகின்றது; இது நித்திய பாராயணத் திற்குகந்தது.

வேலும் மயிலுந் துணை.

# வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள்

ஸ்ரீ பார்த்தசாரதி திருவெழுகூற்றிருக்கையின் நூலாசிரியராகிய முருகதாசர், தென்பாண்டி நாட்டில் திருநெல்வேலியில் சுத்தசைவ வேளாள வருணத்தில் 28-11-1839இல் தோன்றியவர். இவரது தந்தையார் பெயர்—செந்தில் நாயகம் பிள்ளை; தாய்—பேச்சுமுத்தம்மாள். இவரது இயற்பெயர்—சங்கரலிங்கம். இவரது வாழ்க்கைத் துணைவியார்—புதுச்சேரியைச் சேர்ந்த திருமதி சுந்தரத்தம்மை. இவரது—மதம் சைவம். ஆயினும் இவர் வைணவத்தில் விருப்புடையவராவர். இவர் முருகக் கடவுளிடத்து மிக்க பக்தி உடையவராய் அவரது அருள் பெற்றவர் என்றும், அதனால் இளமை தொடங்கி எட்டு வயதிலேயே விரைவிற் கவிபாடவல்ல ஆசுகவியாயிருந்தன ரென்றும், சந்தம் (வண்ணம்) பாடுதலிற் சிறந்தவர் என்றும் ஞான பக்தி வைராக்யங்கள் மேற்கொண்டவர் என்றும், சரபவித்வான், வண்ணச் சரபம், திருப்புகழ்ச் சுவாமி, தண்டபாணிப் பரதேசி, அபர அருணகிரிநாதர் என்ற சிறப்புப் பெயர்களை இவருடைய அன்பர்கள் இவர்க்கு வழங்கி வந்தன ரென்றும் தெரிகிறது. இவர் தாம் இயற்றிய அறுவகை யிலக்கணத்தில்—

> என் கனவிற்
> பற்பல பாடல் பகிர்ந்தினிதாண்ட
> முருகப்பெருமான் முழுதுணர்புலவன்

என்றும், இங்ஙனமே மற்றும் சில நூல்களிலும் கூறித் தமக்கு முருகக் கடவுள் பிரதியக்ஷம் என்பதைத் தெரிவிக்கின்றார்.


ஒருகால் செங்கோட்டைக்கருகிலுள்ள திருமலை என்ற முருகன் தலத்துச் சென்று, "அம்முருகன் தரிசனம் கண்டன்றி மீளேன்" என மலைப் படிக்கட்டிலிருந்து உருள, இவரை முருகன் ஊறுபடாமல் ஆட்கொண்டனர். சீதாராமர் என்ற சான்றோரிடம் ஷடாக்ஷர மந்திர உபதேசம் பெற்று, வேற் பூசனை செய்தும் வந்தார். பின்னர் முருகக் கடவுள் அருளால் பெற்ற 'சர்வசாதாரணி' என்ற எழுத்தாணியைக் கொண்டு

பனையோலைச் சுவடிகளில் இலட்சம் தமிழ்ப் பாடல்களைப் பலவித நூல்களாக ஆக்கி எழுதினர். ஆனால் இப்பொழுது கிடைப்பன ஐம்பதாயிரத்துக்கும் மேற்பட்ட பாடல்களாகும் என்பர்.

இவர் இளமையிற் செய்த நூல்—பன்னிருமாலை. இவர் செய்த பிறநூல்களாவன:—தில்லைத் திருவாயிரம், திருவரங்கத் திருவாயிரம், தெய்வத் திருவாயிரம், பழனித் திருவாயிரம், திருத்தணிகை திருவாயிரம், ஏழாயிரப்பிரபந்தம், பதிகச்சதகம், சதகப்பதிகம், அருணகிரிநாதர்புராணம், திருவாமாத்தூர்ப் புராணம், திருமாலந்தாதி, குருநாதன் அந்தாதி, ஏகத்தாளிதழ கலந்தாதி, திருச்செந்தூர்க்கோவை, திருச்செந்தூர்த் திருப் புகழ், தமிழலங்காரம், தேவகோட்டை முருகன் பிள்ளைத்தமிழ், வள்ளியம்மை பிள்ளைத் தமிழ், சென்னை முருகன் பிள்ளைத் தமிழ், மனுநெறித் திருநூல், குருபர தத்துவம், தில்லைபாதி—நெல்லைபாதி, அறுவகை யிலக்கணம், ஏழாமிலக்கணம், வண்ணத்தியல்பு, சகத்திரதீபம், முத்தமிழ்ப் பாமாலை, புலவர் புராணம் முதலியன.

இவற்றுள், புலவர் புராணத்துத் தமிழுக்கு ஆதி இலக்கண நூல் செய்தவராகிய அகத்திய முனிவர் முதலாக எழுபது தமிழ்ப்புலவர்களுடைய சரித்திரங்கள் கூறப்பட்டுள்ளன. ஆனால் ஒவ்வொரு புலவருடைய சரித்திரம் முழுவதும் இந் நூலில் கூறப்பட்டதென்பதில்லை; இதிற் கூறப்படாத விஷயங்களும் சிற்சில வழங்குகின்றன. இந்நூல் நெடுநாளைக்கு முன் திருநெல்வேலியிற் சிறிது தொடங்கப்பட்டுப் பின்பு திருவாமாத்தூரில் பாடி முடிக்கப்பட்டதென்று அறிகிறோம்.

இனி முசுகுந்த நாடகம் என்ற நாடக நூலும், பல கீர்த்தனைப்பாக்களும், கௌமார முறைமை, தியானுநுபூதி போன்ற சாத்திர நூல்களும் இவர் பாடியுள்ளார். இந்நூல்களை யெல்லாம், சென்னை, வேலூர், புதுச்சேரி போன்ற இடங்களில் அரங்கேற்றிப் பலராலும் பாராட்டப்பெற்றார். வடலூர் இராமலிங்க சுவாமிகளோடு பல முறை கண்டு பழகித் தம் கருத்துக்களைப் பரிமாறி மகிழ்ந்தார். சமயபேதமற்ற பொதுநிலைக் கொள்கைகளை மேற்கொண்டார். முழு நீறு பூசி, இரு தோள்களிலும் இரு கலைத்திருநாமம் இட்டுத் துளசி



குமுதவல்லித் தாயாருடன் திருமங்கையாழ்வார்

திருவாலி திருநகரி



வண்ணச்சரபம்
மகான் தண்டபாணிசுவாமிகள்
திருவாமாத்தூர்

உருத்திராக்க மாலைகளை ஒருசேர அணிந்திருப்பர். கோவண மும் கீளும் சாத்திக் காவியுடை அணிந்து கையில் தண்டு தாங்கியிருப்பர். உயிர்க்கொலையும் புலால் உண்ணலும் மக்கள் மேற்கொள்ளக்கூடாது என்ற அருள்நெறியைத் தாம் செல்லுமிடமெல்லாம் பரப்பினர். கோ சம்ரட்சணத்தில் பேரார் வம் காட்டினர். இவர் பல தலவழிபாடு செய்து இறுதியில் விழுப்புரத்தை அடுத்துள்ள திருவாமாத்தூர்ச் சிவதலத்தில் எல்லை தாண்டா விரதமுடன் பத்து ஆண்டுகள் தங்கித் தவம் புரிந்து தமது ஐம்பத்தொன்பதாம் வயதில் 5-7-1898இல் ஞான சமாதி கொண்டார். இவர் சமாதி கொண்ட திருக்கோயில், கௌமார மடாலயம், ஏட்டுச்சுவடிகள் முதலியன பல அன்பர்கள் ஆதரவுடன் சுவாமிகள் பரம்பரையினரால் பாது காக்கப்பட்டு வருகின்றன. இங்ஙனம் மிக்க புலமை, சீரிய தவம், செவ்விய அருளியல், திருந்தச் செயலாற்றல், இன்தமிழ் நூல்கள் பல இயற்றல் ஆகியடவைகளில் ஒப்பற்று விளங்கியவர் மஹான் வண்ணச்சரபம் அருள்மிகு தண்டபாணி சுவாமிகளாவர்.

நீளோதம் வந்தலைக்கும் திருவல்லிக்கேணியில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பார்த்தசாரதிப்பெருமான் மீது இந்தத்திருவெழுகூற்றிருக்கையை அவர் ஆணையின்படி அவர் திருமுன் சமர்ப்பிக்க, அன்றிரவு தேர் கடவியபெம்மான் ஓர் ஸ்ரீவைஷ்ணவ உத்தமர் வடிவுடன் அவர் முன் சேவை தந்து, "சிறக்கப் பாடியுள்ளாய்; அதற்குப் பரிசாக எழுநூறு பொன் தரக்கடவேன்" என்று சீட்டெழுதித்'தன் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஆழ்வார் ஆசாரியர்கள் சான்றுடன் கையொப்பமிட்டுத்தர, அதனைக் கண்ட வண்ணச்சரபம், கீதா சாரியனை நோக்கி, "எழுநூறு பொன் கடன் சீட்டு ஏன் அனுப் பினீரே" என்று வினவி, அதையே ஈற்றடியாக அமைத்து ஒருபதிகமாகப் பாடிக் கண்ணன் அருள்பெற்றுத் திகழ்ந்தார் என்பது ஈண்டு அறிய வேண்டுவது. மேலும் இப்பெரும் புலவர் ஸ்ரீபார்த்தசாரதிப்பெருமான்மீது பதிகங்கள் பாடி அவர் திருவருளுக்குப் பாத்திரமானர். இந்த எழுகூற்றிருக்கை யைத் தவிர, எண்கூற்றிருக்கை, தசகூற்றிருக்கை என்ற வகைகளிலும் சித்திரகவிகள் பதினென்று 'இயற்றியுள்ளார் என்பது இவரது தனிச்சிறப்பு.

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் இயற்றியருளிய

# சென்னை திருவல்லிக்கேணி
# ஸ்ரீ பார்த்தசாரதி

## திருவெழுகூற்றிருக்கை

### காப்பு

நேரிசை வெண்பா

ஏனோர் விதிதொட் டெழுகூற் றிருக்கைசொல்லி
யானோர் பதிகூற் றிருக்கையுஞ்சொற்—றேன்ஓர
என்துணிவார் ஏழ்கூற் றிருக்கையுஞ்சொல் லென்றுகண்ணன்
இன்றுரைத்தான் ஈதறிவார் யார்.

---

பதவுரை :

ஏனோர் - பிறருடைய (அதாவது, எனக்கு முன்னால் எழுகூற்றிருக்கை பாடியவர்களுடைய)

விதிதொட்டு - முறையைப் பின்பற்றி

எழுகூற்றிருக்கை சொல்லி - (அவர்கள் பாடிய) திருவெழுகூற்றிருக்கையாகிற சித்திர கவிகளை யெல்லாம் சொல்லிப் பயின்றபின்

யான் - அடியேனும்

ஓர்பதிகூற்றிருக்கையும் - திருவல்லிக்கேணிப்பதியைப் பற்றிய எழுகூற்றிருக்கையும்

சொற்றேன் – சொல்லத் துணிந்தேன்;

ஓர - இதனை ஆராய்ந்து பார்க்க

துணிவார் என்? – துணிச்சலோடு வருபவர் என்பற்றி? (வர வேண்டிய அவசியம் இல்லை; ஏனெனில்)

கண்ணன் - (அப்பதியில் கோயில் கொண்டுள்ள) பார்த்தசாரதி யாகிய கண்ணன்தான் (என்னைப் பார்த்து)

ஏழ்கூற்றிருக்கையும் சொல் என்று - திருவெழுகூற்றிருக்கை கவியையும் பாடு என்று

இன்று உரைத்தான் - இன்று ஆணையிட்டான்;

ஈதறிவார் யார் – இந்தத் தெய்வீக ஆஜ்ஞையை (என்னை யன்றி) அறிபவர் வேறு யாவருளர்?

**விசேடவுரை :**

இதனால் இக்கவி, கண்ணன் ஆஜ்ஞையால் பாடப்பட்டது என்று காரணம் காட்டியபடி. அதுவே காப்பாவது. 'சொற்றேன்' என்பது வகையுளி பெற்று வந்தது.

(இச் செய்யுளில் கருவிளங்காய் கூவிளங்காய்ச் சீர்கள் வந்துள்ளன)

# திருவெழுகூற்றிருக்கை

(நிலைமண்டில ஆசிரியப்பா)

ஒருபெருங் கரத்தால் ஒருமலை யெடுத்தன்(று)
இருமருப் பானினம் ஒருங்கு காத்தனை;
ஒருகா ரணத்தால் இருதாய் மகவாய்
மூவாப் பொதுவர் முல்லை யிருநகர்
ஒன்றிடை வளர்ந்தனை; ஒரு பேயுயிருண்(டு)
எஞ்சலில் களியொடு மூன்று பொழுதினும்
நாலத் தூக்கிய உறித்தயிர் கவர்ந்தனை;
மூன்றுல கடர்தரும் இருமரு தழிப்பான்
ஒருரற் கட்டுண்டு ஒருவா றழுதனை;
இருதிரு வடியாற் சகடு கொன்றனை;
முந்நாற் புலவர்தம் ஐவகை நிறத்த
நாற்கவி சூடினை மூவிரு சமயத்து
ஒன்றுந் தேவரும் யானொருவ னேயென
இரங்குபு மூன்றும் மைத்துனற் குணர்த்தினை;
நாற்பயன் விழைவார்க் கஞ்சல் நல்கி
ஆறமர் சடையான் ஆதியர் வழுத்த
அல்லிக் கேணிக்கு ஐயென அமர்ந்தனை;
நான் கூறிடு முத்தமிழ்க் கவியொலியும்
இருகாதிடை கொளற்(கு) ஒருசிறிது வேட்டனை;
ஓரம் ஆர்ந்த இருமையிற் கொடியார்
அவையிடை முத்தொத்து அறலுகுத் தழுதாள்
உவகையி னுலுன் னுயரருள் விளக்கினை;
ஐவர் ஒற்றெனும்பேர் ஆறென வேற்றனை;
எழுநிகர் பலதோள் வாணற் செற்றனை
அறுவை பற்பல கொண்டு அணிமர மேறினை;
ஐங்கணைக் கிழவனை மகவாப் பெற்றனை;
நாலொடு மூன்று நன்மகர்த் துணித்த
ஈர்வா ளேந்தும் ஒருபெரு மாமனைக்
கடற்படை யுடன்கெடக் காய்ந்தர சாண்டனை;
கண்ணனுன் திருப்பேர் காசில தாயின்

என்துயர் கண்டே யிருப்பா யாதலின்
நந்துறத் தணந்து நலமுழு தருள்வாய்
செச்சை ஆங்காங்குத் தெரிதர நிவந்த
பச்சைமால் வரைநேர் பார்த்த சாரதியே.

## வண்ணச்சரபம் அருளிச்செய்த

# திருவெழுகூற்றிருக்கையின் உரை

(இ-ள்) ஒரு பெருங் கரத்தால் – ஒரு பெரிய கையினுல்
அன்று - (இந்திரன் விடாது மழை பொழிந்த) அன்று
ஒருமலை எடுத்து - ஒப்பற்ற கோவர்த்தன மலையைக் (குடையாகத்) தூக்கி யெடுத்து
இரு மருப்பு ஆனினம் - இரண்டு கொம்புகளையுடைய பசுக் கூட்டங்களை
ஒருங்கு காத்தனை – ஒருசேரக் காப்பாற்றினுய்;
ஒரு காரணத்தால் – (துஷ்ட நிக்ரஹம் என்ற) ஒரு காரணத்தினுல்
இருதாய் மகவாய் - தேவகி, யசோதை என்ற இருதாயர்க்கும் பிள்ளையாய்
மூவாப் பொதுவர் – அழியாது நிலைபெற்ற ஆயர்களுடைய
முல்லை - கொல்லை நிலத்தைச் சார்ந்த
இருநகர் ஒன்றிடை - வடமதுரை, கோகுலம் என்ற இரண் டனுள் கோகுலம் என்ற ஆய்ப்பாடியில்
வளர்ந்தனை - வளர்ந்து வந்தாய்; (அங்ஙன் வளருங் காலத்து)
ஒரு பேய் உயிர் உண்டு – பூதனை யென்னும் ஒரு பேயின் உயிரைக் குடித்து (அதனுல்)
எஞ்சல்இல் களியொடு - குறைபடாத மகிழ்ச்சியோடு
மூன்று பொழுதினும் – காலை, உச்சி, மாலை என்ற முப் போதினும்
நாலத்தூக்கிய - தொங்கும்படி தூக்கிக் கட்டிய
உறித்தயிர் கவர்ந்தனை - உறிகளில் வைத்த தயிரைத் திருடிப் பருகினுய்;
மூன்றுலகு அடர்தரும் – மூன்று லோகங்களிலும் பரவியுள்ள
இருமருது அழிப்பான் - இரண்டு மருத மரங்களை முறிந்து சாயும்படி

ஓர் உரல் கட்டுண்டு - ஒரு (பொத்த) உரலோடு கட்டுப்பட்டு
ஒருவாறு அழுதனை - (உதடு துடிக்கும்படி) ஒரு வகையாக அழுதாய்;
இரு திருவடியால் – இரண்டு கால்களால்
சகடு கொன்றனை – சகடாசுரனை வதைத்தாய்;
முந்நாற் புலவர்தம் - பன்னிரு ஆழ்வார்களுடைய
ஐவகை நிறத்த - வெண்பா, ஆசிரியம், கலி, வஞ்சி, மருட்பா என்ற ஐந்து வகைப் பாக்களையுடைய
நாற்கவி - (ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்னும்) நான்கு வகைக் கவிகளையும்
சூடினை – (புகழ்மாலையாகச்) சூடினாய்;
மூ இரு சமயத்து – வைணவம், சைவம், சாக்தம், காணபதம் கௌமாரம், சௌரம் என்ற ஆறு சமயங்களிலும்
ஒன்றும் - பொருந்தியிருக்கின்ற
தேவரும் – தெய்வங்களும்
யான் ஒருவனே என – நான் ஒருத்தனே ஆவேன் என்று
இரங்குபு - மனமிரங்கி
மூன்றும் மைத்துனற்கு - (அத்தையாகிய குந்தியின் மூன்றும் மைந்தனான) அருச்சுனனுக்கு
உணர்த்தினை - கீதையின் மூலம் உபதேசம் செய்தாய்;
நாற்பயன் விழைவார்க்கு - அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு உறுதிப் பொருளையும் விரும்புபவர்க்கு
அஞ்சல் நல்கி – அபயம் கொடுத்து
ஆறமர் சடையான் ஆதியர் - கங்கையைச் சடையில் தரித்த சிவபிரான் முதலாகிய தேவர்கள்
வழுத்த - துதி செய்ய
அல்லிக்கேணிக்கு - திருவல்லிக்கேணி என்னும் பதிக்கு
ஐ என - தலைவனாக
அமர்ந்தனை - எழுந்தருளியிருக்கின்றாய்;
நான் – அடியனாகிய நான்
கூறிடும் - சொல்லுகின்ற
முத்தமிழ்க்கவி ஒலியும் – மூன்று தமிழின்பாற்பட்ட செய்யுள்களின் ஓசையையும்
இருகாதிடை கொளற்கு - இரு செவிகளாலும் ஏற்பதற்கு
ஒரு சிறிது வேட்டனை - கொஞ்சமேனும் விரும்பினாய்;
ஓரம் ஆர்ந்த – பட்சபாதம் நிரம்பிய

இருமையிற் கொடியார் - இரண்டாந்தன்மையொடு கொடிய வராகிய துரியோதனுதியரின்

அவை இடை - சபை நடுவில்

முத்து ஒத்து அறல் உகுத்து - முத்துப் போன்ற கண்ணீர்த் துளிகளைச் சொரிந்து

அழுதாள் - அழுதவளாகிய திரௌபதியின்

உவகையினுல் -(பின்னர் அவள் கொண்ட) மகிழ்ச்சியினுல்

உன் உயர் அருள் விளக்கினை - உன்னுடைய பெருங் கருணையை உலகறிய விளக்கமுறச் செய்தாய்;

ஐவர் ஒற்று எனும் பேர் - பாண்டவர்களாகிய ஐவரின் தூதன் எனும் பேரை

ஆறு என ஏற்றனை – சிறந்த அறமென ஏற்றுக்கொண்டாய்;

எழுநிகர் – தூணைப் போன்ற (பலம் பொருந்திய)

பலதோள் - ஆயிரம் தோள்களையுடைய

வாணன் செற்றனை - பாணுசுரனைக் கொன்றருளினுய்;

பற்பல அறுவை கொண்டு - பல கோபிமார்களுடைய ஆடைகளை எடுத்துக்கொண்டு,

அணிமரம் ஏறினை - அழகிய குருந்த மரத்தில் ஏறிக் கொண்டாய்;

ஐங்கணை கிழவனை - பஞ்ச பாணனுகிய மன்மதனை,

மகவா பெற்றனை - மகனுகப் பெற்ருய்;

நாலொடு மூன்று நன்மகர் - ஏழு நல்ல குழந்தைகளை

துணித்த – வெட்டுதற்குக் காரணமாகிய

ஈர் வாள் - கூரிய வாளாயுதத்தை


ஏந்தும் - கையில் பிடித்த

ஒரு பெரு மாமனை - கொடுமையில் ஒப்பற்ற மாமனுகிய கம்சனை

கடல் படையுடன் கெட - கடல்போல் பரந்த தன் சேனையுடன் மடிய

காய்ந்து – கோபித்து

அரசாண்டனை – அவன் அரசாட்சியைப் பற்றிக்கொண்டு (உக்ரசேனனுக்கு அளித்து அவன் மூலம்) ஆண்டாய்;




வண்ணச்சரபம் ஸ்ரீதண்டபாணி சுவாமிகள்
அருளிச்செய்த
திருவல்லிக்கேணி ஸ்ரீபார்த்தசாரதி
திருஎழுகூற்றிருக்கை

செச்சை – சந்தனக்குழம்பை

ஆங்காங்கு - உடம்பு முழுதும்

தெரிதர நிவந்த - நன்கு விளங்குமாறு பூசிய

பச்சைமால் வரைநேர் - பச்சை மாமலை போன்ற

பார்த்தசாரதியே – பார்த்தசாரதிப் பெருமானே!

கண்ணன் உன் திருப்பேர் - கண்ணன் என்பது உனக்கு அமைந்த திருநாமம் (கண்ணால் காண்பவனாதலின் கண்ணன் எனப்பட்டாய்);

காசு இலது ஆயின் – அந்தத் திருநாமம் குற்றமிலாததாய் இருக்குமாயின் (அதாவது, கண் உனக்கு நன்கு தெரிவதாதலின்)

என் துயர் கண்டே இருப்பாய் – நான்படும் துன்பத்தை உன் கண்ணால் பார்த்தே இருப்பாய்;

ஆதலின் - ஆகையால்

நந்து - சாதலாகிய என் துன்பத்தை

உறத் தணந்து - நன்றாகப் போக்கி

நலமுழுது அருள்வாய் - நன்மை முழுவதையும் அனுக்கிரகிப்பாய் (என்றவாறு)

**விசேடவுரை :**

"ஒரு பேய் உயிருண்டு"—என்றவிடத்து "யிரு" என்ற எண் பெறப்படும்;

"மூவிரு சமயத்து ஒன்றும் தேவரும் யானொருவனே"—என்றவிடத்து "ஓராறு பேத சமயங்களுக்கும் உருவாகி நின்ற ஒருவன்" என்ற வில்லிபுத்தூரார் வாக்கு நினைக.

இரங்குபு - என்ற இச்சொல்லில் 'இரண்டு' என்ற சொல்லின் ஒலி தொனியாக் கொள்ள வேண்டும்.

மைத்துனன் - அத்தை மகனை மைத்துனன் என்பது வழக்கு;

மூன்றும் மைத்துனன் - அருச்சுனன், குந்திதேவி கண்ணனுக்கு அத்தையாவள்.

அஞ்சல் நல்கி'' - "ஸர்வதர்மான் பரித்யஜ்ய மாம் ஏகம் சரணம் வ்ரஜ
அஹம் த்வா ஸர்வபாபேப்யோ மோக்ஷயிஷ்யாமி மாசுச''
என்றது.

ஐ - தலைவன்; ஐயர் என்ற சொல் நோக்குக.

இருமை – இரண்டாந்தன்மை; சொல்வேறு, செயல் வேறு என்றபடி.

உவகையினுல் என்றவிடத்து 'ஆல்' – நால் என்பது போல் தொனி.

ஒற்று - இங்கு, தூதன் என்ற பொருளது.

ஆறு – அறம். "ஆறன்மையின் முதியாரையும் எறியான் அயில் உழவன்''—(சீவகசிந்தாமணி 2261)

'நாலொடு மூன்று நன்மகர்த்துணித்த' – என்றவிடத்து துணித்தலை அறுவரையேயாயினும், இங்ஙன் எழுவரைக் குறித்தது பெரும்பான்மை பற்றி என்க. ஏழாம்மகவையும் துணிக்க முயன்றமையிலும் நோக்கு.

'மாதுலனுகியும் ஏதிலனுகிய வஞ்சன் கஞ்சனை' – "ஒரு பெரு மாமன்'' என்றது இகழ்ச்சிக் குறிப்பினது.

கடற்படை – கடல் போன்ற படை, உவமைத் தொகை.

கண்ணன் - காணும் சக்தியுடையவனுதலின் கண்ணன் என்று பேர்; ஆகவே குருடனல்லன் என்றபடி.

காசு – குற்றம்; இங்கு குருடு.

நந்துதல்–சாதல்; இங்கு யமபயம். நந்து—முதனிலைத் தொழிற் பெயர்

செச்சை - சந்தனக்குழம்பு; மங்களம் தெரிப்பது.

சுபம்

பிற்சேர்க்கை

# தலக்குறிப்புகள்

(தொகுப்பு: வலையப்பேட்டை கிருஷ்ணன்)

## மதுரை

பழைய பாண்டிய நாட்டின் தலைநகர் மதுரை. "தேனுறை தமிழும் திருவுறை கூடலும்" என்று தமிழையும் மதுரையையும் சேர்த்துப்பேசுகிறது கல்லாடம். மதுரை, ஆலவாய், கடம்பவனம், நான்மாடக்கூடல், கன்னிபுரீசம், சிவராஜதானி என்று பல பெயர்களை உடையது.

சிவபெருமானும் முருகக் கடவுளும் தலைச்சங்கமேறித் தமிழாராய்ந்தனர் என்றும், தமிழின் பொருட்டே சிவபெருமான் மீனாட்சி சுந்தரராய் மதுரைக்கு வந்தருளினர் என்றும் கூறப்படுகிறது.

நக்கீரரும், கடைச் சங்கம் அமர்ந்த புலவர்களும், தேவார திருவாசகம் அருளிய சமயகுரவர்களும், ஏனைய நாயன்மார்களும், குமரகுருபரரும், அருணகிரிநாதரும் இன்னும் பலரும் பாடியும் பரவியதும் மதுரையம்பதி. கபிலர், பரணர், நக்கீரர் முதலிய பொய்யடிமையில்லாத புலவர்களாகிய சங்கத்தார் இருந்த இடம். விபூதி, ருத்ராக்ஷம், சடைமுடி என்ற மூன்றையுந் தரித்து மூர்த்தி நாயனர் அரசாட்சி செய்த நகர். அரிமர்த்தன பாண்டியன் காலத்தில் மாணிக்கவாசக சுவாமிகள் 'தென்னவன் பிரமராயன்' என்னும் பட்டப் பெயருடன் மந்திரியாயிருந்த தலைநகர். சமணசமயத்திற் பிரவேசித்திருந்த கூன்பாண்டியனுடைய சுரநோயைத் திருஞான சம்பந்தர் "மந்திரமாவது நீறு" என்னும் திருநீற்றுப் பதிகம் ஓதித் தீர்த்தருளியும், "போக மார்த்த பூண்முலையாள்" என்னும் திருநள்ளாற்றுப் பதிகம் எழுதியிருந்த ஏட்டை அனலில் இட்டு வேகாமல் எடுத்தும், "வாழ்க அந்தணர்" என்னும் திருப்பாசுரம் எழுதிய ஏட்டை வைகையாற்றிலேயிட்டு நீரை எதிர்த்துக்

கொண்டு செல்லும்படியாகச் செய்தும் இவ்வாறு சமணர்களை வென்று பாண்டியனுடைய கூனை நிமிர்த்தி, நின்றசீர் நெடுமாறனுக்கிச் சைவனுமாக்கிப் பாண்டியநாடு முழுவதும் பரவியிருந்த சமண் இருளைப் போக்கிச் சைவ ஒளியைப் பரப்பிய பீடுடைய திருப்பதி. பாண்டியனுடைய தேவியாராகியும், சைவ சமயத்தை தவிட்டு வழுவாது உறுதியாக வாழ்ந்தவரான மங்கையர்க் கரசியாரும், மந்திரியாராகிய குலச்சிறை நாயனுரும் திருஞான சம்பந்தப் பெருமானுலே தமது தேவாரத்தில் சிறப்பித்துப் பாடப்படும்படியான பெரும் பாக்யத்தைப் பெற்று வாழ்ந்திருந்த வளநகர்.

நடராஜப் பெருமானது பஞ்ச சபைகளில் ஒன்ருகிய ரஜதசபை (வெள்ளியம்பலம்) இத்தலத்தில்தான் உள்ளது. குலசேகர பாண்டியன் என்ற அரசனுக்கிரங்கி இங்கே நடராஜப் பெருமான் கால்மாறி ஆடினுர் என்பது வரலாறு. இங்குள்ள ஆயிரக்கால் மண்டபம் ஒரு சிற்பக் கருவூலம். இங்கு நாயக்க மன்னர்களின் அமைச்சராயிருந்து நல்லாட்சி புரியவைத்த தளவாய் அரியநாத முதலியார் குதிரைமேல் அமர்ந்திருப்பதுபோல் நேர்த்தியான சிலையமைப்பை இன்றும் காணலாம்.

கோயிலுக்குள் அம்மன் சன்னிதிக்குத் தென்கீழ்பால் பொற்ரு மரைத் தடாகம் உள்ளது, இங்குத்தான், திருவெழுகூற்றிருக்கை பாடிய நக்கீரனுர் வெப்பு நோயின் கொடுமையால் தடாகத்தில் வீழ, அவரைப் பெருமான் தம் கைகொடுத்துக் கரையேற்றினுர் என்பது வரலாறு. சுவாமி சன்னிதிக்குச் செல்லும் வழியில் திருவெழுகூற்றிருக்கை தேர்வடிவில் சலவைக் கல்லில் அமைக்கப் பெற்றுள்ளது.

பரஞ்சோதி முனிவர் அருளிய திருவிளையாடற்புராணம், பெரும்பற்றபுலியூர் நம்பி இயற்றிய திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம், வீமநாதபண்டிதர் பாடிய கடம்பவன புராணம், குமரகுருபரர் பாடிய மதுரைக்கலம்பகம், மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ், மீனுட்சியம்மை குறம் முதலிய பலநூல்கள் மதுரை யையும், மீனுட்சிசுந்தரேச்வரர் பெருமைகளையும் பேசுகின்றன.

**திருச்சிற்றம்பலம்**

மந்திர மாவது நீறு வானவர் மேலது நீறு
சுந்தர மாவது நீறு துதிக்கப்படுவது நீறு
தந்திர மாவது நீறு சமயத்திலுள்ளது நீறு
செந்துவர் வாயுமைபங்கன் திருஆலவாயான் திருநீறே.

—திருஞானசம்பந்தர்

வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத்
தூயானைத் தூவெள்ளை யேற்றான் தன்னைச்
சுடர்த் திங்கட் சடையானைத் தொடர்ந்து நின்றென்
தாயானைத் தவமாய தன்மை யானைத்
தலையாய தேவாதி தேவர்க் கென்றும்
சேயானைத் தென்கூடல் திருவா லவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேன் நானே

—அப்பர்

மின்னவிரம் பலங்காணக் காசிநகர் வதிந்திறக்க வியன் காளத்திப்
பொன்னகரம் பக்தியினால் வழிபாடு செயவளிக்கும் போகம்வீடு.

அறந்தழையுந் திருவால வாய்கேட்டவுடன் போக மளிக்கு மீண்டு
பிறந்திறவாப் பேரின்பக் கதியளிக்கும்.

—திருவிளையாடற்புராணம்

---

# சீகாழி

சீகாழி என்றவுடனேயே அழுது உலகை வாழ்வித்த கவுணியரான திருஞானசம்பந்தர் நினைவு நமக்கு ஏற்படுகின்றது. மூன்று வயதில் குழந்தை குளக்கரையில் உலகம் உய்வதற்காக அழ, அம்மையப்பர் எழுந்தருள, உமையம்மை ஞானப்பாலை ஊட்ட, சிவஞான சம்பந்தப் பிள்ளையாராகி 'தோடுடைய செவியன்' என்று பசுந்தமிழ்ப்பாக்கள் பாடத் தொடங்கித் தமிழ்நாட்டின் சரித்திரத்தில் பொற்காலம் பிறக்கச் செய்த இளஞ்சிங்கம் ஞான சம்பந்தப்பெருமான். தேவாரத் திருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளாக இடம் பெற்றுள்ளன சம்பந்தர் பாடல்கள். பாவகைகள் எத்தனை எத்தனை! பண்வகைகள் எத்தனை எத்தனை!

இசைத்தமிழுக்குப் புகழூட்டிய இந்தச் சிவஞானச் சிகாமணி தோன்றிய இடம் சீகாழி. சட்டைநாத சுவாமி கோயில் என வழங்கும் இத்தலக் கோயில் மிகப் பெரிய மதில்களும் கோபுரங்களுடனும் கூடியது. கோயில் மூன்று பகுதியாக உள்ளது. பெரிய பகுதியில் தோணியப்பர், சட்டைநாதர் சன்னிதிகளும், வட புறத்தில் திருநிலைநாயகியம்மை சன்னிதியும், முன்புறத்தில் பிரம

தீர்த்தமும் அதன் அருகில் திருஞானசம்பந்தர் சன்னிதியும் அமைந்துள்ளன.

மூன்றுவயதுகுழந்தையான திருஞானசம்பந்தர் மிகவும் அழகாகக் காட்சியளிக்கும் இத்தலத்தில் இவரது இடக்கையில் சிறுகிண்ணம் இருக்கும், (அம்மை அருள்ஞானத்தைக் குழைத்துக் கொடுத்த பால்கிண்ணம் அதுவே போலும்) வலக் கையோ 'தோடுடைய செவியனும்' தோணிபுரத்தானைச் சுட்டிக்காட்டும்.

கோயிலின் மேற்பிராகாரத்தில் கட்டுமலைமீதுஏறித் தோணியப்பரையும், பெரியநாயகியையும் வழிபடலாம். அவருக்கு மேல் தளத்தில் தென்திசைநோக்கிச் சட்டைநாதர் காட்சி அளிக்கிறார். தோணியப்பரும் சட்டைநாதரும் சுதையால் ஆன திருவுருவங்கள்.

இத்தலத்தில் திருஞானசம்பந்தர் அருளிச்செய்த திருவெழுகூற்றிருக்கையில் சீகாழிக்குரிய பன்னிரு திருப்பெயர்களையும் விரிவாகக் குறிப்பிடுகிறார்.

திருஞானசம்பந்தர் 67 பதிகங்களாலும், திருநாவுக்கரசர் இரு பதிகங்களாலும் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஒரு பதிகத்தாலும் இத்தலத்து இறைவனைப் போற்றியுள்ளார்கள். திருஞானசம்பந்தரோடு திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரும் சேர்ந்து முதன் முதலாக அவர் அருளிச் செய்யும் தேவாரத் திருப்பதிகங்களை யாழில் வாசிக்கும்படியான சிறப்பைப் பெற்ற தலம். கணநாத நாயனார் வாழ்ந்த திருத்தலம். அருணகிரிநாதர் சீகாழியைப் பற்றி 14 திருப்புகழ் அருளியுள்ளார். இவைகளில் ஞானசம்பந்தர் முருகப்பெருமானின் திருஅவதாரம் என்னும் கருத்தை மிக அழகாகக் காட்டுகிறார். அவர் சுவாமிமலையில் அருளிச் செய்த திருஎழுகூற்றிருக்கையில்

"ஒருநாள் உமை இரு முலைப்பாலருந்தி
முத்தமிழ் விரகன் நாற்கவிராஜன்
ஐம்புலக் கிழவன் அறுமுகன் இவன்என
எழில்தரும் அழகுடன் கழுமலத் துதித்தனை

என்று போற்றுகிறார்.

முக்கிய திருவிழாக்கள் : கார்த்திகைச் சிறப்பும், கந்தசஷ்டி விழாவும், சித்திரைசஷ்டியில் திருஞானசம்பந்தர் ஞானப்பால் உண்டருளிய திருவிழாவும் நடைபெறுகின்றன.

அருணாசலக்கவிராயர் பாடிய தலபுராணமும், திரிசிரபுரம் மகாவித்வான் மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் இயற்றிய சீகாழிக் கோவையும் இத்தலத்திற்குண்டு. கோயில் தருமையாதீன நிர்வாகத்திலுள்ளது.

தொன்மையான இக்கோயிலில் சோழமன்னர்கள் காலம் தொடங்கிக் கிருஷ்ணதேவராயர் காலம் வரையிலான 47 கல் வெட்டுகள் உள்ளன. இவைகளில் நிலஅளவை. பல பழக்க வழக்கங்கள், நிபந்தங்கள் ஆகிய விவரங்கள் உள்ளன. "இராஜ ராஜ வளநாட்டுத் திருக்கழுமல நாட்டுப் பிரமதேசம் திருக் கழுமலம்" என்ற பெயரில் இத்தலம் குறிக்கப் பெறுகிறது.

### திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடைய சுடலைப்பொடி பூசியென் உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான்முனை நாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடைய பிரமாபுர மேவிய செம்மான் இவனன்றே

போதையார் பொற்கிண்ணத் தடிசில் பொல்லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்
காதையார் குழையினன் கழுமல வளநகர்ப்
பேதையாள் அவளொடும் பெருந்தகை இருந்ததே.

—திருஞானசம்பந்தர்

ஒன்றுதா னறியார் உலகத்தவர்
நின்று சொல்லி நிகழ்ந்த நினைப்பிலர்
துன்று வார்பொழில் தோணிபுரவர்தம்
கொன்றை சூடுங் குறிப்பது வாகுமே.

—அப்பர்

சாதலும் பிறத்தலுந் தவிர்த் தென்னை வகுத்துத்
தன்னருள் தந்தவென் தலைவனை மலையின்
மாதினை மதித்தங்கோர் பால்கொண்ட மணியை
வருபுனல் சடையிடை வைத்த எம்மானை
ஏதிலென் மனத்துக்கோர் இரும்புண்ட நீரை
எண்வகை ஒருவனை எங்கள் பிரானைக்
காதில் வெண் குழையனைக் கடல்கொள மிதந்த
கழுமல வளநகர்க் கண்டுகொண் டேனே

—சுந்தரர்

# திருக்குடந்தை (கும்பகோணம்)

திருக்கோயில்கள் மிக அதிகமான திருத்தலம். பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை மகாமகத் திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. ஊரின் நடுவே அமைந்துள்ள ஆலயங்களில் ஸ்ரீ சார்ங்கபாணி சுவாமி கோயிலும் ஒன்றாகும். பதினேரு நிலைகளுடன் கூடிய மிகப் பெரிய கோபுரமும் மதிற்சுவர்களையும் உடையது. நாலாயிர திவ்ய பிரபந்தத்தைச் சேகரித்துத் தொகுத்த நாதமுனிகளை அப்பணியில் ஈடுபடுத்திய பெருமான் குடந்தை ஆராவமுதனே. தாயார் கோமளவல்லி.

பூதத்தாழ்வார், பேயாழ்வார், திருமழிசையாழ்வார். நம்மாழ்வார், பெரியாழ்வார், திருமங்கையாழ்வார் ஆகிய ஆறு ஆழ்வார்களால் மங்களாசாசனம் செய்யப்பெற்ற திவ்யமானபதி, திருமழிசையாழ்வார் இத்தலத்திற்கு வந்தபோது ஆராவமுதனைக் கண்டார். அமுதன் நித்திரையில் இருந்தார். தான்வந்து நிற்பதை அமுதன் அறிந்துகொண்டதற்கு யாதொரு குறிப்பும் ஆழ்வாருக்குத் தெரியவில்லை.

நடந்த கால்கள் நொந்தவோ
நடுங்க ஞாலம் ஏனமாய்
இடந்த மெய் குலுங்கவோ
விலங்குமால் வரைச்சுரம்
கடந்த கால் பரந்தகாவிரிக்
கரைக் குடந்தையுள்
கிடந்தவாறு எழுந்திருந்து
பேசு வாழிகேசனே

என்று பாடக் கேட்ட அமுதன் சற்று எழுந்து பேசத் தொடங்கினாராம். இன்றும் பெருமான் சற்றே படுக்கையினின்று எழுந்திருக்கும் கோலத்தில் காட்சியளிக்கிறார். இதனை உத்தான சயனம் என்கிறார்கள். திருமழிசையாழ்வார் எம்பெருமான் திருவடியில் சேர்ந்த சிறப்பான பதி. கோயிலில் துவஜஸ்தம்பத்தின் அருகில் திருஎழுகூற்றிருக்கை தேவர்வடிவில் சலவைக்கல்லில் அமைக்கப் பெற்றுள்ளது.

பெருமாள் சன்னிதியும் முன் மண்டபமும் ரதம்போல் அமைக்கப்பெற்றுள்ளன. மண்டபத்தின் நான்கு பக்கங்களிலும் சக்கரங்கள்—அவைகளை இழுத்துச் செல்லும் குதிரைகள். இதனால்தானே என்னவோ திருமங்கையாழ்வார் திருவெழுகூற்றிருக்கை என்னும் ரதபந்தத்தை இங்கே அமைத்துப் பாடியிருக்கிறார் போலும்!

---

# சுவாமிமலை

சிந்தை குளிர்விக்கும் சந்தக் கவியால் எந்தை அருணகிரிநாதர் சிறப்பாகப் போற்றிய தலங்களில் ஒப்பற்ற தலம் சுவாமிமலை. அருணகிரிப் பெருமானுக்கு முருகன் திருவடி காட்டியதும், திரு எழு கூற்றிருக்கை என்னும் தேர்வடிவில் அமைந்த சித்திர கவியைப் பெற்றுள்ளதும் இத்தலத்தின் மிகச் சிறப்பான செய்திகள். கும்ப கோணத்தில் ஆறுமுகப்பெருமானைத் தரிசித்து, "செஞ்சொல்சேர் சித்ரத் தமிழால் உன் செம்பொன் ஆர்வத்தைப் பெறுவேனோ" என்று வேண்டிய அருணகிரிநாதர் அடுத்துள்ள சுவாமிமலையில் திருஎழுகூற்றிருக்கையாம் சித்ரகவி பாடித் தம் எண்ணம் நிறை வேறும் பேறுபெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

மலையேயில்லாத தஞ்சை மாவட்டத்தில் கட்டுமலையில் அமைந்த சுவாமிமலை சுவாமிநாதப் பெருமான் திருக்கோயில் சிறப்பான ஆறு திருப்பதிகளில் நான்காவது பதி. 'ஏரகவெற்பெனும் அற்புத மிக்க சுவாமிமலைப் பதி'யை 38 திருப்புகழ்ப் பாக்களில் போற்றிப் பரவு கிறார் அருணகிரிநாதர். அவரது கூற்றுப்படி நக்கீரர் திருமுருகாற்றுப் படையில் போற்றிய 'திருவேரகம்' இதுவே.

இங்கே சிவபெருமானுக்குப் பிரணவப் பொருளை உபதேசித் தருளிய தகப்பன் சாமியாக, சுவாமிநாதனாக, குருநாதனாக, குருபரனாக, ஞானபண்டிதனாக, ஞானசொரூபனாக முருகப்பெரு மான் காட்சியளிக்கிறார். இத்தலத்தை அருணகிரியார் குருமலை, குருகிரி, ஏரகவெற்பு என்றெல்லாம் குறிப்பிடுவார்.

கோயிலில் நுழைந்தவுடன் கீழே மீனாட்சியம்மை, சுந்தரேசு வரப் பெருமானது சன்னிதிகள் உள்ளன. மலை ஏறிச் செல்ல 60 படிகள். 30 படிகள் கடந்தவுடன் மலைக்கோயிலை ஒருமுறை வலம் வரலாம். இங்கு அருணகிரியார் அருளிச்செய்த திருஎழு கூற்றிருக்கையை சென்னை திருவல்லிக்கேணி முருகன் திருவருட் சங்கத்தினர் தேர்வடிவில் சலவைக்கல்லில் அமைத்துள்ளனர் தண்டபாணிக் கோலத்தில் சுவாமிநாதப் பெருமான் அடியார்கட்கு அருள் செய்கிறார். தினமும் ஆறு கால வழிபாடுகள் மாத கார்த்திகை, சித்திரைப் பெருவிழா, கந்த சஷ்டிவிழா, திருக் கார்த்திகை, பங்குனி உத்திரப் பெருவிழா முதலியன சிறப்பாக நடைபெறுகின்றன.

பங்குனி உத்திரப்பெருவிழாவின்போது அருகிலுள்ள திருவலஞ் சுழியில் முருகன் வேடரூபக் காட்சியளித்துப் பின் அரிசிலாற்றில் வள்ளியம்மையை யானை விரட்ட, வள்ளி முருகனை மணக்கச் சம்மதம் தெரிவித்து அன்று திருக்கல்யாணவிழா நடைபெறுகிறது. வள்ளியை யானை விரட்டும் காட்சியைப் பார்த்தவர் பரவசமடைவர்.

காவடி எடுத்தல், முடி காணிக்கை முதலிய விசேஷ பிரார்த் தனைகள் தினமும் நடைபெறுகின்றன. ஆண்டிற்கு ஆயிரக்கணக்கில் திருமணங்களும் இக்கோயிலில் நடைபெறுகின்றன. தங்கரதம் செய்துள்ளனர்.

தற்போதுள்ள கருங்கல் திருப்பணிகள் 400 ஆண்டுகட்கு முற்பட்டவை. விஜய நகர மன்னர்கள் அளித்துள்ள தானங்கள் பற்றிய கல்வெட்டுக்கள் உள்ளன. இத்தலத்தைப்பற்றித் திருப் புகழ்ப் பாடல்கள், பிள்ளைத்தமிழ், நவமணிமாலை, திருவேரக யமக அந்தாதி ஆகிய நூல்கள் உள்ளன. அறநிலைய ஆட்சித்துறை யிலுள்ள இக்கோயிலில் வழிபடுவோர்களுக்குத் தங்கும் வசதிகள் முதலியன உள்ளன.

சரணகம லால யத்தை அரைநிமிஷ நேரமட்டில்
தவமுறைதி யானம் வைக்க அறியாத
சடகசட மூட மட்டி பவவினையி லேசனித்த
தமியன் மிடியால்ம யக்கம் உறுவேனோ
கருணைபுரி யாதிருப்ப தெனகுறையி வேளைசெப்பு
கயிலைமலை நாதர் பெற்ற குமரோனே
கடகபுய மீதி ரத்ந மணியணிபொன் மாலை செச்சை
கமழுமண மார்க டப்பம் அணிவோனே
தருணமிதை யாமிகுத்த கனமதுறு நீள்ச வுக்ய
சகலசெல்வ யோக மிக்க பெருவாழ்வு
தகைமைசிவ ஞானமுத்தி பரகதியு நீகொடுத்து
தவிபுரிய வேணு நெய்த்த வடிவேலா
அருணதள பாத பத்மம் அதுநிதமு மேதுதிக்க
அரியதமிழ் தானளித்த மயில்வீரா
அதிசயம்அ நேக முற்ற பழநிமலை மீதுதித்த
அழகதிரு வேரகத்தின் முருகோனே

—அருணகிரிநாதர்

---

# திருவல்லிக்கேணி

"திரிந்துழலுஞ் சிந்தைதனைச் செவ்வே நிறுத்திப்
புரிந்து புகன்மின் புகன்றல்—மருந்தாம்
கருவல்லிக் கேணியா மாக்கதிக்குக் கண்ணன்
திருவல்லிக் கேணியான் சீர்."

சென்னை மாநகருக்கு அணிசெய்வது திருவல்லிக்கேணி. இங்குத் தான் ஸ்ரீ பார்த்தசாரதிஸ்வாமி திருக்கோயில் கொண்டுள்ளார்.

தலபுராணத்தில் ஸ்ரீ பிருந்தாரண்ய க்ஷேத்திரம் என்று இது புகழப்படும். பிருந்தாரண்யம் என்றால் துளசிவனம். இந்தத் திவ்ய தேசம் 108 வைணவ திருப்பதிகளுள் தொண்டை நாட்டினைச் சேர்ந்த தொன்று. பேயாழ்வார், திருமழிசைப்பிரான், திருமங்கை மன்னன் மூவராலும் மங்களாசாசனம் செய்யப்பெற்ற சிறப்புடையது. "மாடமாமயிலை திருவல்லிக்கேணி" என்றதற்கேற்ப இந்தத் தலம் தெற்கினில் மயிலாப்பூரோடு ஒருங்கு சேர்ந்து முன்பு இருந்ததாகத் தெரிகிறது. இங்கு எழுந்தருளியுள்ள உற்சவமூர்த்தி ஸ்ரீ பார்த்தசாரதி எனப்படுவர்; மூலவர் ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் எனப்படுவர். சயனத் திருக்கோலத்திலுள்ள எம்பெருமானை ஸ்ரீ மந்நாதஸ்வாமி என்பர். இவரைத்தான் திருமங்கை மன்னன் "என்னையாளுடையப்பன்" என்று பாடினர். மற்றும் இந்தக் கோயிலுள் சக்கரவர்த்திதிருமகன் (இராமபிரான்) தமது சகோதரர் மூவரோடும் சீதாபிராட்டியோடும் எழுந்தருளியுள்ளார். ஸ்ரீ நரசிம்மஸ்வாமி—மூலவர் யோகநரசிம்மராகவும் உற்சவர் தெள்ளிய சிங்கராகவும் எழுந்தருளியுள்ளார். மற்றும் கஜேந்திரவரதன் சந்நிதியுள்ளது. வரதராஜப்பெருமாள் கஜேந்திரனைக் காப்பதற்காகக் கருடனை யூர்ந்து வருவதுபோல இங்குச் சேவை சாதிக்கிறார். இங்ஙனம் ஐவர் மூர்த்திகள் இந்தத் திவ்ய தேசத்தில் ஒருங்குகூடி, ஐந்து பேரும் மங்களாசாசனம் பெற்ற எம்பெருமான்களாக எழுந்தருளியிருப்பது தனிச் சிறப்பாகும். ஆக, நின்ற திருக்கோலம் (வேங்கடகிருஷ்ணன்), இருந்த திருக்கோலம் (ஸ்ரீ யோக நரசிம்மர்), கிடந்த திருக்கோலம் (மந்நாதர்), நடந்த திருக்கோலம் (சக்கரவர்த்தி திருமகன்), ஓடின திருக்கோலம் (கஜேந்திர வரதன்) ஆகிய ஐந்து நிலைகளிலும் இந்த எம்பெருமான்கள் சேவை சாதிப்பதைக் காண்கிறோம்.

இனி வேதவல்லித் தாயார், ஸ்ரீ ஆண்டாள் இருவருக்கும் தனி சந்நிதிகள் உள்ளன. ஆழ்வார், ஆசாரியர்களுக்கும் தனி சந்நிதிகள் உள்ளன. கோயிலுக்கு எதிரில் கைரவணீ என்ற புஷ்கரிணி இருக்கிறது. இந்தப் புஷ்கரிணியில் ஐந்து எம்பெருமான்களுக்குமாகத் தெப்போற்சவம் ஏழுநாள் நடைபெறுகின்றது. இங்கு வெளியிலுள்ள மண்டபங்கள்—நான்கு, பதினாறு, முப்பத்தாறு கால்களையுடையன. உள்ளேயுள்ளவை திருவாய்மொழி மண்டபம், மஹாமண்டபம் ஆகியவை. இவை உற்சவ காலங்களில் நேர்த்தியாக அலங்கரிக்கப்பட்டு ஒளிமிளிர்வனவாகும். முகத்துவார கோபுரம் வெகு அழகாயும், புராண கதைகளை யொட்டிய பிம்பங்களையுடையதாயும், ஐந்து அடுக்குகளையும் ஏழு கலசங்களையுமுடைய தாயும் மிகக் கம்பீரமாகத் தோற்றமளிக்கும்.

சங்கீத மேதைகளான ஸ்ரீ தியாகராஜர், ஸ்ரீ முத்துஸ்வாமி தீக்ஷிதர் இருவரும் இங்கு விஜயஞ் செய்து கீர்த்தனங்கள் பாடியுள்ளார்கள். சுவாமி விவேகாநந்தர் ஈடுபட்ட தலம்.

ஸ்ரீ பார்த்தசாரதிப் பெருமானுக்குச் சித்திரை மாதத்திலும், ஸ்ரீ நரசிம்மஸ்வாமிக்கு ஆனி மாதத்திலும் பிரமோற்சவம் நடைபெறும். ஏனைய எம்பெருமான்களும் சிறப்பாக அவ்வப்போது உற்சவம் கண்டருளுவர்.

இங்குப் பல்லவமன்னன் தந்திவர்மன் (கி.பி.779-830) காலத்திய கல்வெட்டும், சோழ மன்னர் ராஜராஜ தேவர் 23-ஆவது ஆண்டுக் கல்வெட்டும், விசயநகர மன்னர் சதாசிவதேவ மஹாராயர் (கி. பி. 1542-1570) காலத்திய கல்வெட்டும், இன்னும் வேறு சில விசயநகர காலத்திய கல்வெட்டுக்களும் இருக்கின்றன. இவைகளைக் கொண்டு இத்திருக்கோயிலிலுள்ள சந்நிதிகள் பல்லவர் காலத்தவை எனவும், காலவேறுபாடுகளால் அவ்வப்பொழுது புதுப்பித்தும் வித்தரிக்கப்பட்டும் வந்தவை எனவும் நிர்ணயிக்கலாம்.

ஸுமதி மன்னரின் பிரார்த்தனைக்கிணங்கித் திருவேங்கடமுடையான் அர்ச்சுனனுக்கு ரதஸாரத்யம் செய்த அவசரமாகையால், ஸ்ரீ வேங்கடகிருஷ்ணன் இரண்டு புஜங்களுடன் வலக்கையில் பாஞ்சசன்னியத்தை (திருச்சங்கை) ஏந்தியும், இடக்கை வரதஹஸ்தமாயும் நின்ற திருக்கோலத்தில் சேவை சாதிக்கிறார். இவருக்கு வலப்பக்கத்தில் மிக்க அழகுடைய திருமுகமண்டலத்துடன் ஸ்ரீ ருக்மிணி பிராட்டியார் நிற்கிறார். தாயாருக்கு வலப்பக்கத்தில் வடக்கு நோக்கியவாறு ஒரு கையில் கலப்பையையும், மற்றொரு கையை வரதஹஸ்தமாயும் வைத்துக்கொண்டு பலராமர் நிற்கிறார். பெருமாளுக்கு இடப்பக்கத்தில் தம்பி சாத்யகி கிழக்கு நோக்கியவாறும்,

பிள்ளை பிரத்யும்நன், பேரன் அநிருத்தன் இருவரும் தெற்கு நோக்கியவாறும் நிற்கிறார்கள். ஆக, பெருமாள் தமது குடும்ப ஸமேதராய் சேவை ஸாதிக்கிறார். இது, இத்தலத்தின் சிறப்பு அம்சமாகும். மூலவரின் திருமேனியே ஸ்ரீமத் பகவத் கீதையின் ஸ்வரூபம் என்று பெரியவர்கள் கருதுகிறார்கள்.

ஸ்ரீ வண்ணச்சரபம் தண்டபாணிசுவாமிகள் பார்த்தன் தேர் முன் நின்றான் மீது திருவெழுகூற்றிருக்கை பாடி அவனருள் பெற்றார் என்பது குறிக்கொள்ளத்தக்கது.

வேதத்தை வேதத்தின் சுவைப்பயனை
விழுமிய முனிவர் விழுங்கும்
கோதிலின் கனியை நந்தனார் களிற்றைக்
குவலயத்தோர் தொழுதேத்தும்
ஆதியை அமுதை என்னை யாளுடை
அப்பனை ஒப்பவரில்லா
மாதர்கள் வாழும் மாடமாமயிலைத்
திருவல்லிக்கேணிக் கண்டேனே

—திருமங்கையாழ்வார்

ஸ்ரீ ப்ருந்தாரண்ய நிவாஸாய பலராமாநுஜாயச
ருக்மிணீ ப்ராணநாதாய பார்த்தஸூதாய மங்களம்

# அருணையின் மாண்பு

அற்புத மிகப்புகழ் திருப்புகழ்ப் பாக்களை அவனிக்களித்தருளிய அருணகிரிநாத சுவாமிகளை உய்யும்படி செய்த தலம் திருவண்ணுமலை. இத்தலத்தில்தான் தண்தமிழின் மிகுநேயனும் முருகப்பெருமான் 'முத்தைத் தரு பத்தித் திருநகை'' என்று அடியெடுத்துக் கொடுத்து அவரைத் திருப்புகழ் பாடவைத்தான். 'அறிவும் அறிதத்துவமும் அபரிமித வித்தைகளையும்' இமைப்பொழுதில் அறியச்செய்து வாழ்வித்தான்.

ஞானத் தபோதனர்கள் அன்றும் இன்றும் என்றும் கூடி வணங்கும் அண்ணுமலையில்தான் எத்தனை அருளாளர்கள் வழிபட்டுப் பாடியிருக்கிருர்கள்! சுமார் 40க்கும் மேற்பட்ட பக்தி இலக்கிய வளம் செழித்த பூமி திருவண்ணுமலை. கந்த புராணத்தில் குமரவேள் வழிபட்டது. திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசர் ஆகியோரது ஒப்பற்ற தேவாரப்பாசுரங்களும், மாணிக்கவாசகரின் திருவெம்பாவை திருவம்மானை ஆகிய பாமாலை களும், அருணகிரியாரின் சந்தத் திருப்புகழும் கொண்டு பெருமை யோடு திகழும் தலம் அண்ணுமலை.

நக்கீரர், கபிலர், பரணர், பட்டினத்தார், அருணகிரிநாதர், சைவ எல்லப்ப நாவலர், சிவப்பிரகாசர், வண்ணச்சரபம், குகை நமசிவாயர், குருநமசிவாயர், சேஷாத்திரிசுவாமிகள், ரமண மகரிஷிகள், இன்னும் இப்படி எத்தனையெத்தனையோ அருளாளர்கள் அருள்பெற்றது இத்தலத்தில்தான். வச்சிராங்கத பாண்டியன், வல்லாள மகாராஜன் முதலிய அரசர்கள் இங்கு திருப்பணிகள் செய்து திருவருள் பெற்ருர்கள்.

'அருணையை நினைக்க முத்தி' என்பது ஆன்ருேர்களின் அமுத மொழி. ஆறு ஆதாரங்களில் மணிபூரகத்தலம்; பஞ்சபூதத்தலங் களில் தேயு (நெருப்பு)த்தலம். நிலநூல் (Geology) இம்மலையை 'நெருப்பினுல் வந்த குன்று' (Igneous Rock) என்று குறிப்பிடுகிறது. மலையுச்சி கடல் மட்டத்திலிருந்து 2668 அடி உயரமுள்ளது. எம்பெருமானது முடியை நான்முகனும், அடியைத் திருமாலும் தேடி நாடிச் சென்று காணுமல், அறிவும் செல்வமும் ஆண்டவனைக் கண்டுவிடமாட்டா என்ற கருத்தைக் காட்டிய தலம். நடுநாட்டுத் தேவாரத் தலங்களில் ஒன்று.

மலை அடிவாரத்தில் மிகப்பெரிய ஆலயம். அடியார்களை வா! வா! என்றழைக்கும் மிகப்பெரிய கோபுரங்கள் நான்கு

புறங்களிலும். கிழக்கு ராஜகோபுரம் 11 நிலைகளுடன் 212 அடி உயரம் உடையது. மலையை வலம் வரலாம். வலம் வரும் வழியில் ''அணி அண்ணாமலை'' என்னும் கோயில் உள்ளது. அதற்கு அருகில் மாணிக்கவாசகருக்குத் தனிக் கோயில் அமைந்துள்ளது. இங்கிருந்து தான் மாணிக்கவாசகர் இயற்கையின் இனிய அழகு தோய்ந்த நிலையில் 'திருவெம்பாவை' என்னும் ஒப்பற்ற பாமாலையை அருளிய தாகக் கூறுகிறார்கள்.

ஆதியும் அந்தமும் இல்லா அருட்பெருஞ்சோதியாம் இறைவன் இங்கே கார்த்திகை தீபத்தின்போது மலையுச்சியில் ஜோதிவடிவாய்க் காட்சியளித்து உலகை உய்விக்கின்றார். தீபதரிசனத்தின்போது ''அரகர என்பது கடலின் முழக்கிய தருணை வளம்பதியே'' என்னும் அருணாசலப் புராணவாக்கின் உண்மையைக் காணலாம். கார்த்திகை தீபத்தின் சிறப்பைச் சங்ககால இலக்கியங்களும் சிறப்பாகச் சொல்லுகின்றன;

'' நலமிகு கார்த்திகை நாட்டவரிட்ட தலைநாள்
விளக்கு''.................... (கார்நாற்பது)

'' மதிநிறைந்து அறுமீன் சேரும் அகல்இருள்
நடுநாள் மறுகுவிளக்கு உறுத்து மாலை
தூக்கிய பழவிறல் மூதூர் பலருடன் துவன்றிய
விழவு''.................. (அகநானூறு)

'' குன்றத்து உச்சிச்சுடர்'' (சீவகசிந்தாமணி)

இத்தல இறைவனின் திருநாமங்கள்: திருவண்ணாமலை ஆண்டார், திருவண்ணாமலை மகாதேவர், திருவண்ணாமலை ஆழ்வார், அண்ணா நாட்டுஉடையவர், திருவண்ணாமலை உடையார், அபிநவ புஜங்கராஜர், பரிமள வசந்தராயர், புழுகணி இறைவர் அருணாசலேச்வரர். அம்பிகையின் திருநாமங்கள்: உண்ணாமுலையம்மை, அபீதகுஜநாயகி, திருக்காம கோட்டமுடைய தம்பிராட்டியார், உலகுடைய பெருமான் நம்பிராட்டியார் என்பன.

மகாசிவராத்திரியின் தோற்றுவாய் கொண்டதும், தேவிக்கு இடப்பாகம் அளித்ததும் இத்தலத்தின் தனிச்சிறப்புக்களாகும். சர்வசித்தி விநாயகர், பாதாளலிங்கேசுவரர், கல்யாணசுந்தரேசுவரர், காலபைரவர், வேணுகோபாலர் முதலிய பிற சன்னிதிகள் உள்ளன.

இக்கோயிலில் அமைந்துள்ள இரண்டு முக்கிய முருகன் சந்நிதிகள் மிகச் சிறப்பு வாய்ந்தவை. இரண்டாம் பிரபுட தேவராயன் (கி. பி. 1423—1446) என்ற அரசனுக்காக அருணகிரியார் முருகனை அழைக்க "உலகினில் அனைவர்கள் புகழ்வுற அருணையில் ஒருநொடி தனில் வந்தருளிய மயில்" வீரரான கம்பத்திளையனார் சந்நிதி ஒன்று. இது கோயிலில் நுழைந்தவுடன் தென்புறத்தில் உள்ளது. வடபுறத்தில் உள்ள சந்நிதி கோபுரத்திளையனாரது. இவரே அருணகிரியாரை ஆட்கொண்டு ஞானோபதேசம் அளித்தவர். அருணகிரியாரின் திருவுருவம் அமைந்துள்ள இச்சந்நிதியில் 'திருஎழுகூற்றிருக்கை' தேர்வடிவில் சலவைக்கல்லில் அமைக்கப்பெற்றுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. அருணைமுருகனை அருணகிரியார் 79 திருப்புகழ்ப் பாக்களால் போற்றுகிறார்.

ஆண்டில் எல்லா மாதங்களிலும் திருவிழாக்கள் நடைபெறும் இத்தலத்தில் மிகவும் சிறப்பான திருவிழாக்கள்—கார்த்திகை தீபத் திருவிழா, மாணிக்கவாசகர் விழா, ஆகஸ்டு 15ஆந் தேதி அருணகிரிநாதர் விழா, கார்த்திகை சோமவாரம் 1008 சங்காபிஷேகம் முதலியன குறிப்பிடத்தக்கவை.

முதல் பராந்தகன் (கி. பி. 907—958) காலம்முதல் சதாசிவ ராயர் காலம் (கி. பி. 1548—1565) வரையில் பொறிக்கப் பெற்றுள்ள கல்வெட்டுக்கள் 125 உள்ளன. நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு மிகவும் உகந்த இத்தலத்தில் அவர்களது திருப்பணிகள் மிகஅதிகம்.

"நினைத்துத் தொழுவார் பாவந் தீர்க்கும் நிமலர் உறைகோயில்"

உண்ணுமலை உமையாளொடும் உடன் ஆகிய ஒருவன்
பெண் ஆகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண் ஆர்ந்தன அருவித்திரள் மழலைம்முழ வதிரும்
அண்ணுமலை தொழுவார் வினைவழுவா வண்ணம் அறுமே

விளவார்கனி படநூறிய கடல் வண்ணனும் வேதக்
கிளர்தாமரை மலர்மேலுறை கேடில்புக ழோனும்
அளவாவணம் அழலாகிய அண்ணுமலை அண்ணல்
தளராமுலை முறுவல்உமை தலைவன் அடிசரணே.

—திருஞானசம்பந்தர்

தேடிச் சென்று திருந்தடி யேத்துமின்
நாடி வந்தவர் நம்மையும் ஆட்கொள்வர்
ஆடிப் பாடி அண் ணுமலை கைதொழ
ஓடிப் போம்நம துள்ள வினைகளே.

—அப்பர்

அண்ணு மலையான் அடிக்கமலம் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகை வீறற்ருற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணுகி ஆணுய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணுகி மண்ணுகி இத்தனையும் வேருகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்ருன் கழல்பாடிப்
பெண்ணே! இப்பூம்புனல் பாய்ந்தாடேலோர் எம்பாவாய்.

—மாணிக்கவாசகர்

இரவு பகல் பலகாலும் இயலிசை முத்தமிழ்க் கூறித்
திரமதனைத் தெளிவாகத் திருவருளைத் தருவாயே
பரகருணைப் பெருவாழ்வே பரசிவதத் துவஞானு
அரனருள் சற்புதல்வோனே அருணகிரிப் பெருமாளே.

—அருணகிரிநாதர்

ஆதி நெடுமால் அயன்காண அன்றுபரஞ்
சோதிச் செழுஞ்சுடராய்த் தோன்றுமலை—வேதம்
முழங்குமலை சிந்திப்பார் முன்னின்று முத்தி
வழங்குமலை அண்ணுமலை

—குருநமசிவாயர்

தில்லையைக் காணக் காசியில் இறக்கச்
சிறக்கும் ஆரூர் தனிற் பிறக்க
எல்லையில் அருண கிரிதனை நினைக்க எய்தலாம் முத்தி

திருச்சிற்றம்பலம்.

# அருள்மிகு அருணாசலேச்வரர்
# திருக்கோயில், திருவண்ணாமலை

## நித்திய பூஜா காலங்களும் கட்டண விவரங்களும்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1) | உஷத் கால கட்டளை | காலை | மணி | 5.30 | ... | ரூ. 600/- |
| 2) | கால சந்தி | ,, | ,, | 8 00 | ... | ரூ. 400/- |
| 3) | உச்சிக்காலம் | பகல் | ,, | 11.30 | ... | ரூ. 400/- |
| 4) | சாயரக்ஷை | மாலை | ,, | 6.00 | ... | ரூ. 1100/- |
| 5) | இரண்டாங்காலம் | இரவு | ,, | 7.30 | ... | ரூ. 200/- |
| 6) | அர்த்த ஜாமம் | ,, | ,, | 9.00 | ... | ரூ. 200/- |

## கார்த்திகை தீப தரிசன பிரம்மோத்ஸவம்

இவ்விழா கார்த்திகை மாதம் உத்தராட நட்சத்திரத்தில் தொடங்கப் பெற்று பத்தாவது நாளாகிய திருக்கார்த்திகை தினத்தன்று மஹா தீப தரிசனமும் பின்னர், தெப்பத் திருவிழாவும் கிரிப் பிரதட்சிணமும் நடைபெறும்.

## தீப தரிசனம்

வருடந் தோறும் இங்கு நடைபெற்று வரும் திருக்கார்த்திகை தீபப் பெருவிழாவின் பத்தாம் நாளாகிய தீப தரிசன தினத்தன்று, உதயாத் பூர்வ காலத்தில் பரணி தீபமும், பிரதோஷ காலத்தில் அர்த்த நாரீச்வர மூர்த்தி எழுந்தருளிக் காட்சி கொடுத்து, அவ் வேளையில் மலையின் உச்சியில் ஜோதிஸ்வரூபம் காட்டலும் அதே சமயத்தில் ஆலயத்துள் பஞ்சமூர்த்திகளுக்குத் தீபாராதனைகளைச் செய்தலும் வழக்கமாக நடைபெற்று வருகின்றன.

| திருநாள் | முக்கிய வாகனங்கள், விவரங்கள் |
|---|---|
| முதல் நாள் | மூஷிகம், மயில், அதிகாரநந்தி: அன்னம், சின்ன ரிஷபம் |
| 2-வது ,, | வெள்ளி இந்திர விமானங்கள் முதலியன |
| 3-வது ,, | சிம்மம், வெள்ளி அன்னம் முதலியன |
| 4-வது ,, | வெள்ளிகற்பக விருக்ஷம், வெள்ளிக்காமதேனு, இதர வெள்ளி வாகனங்கள் |
| 5-வது ,, | வெள்ளி மூஷிகம், வெள்ளீ மயில், வெள்ளிப் பெரிய ரிஷபம் ஆகியன. |
| 6-வது ,, | காலே, அறுபத்து மூவர் திருவீதி எழுந்தருளல், இரவு வெள்ளி ரதம், வெள்ளி இந்திர விமானம் ஆகியன. |
| 7-வது ,, | பஞ்ச மூர்த்திகள் திருத்தேர் |
| 8-வது ,, | மாலே, தங்கவண்ண மேரு, பிக்ஷாண்டவர் உத்ஸவம், இரவு, பஞ்சமூர்த்திகள், குதிரை வாகனம் ஆகியன. |
| 9-வது ,, | கைலாச வாகனம், காமதேனு வாகனம் ஆகியன. |
| 10-வது ,, | உதயாத்பூர்வம், 4 மணிக்குப் பரணி தீபம், பகல் பிரம தீர்த்தம் — தீர்த்தவாரி. மாலே, 6 மணிக்கு பஞ்ச மூர்த்திகள் தங்கவண்ண விமானங்களில் எழுந்தருளி, ஜ்யோதிஸ்வரூப மஹா தீபதரிசனம். இரவு, தங்க வண்ண ரிஷபம் முதலியன. |
| 11-வது ,, | ஐயன் குளம் என்னும் இந்திர தீர்த்தத்தில் தெப்பத் திருவிழா |
| 12-வது ,, | ஸ்ரீ அபீதகுசாம்பாள் சமேத ஸ்ரீ அருணசலேச்வரர் கிரிப் பிரதஞ்சணம். |
| 13-வது ,, | சண்டிகேசுவரர் உத்ஸவம் |

# வேண்டுகோள்

ஈடு இணையற்ற பெருமை வாய்ந்த இந்த ஆலயத்தில் குட முழுக்கு நடந்து ஐந்து ஆண்டுகளாகின்றன. இவ்வாலயத்தின் திருக்கோபுரங்கள் இரண்டில் பழுது பார்க்கும் பணியும் மற்றும் இத்திருக்கோயிலுடன் இணைந்த அருள்மிகு துர்க்கையம்மன் ஆலயத் திருப்பணியும் தொடங்கப்பெற்று ஷ வேலைகளை விரைவில் செய்து முடிக்க ஆலய அறங்காவலர்கள் ஏற்பாடுகள் செய்து வருகின்றனர். குறைந்தது பத்து லட்சம் ரூபாய் செலவில் இவை களைச் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. ஆலயத்தின் குறைந்த வருமானத்திலிருந்து இந்த பெருந்தொகைகளைச் செலவிடுவதென்பது இயலாத காரியம். எனவே பக்த கோடிகள் பெருந்தொகைகளை உவந்தளித்தல் வேண்டும். நாட்டில் நிகழும் பல்வேறு காரியங் களுக்குப் பொதுமக்கள் ஆயிரக்கணக்கில் காணிக்கை வழங்கும் காலமிது. கோயில் திருப்பணி எத்துணைச் சிறப்பு வாய்ந்தது, எத்துணைப் பயனுடையது, என்பதை விளக்கத் தேவையில்லை. அறநெறியினின்றும் வழுவாமல் மக்களை நிலை நிறுத்தவும், ஆன் மீகத்தை வளர்க்கவும் ஆலயங்களைப்போல் சாலச் சிறந்த சாதனம் வேறில்லை என்பது யாவரும் அறிந்த உண்மை. நம் முன் நிற்கும் இப்புனிதப்பணி இனிது நிறைவேற பக்தர்கள் தங்கள் காணிக்கை களைப் பணிவிடை, வங்கி பண உண்டியல் அல்லது வங்கி காசோலை மூலமாக வழங்கி ஆலயத்தின் வளர்ச்சிப் பணிகளுக்கு உதவிப் பயனடையுமாறு வேண்டுகிறோம்.

நாட்டுக்கோட்டை நகரத்தார் மிகமிகப் போற்றி வழிபடும் இத் திருவண்ணமலை ஆலயம் அவர்களுடைய வள்ளன்மையால் பெரிதும் வளம் பெற்றுள்ளது. இவ்வாலயத்தின் விலை மதிக்க முடியாத எண்ணற்ற ஆபரணங்களும் வியப்பூட்டும் வண்ணம் அமைந்துள்ள பற்பல வாகனங்களும் இதற்குச் சான்று.

எனவே வழக்கம்போல் தனவணிகப் பெருமக்கள் பெருந் தொகைகளை அளித்து அண்ணமலையான் அருளைப்பெற வேண்டு கின்றோம். இதைக் கண்ணுறும் பொதுமக்கள் யாவரும் தம்மால் இயன்ற அளவு இந் நற்பணிக்குக் காணிக்கை வழங்கி இறையருளுக் குப் பாத்திரமாகும்படி கேட்டுக் கொள்கின்றோம்.

E. பிச்சையா, B. A.
செயல் அலுவலர்

எஸ், கண்ணன்
அறங்காவலர் குழுத்தலைவர்

என், சி. அருணசலம், சி. கிருஷ்ணமூர்த்தி,
எம். எஸ். கோவிந்தராஜன், சி, வேடியப்பன்
அறங்காவலர்கள்



அண்ணமலை எம் அண்ண போற்றி
கண்ணர் அமுதக் கழலே போற்றி